Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 51 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 15 2023




## யூலை 05 2023

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

NEW LOCATION

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS

Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com

MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
Tow Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.

We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.

Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb with colour glossy cover
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 /Sq. Ft (c$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me: Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு
அழையுங்கள்:
437.345.4203

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை, எந்தப்புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.**







## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் ஜெரி




லெப்.கேணல் ஜெரி

ஜெரியை தெரிந்த யாரிடமாவது போய்க்கேளுங்கள். ஒரு நேர்த்தியான, அழகான படைய சீருடை தரித்த உருவத்தையே எல்லோருக்கும் சொல்வார்கள். அது அவனுக்கே தனித்துவமானது. அவனது வாழ்க்கை முறையே சற்று வித்தியாசமானது. எல்லா மனிதர்களும் அப்படி வாழமுடியாது. அதனால் அவனின் இயல்பு எல்லோருக்கும் பிடித்தமானதாகவும் இருக்காது. ஆனாலும் அவனின் இயல்பை எல்லோரும் பெற்றுவிட முடியாது. அந்த மனிதனின் சுவடுகளைத்தான் இந்தக் குறிப்புக்கள் சொல்லி நிற்கின்றன.

ஜெரியை வீட்டில் அப்பன் என்றுதான் அழைப்பார்கள். ஆனாலும் சின்ன வயதிலேயே அவனின் செயற்பாடுகள் குழந்தைத்தனமானதாக இருக்கவில்லை. எப்போதும் ஆழ்ந்த சிந்தனையிலேயே இருப்பான். அவன் சும்மா இருப்பதில்லை. எதையாவது எடுத்துவைத்து ஆய்வு செய்துகொண்டிருப்பான். 1985ம் ஆண்டு அப்போது அவனுக்கு பதினாறு வயதுதான் ஆகியிருந்தது. நாட்டில் அப்போது சிங்கள படைகளால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் அவன் இதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்னால் ஏன் போராட முடியாது? என்ற கேள்வி அவனுள் எழுந்தது. ஒரு நாள் அவன் இயக்க முகாமொன்றிற்கு சென்று விட்டான். தானும் போராடப்போவதாகச் சொன்னான். ஆனால் அங்கே நின்ற போராளிகள் ஏற்பதாக இல்லை. இருபத்தி ஒரு நாட்கள் அவர்களுடன் நின்று தானும் போராடப் போவதாகக் கேட்டும், வயது போதாததால் சோகத்தோடு வீடு திரும்பினான்.

தான் எப்படியும் போராட வேண்டும் என்ற அவனின் எண்ணம் கொஞ்ச நாட்கள் கழித்து நிறைவேறியது. அவனுக்கு மனதில் மகிழ்ச்சி. தானும் போராடலாம் என்ற உத்வேகம் அவனுள் உருவாகியது. யாழ். சாவகச்சேரியில் நடைபெற்ற “சாவா - 01” பயிற்சி முகாமில் தொடக்கப் பயிற்சிகளை அவன் பெற்றுக் கொண்டான். பயிற்சிகள் முடிந்ததும். யாழ். மாவட்ட படையணியில் இருந்து செயற்பட்டுவந்தான்.

இந்த நாட்களில் தான் இந்தியப் படைகள் எங்களது தேசமெங்கும் ஆக்கிரமித்துக் கொள்கிறது. இந்திய படைகளிற்கும் போராளிகளுக்கும் இடையேயான சண்டை மூண்டது. சண்டைகள் பரவலாக நடைபெற்றன. ஜெரியும் இந்த சண்டைகளை எதிர்கொண்டான். இந்தச் சண்டையின் ஒரு கட்டத்தில் விடுதலைப்புலிகளின் தலைமைத் தளம் யாழ்ப்பாணத்திலிருந்து மணலாற்றுக் காட்டுக்கு இடம் மாறுகின்றது.

உலகத்தின் நான்காவது வல்லரசு நாடு எங்களது போராட்டத்தை நசுக்க முற்பட்டபோது அதை முறியடிக்கத் தலைவன் வகுத்த திட்டத்தில் முதன்மையாய் இருந்தது மணலாற்றுக் காடு. அந்தக் காட்டில் தலைவருடன் முகாமிட்டிருந்த போராளிகளுக்குள் ஜெரியும் இருந்தான். ஆந்த வாழ்க்கை கடினமானதாக இருந்தாலும் போராளிகள் எல்லோரும் மகிழ்வாக ஏற்றுக் கொண்டார்கள். காட்டில் எந்த வசதிகளுமே இருக்கவில்லை. எல்லாமே தேடவேண்டும். எல்லாவற்றையும் புதிதாகவே உருவாக்கவேண்டும்.



தலைவர் திட்டங்களை வகுத்து ஒவ்வொன்றாகச் செயற்படுத்தினார். அடிப்படை வசதிகள் எல்லாவற்றையும் உருவாக்க வேண்டும். எல்லா வளங்களையும் வெளியில் இருந்தே கொண்டு வரவேண்டும். ஆனால் அந்த மணலாற்றுக் காட்டைச் சுற்றி இந்திய படைகள் முற்றுகையிட்டுக் கொள்கிறது. வெளியில் இருந்து எதைக் கொண்டுவருவதானாலும் இந்திய படைகளின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு கொண்டு வரவேண்டும். சில வேளைகளில் சண்டையிட்டுத்தான் பொருட்களைக் கொண்டு வரவேண்டும்.

இந்தக் கடினமான பணி ஜெரிக்கும் இருந்தது. நீண்டதூரம் பொருட்களைக் காவி வரவேண்டும். இந்தப் பொருள்காவும் பணியை “கம்பாலா” என்றுதான் போராளிகள் அழைப்பார்கள். ஒரு தடியில் பொருட்களைத் தொங்கவிட்டு, இருவர் தோள்களில் வைத்தபடி கொண்டுவர வேண்டும். கம்பாலா அடித்தால்தான் எல்லோருக்கும் உணவு கிடைக்கும். அதுவும் போதிய அளவு இருக்காது.

ஊடல் சோர்வாக இருந்தாலும் கம்பாலா அடித்தே ஆகவேண்டும். போராளிகள் சில வேளைகளில் உடற்களைப்பில் இருந்து விடுவார்கள். ஆனால், ஜெரி எப்போதுமே மற்றவர்களை உறசாகப்படுத்துவான். “புறகென்ன நாங்கள் தானே தூக்க வேணும் வாங்கோ போவம்” என்றபடி அவன் புறப்பட்டு விடுவான். சலிப்பு என்பது அவனிடம் இருந்ததில்லை. எந்த கடினங்களையும் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் தன்மை அவனிடமிருந்தது.

காட்டில் எந்தவேளையும் இந்தியப் படைகளை எதிர்பார்த்தபடியே இருக்க வேண்டும். ஒவ்வொரு போராளியும் நீண்ட நேரம் காவற் கடமை புரிய வேண்டும். எஞ்சிய நேரங்களில் சமையல் ஏனைய வேலைகள் என அவர்கள் எப்போதுமே இயங்கிக் கொண்டே இருக்க வேண்டிய நிலை. ஓய்வு என்பதும், உறக்கமென்பதும் மிகக்குறைவே. ஆனாலும் எல்லோரும் இதை ஏற்றுக்கொண்டார்கள். ஜெரியும் இதைச் சாதாரணமாகவே ஏற்றுக்கொண்டான். குளிப்பதற்கு போதியளவு தண்ணி இருக்காது. கடும் உழைப்பால் உடல் அசதியாக இருக்கும் ஆனாலும் ஜெரி எப்போதும் அழகாகச் சீருடை தரித்து முகச்சவரம் செய்து இராணுவச் சப்பாத்து அணிந்து ஒரு அழகான தோற்றத்தில் காட்சி அளிப்பான். இந்த விடயத்தில் அவனை யாரும் விஞ்சிவிட முடியாது.

அங்கு விடியும் ஒவ்வொரு பொழுதுகளிலும் சண்டையை எதிர்பார்க்க முடியும். இப்படி நடந்த பல சண்டைகளில் ஜெரியும் பங்குபற்றினான். சுண்டை என்றால் ஒரு G3 ரக துப்பாக்கியுடன் ஜெரியை காணமுடியும். இந்திய படை தலைவரையும் எமது போராளிகளையும் அழித்துவிட மணலாற்றுக் காட்டில் பல படை நடவடிக்கைகளைப் பெயர் சூட்டி நடாத்தியது. இந்த நடவடிக்கைகளை முறியடிக்கும் சண்டையில் ஜெரியும் பங்குபற்றினான். பல நடவடிக்கைகள் தோல்வியடைந்து இறுதியாக “செக்மேற்” நடவடிக்கை இந்திய படை கட்டளை அதிகாரிகளில் ஒருவரான கேணல் பக்ஸி தலைமையில் நடைபெற்றது. இந்த நடவடிக்கை மூலம் தலைவரை எப்படியும் அழித்துவிடுவது தான் அவர்களின் திட்டம். ஆனால், இறுதியில் விடுதலைப் புலிகளிடம் கடும் அடிவாங்கியது இந்தியபடை. கேணல் பக்ஸி கொல்லப்பட்டார். இந்திய படை ஒட்டமெடுத்தது. இந்த உச்சமான சண்டைகளிலெல்லாம் ஜெரி பங்குபற்றி இருந்தான்.

மணலாற்றுக் காட்டில் இருந்தபடி ஒரு வல்லரசு நாட்டினை சமர்க்களத்தில் வீழ்த்திய பெருமையுடன் மீண்டும் போராளிகள் பல இடங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஜெரி



மணலாற்றுக் கானக வாழ்வின்போது
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுடன்
ஏனைய போராளிகளும், லெப்.கேணல் ஜெரி அவர்களும்.

மணலாற்றில் இருந்து வந்ததும் இம்ரான் பாண்டியன் படையணியிலேயே நீண்ட காலம் பணிபுரிந்தான். இந்தப் படையணியில் இருக்கும்போது பல அனுபவங்கள் அவனுக்கு கிடைத்தன.

இம்ரான் பாண்டியன் படையணியின் வெளி நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பாக நின்று செயற்பட்டான். ஜெரியின் செயற்பாட்டில் நேர்த்தியிருக்கும். அவனிடம் பொறுப்பாக கொடுத்துவிட்டால் அவன் எப்படியும் செய்து முடிப்பான். வேலை என்று புறப்பட்டால் காலநேரம் பார்க்காமற் செயற்படுவான்.

வேலைகளை மக்களைக் கொண்டு செய்யும்போது அங்கு வேலை செய்பவர்களை வெறும் வேலையாட்களாக மட்டுமே பார்க்காது அவர்களின் வாழ்க்கை முறை அவர்களின் குடும்பப் பின்னணி என்பவற்றையும் ஆராய்ந்து அவர்களுக்கு நல் வழி காட்டுவான். பல வேலையாட்கள் தாங்கள் கடினப்பட்டு உழைக் கும் பணத்தை மது அருந்தி வீணே அழிப்பதை கண்ணுற்ற ஜெரி அவர்களுக்குப் புத்திமதி கூறி அவர்கள் திருந்தி நடக்கும் வரை அவர்களை வழிநடத்துவான். அவர்களின் உழைப்பால் கிடைக்கும் வருமானத்தை அவர்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று வழங்குவான். ஜெரியின் இந்தச் செயற்பாட்டால் பல குடும்பப் பெண்கள் ஜெரியை மெச்சினார்கள்.



அது ஆனையிறவில் புலிகள் சமர்புரிந்த காலம். 1997ம் ஆண்டு காலப்பகுதி விடுதலைப்புலிகளால் ஆனையிறவை நோக்கி பெரும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் அவ னுக்கிருந்த பணி சமையற்கூடம். களத்தில் நிற்கும் போராளி களுக்கு அவர்கள் நிற்கும் இடங்களுக்கு கொண்டு சென்று உணவு வழங்கவேண்டும். போர்ச் சூழலுக்குள்ளேயே சமையலாளர்களை வைத்து உணவு சமைக்க வேண்டும். இந்த சூழலுக்குள் படையினரின் எறிகணை வீச்சு, வான் தாக்குதலுக்குள்ளால் சமையற் பொருட்கள் மரக்கறிகள், மீன், இறைச்சி போன்றவற்றைக் கொண்டு வரவேண்டும். இவை தாமதமானாலும் உரிய நேரத்தில் உணவு வழங்க வேண்டும். சண்டைச் சூழலில் இது மிகவும் கடினமான பணி. இதற்காக ஜெரி கடுமையாக உழைத்தான். ஒவ்வொரு நாளும் அவன் வேலை முடிந்து ஓய்விற்குவர பின்னிரவு ஒரு மணியைக் கடந்துவிடும். ஆனாலும் காலையில் எழுந்து தனது வாகனத்தைத் தானே கழுவி துப்பரவு செய்துவிட்டு அன்றைய நாள் வேலைகளுக்குப் புறப்பட்டுவிடுவான். தன்னால் இயன்றவரைக்கும் உடற்சோர்வு பார்க்காது உழைத்தான். ஜெரியின் இந்த உழைப்பால் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உணவு கிடைத்தது. இந்த ஆனையிறவில் தான் ஒரு சண்டையில் காயமடைந்த போராளி ஒருவனைத் தூக்குவதற்காக எதிரி சுட்டுக் கொண்டிருக்கும்போதே ஜெரி அவனை நோக்கி ஓடினான். ஜெரி அவனை அண்மித்தபோது எதிரியின் ரவை ஒன்று பட்டு அவனின் மோதிர விரல் பறந்தது. ஆனாலும், அந்த காயத்துடனேயே போராளியை அவன் தூக்கி வந்தான். நினைத்ததைச் சாதிக்கும் மனத்திடம் அவனிமிருந்தது.

ஜெரி எப்போதும் ஏனைய போராளிகளுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பான். தனக்கு வசதிகள் கிடைத்தால் கூட அதை அனுபவிப்பதைவிடவும் ஏனைய போராளிகளுக்கு கிடைக்கும் வசதிகளையே தானும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவன். அவன் விடுமுறையில் வீடு செல்வது கூட மிகக் குறைவு. அப்படி அருப்புத்துருப்பாக வீடு சென்றாலும் அங்கு வசதியாக பொழுதைக் கழிக்க அவன் விரும்புவதில்லை. படுப்பதற்கு பாயும் தலையணையும் கொடுத்தால் அதற்கும் கதை சொல்வான். களத்தில் நிற்போருக்கு உதெல்லாம் கிடைக்கவா போகிறது என்று விட்டு தானும் வெறும் நிலத்திலேயே படுத்துத் தூங்கிவிடுவான். நல்ல உணவு கொடுத்தாலும் இப்படித்தான் சொல்லுவான்.

1993ல் பூநகரி படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையின் போது ஜெரியும் ஒரு அணியினை வழிநடத்திச் சென்றான். இந்தச் சண்டையில் ஒரு இறுக்கமான சூழ்நிலையில் எதிரியின் எதிர்ப்பை முறியடிக்க முடியாதிருந்த பகுதியில் ஜெரி தனது அணியுடன் சென்று எதிரியுடன் சமரிட்டு அந்தப் பகுதியைப் பிடிப்பதற்கு காரணமாயிருந்தான்.

சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்றபின் 1995ல் யாழ். குடாநாட்டினைக் கைப்பற்றுவதற்காக சிறிலங்கா படை பல தாக்குதல்களை நடாத்தியது. இடிமுழக்கம், சூரியகதிர் என நடந்த தொடர் தாக்குதல்களிலும் ஜெரி பங்கேற்றான். இந்த நடவடிக்கைகளில் ஜெரி அடுத்தடுத்து இரு தடவைகள் காயமடைந்தான். காயங்களை அவன் பெரிதாக பொருட்படுத்திக் களத்திலிருந்து அகன்று விடுவதில்லை. ஜெரி ஒரு சிறந்த வேவுவீரன். அவனின் வேவுப்பணி சூரியகதிர் நடவடிக்கைக் காலப்பகுதியில் தொடங்கியது. ஒரு வேவுவீரனுக்குரிய சிறப்பியல்புகள் அவனிடமிருந்தன.

1995ம் ஆண்டு காலப்பகுதியில் சிறிது காலம் யாழ் தென் மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாக இருந்த ஜெரி 1996ம் ஆண்டு வன்னியில் இருந்து திருகோணமலை சென்ற தாக் குதல் அணியில் ஒருவனாகச் சென்றான். கேணல் சொர்ணம் அவர்களின் தலைமையில் இந்த அணி சென்றதும் அங்கு படை முகாம்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றன. திருகோணமலைச் சூழல் ஜெரிக்கு முன்னைய மணலாற்றுச் சண் டைகளை நினைவுபடுத்தின. அங்கும் எல்லா வளங்களையும் வெளியிலிருந்தே கொண்டு வரவேண்டும். உணவுகள், சண்டைக்கான வெடிபொருட்கள் என எல்லாப் பொருட்களையும் பொருள் வந்து சேரும் இடத்திலிருந்து கம்பாலா மூலம் இருப் பிடம் கொண்டு செல்லவேண்டும். கொஞ்சநாள் சண்டை என்றால் கொஞ்சநாள் பொருட்கள் சேகரிக்க கம்பாலா அடிக்க வேண்டும். இவ்வாறு பல நெருக்கடிகளை எதிர் நோக்கினாலும் அங்கு பலதாக்குதல்கள் வெற்றிகரமாக, நடந்தேறின. மொறவேவ காவல்துறை நிலையத் தாக்குதல், பன்குளம் சண்டை, புல்மோட்டை மினிமுகாம் தாக்கியழிப்பு, என அங்கு நடந்த பல தாக்குதல்களில் ஜெரி தனது அணியுடன் பங்குபற்றினான். ஒவ் வொரு தாக்குதலிற்கு முன்பும் தாக்கவிருக்கும் முகாமினை வேவுபார்க்க வேண்டும். வேவுப்பணி ஜெரிக்கு பிடித்தமான பணி. அவன் வேவுப்பணியிலும் ஈடுபட்டான். மொறவேவ காவல்துறை நிலையத் தாக்குதலின்போது. சண்டையின் தொடக்கத்தில் பாதைகள் உடையவில்லை. களச்சூழல் மாறும் நிலையிருந்தது. ஜெரி சென்ற பகுதியும் நிலமை அவ்வாறே இருந்தது. ஆனால் ஜெரி அந்தச் சூழலுக்கு ஏற்றவாறு திட்டங்களைப்போட்டுத் தான் சென்ற பாதையை உடைத்து திறந்து பின் பகுதியால் உள்நுழைந்தான். அன்றைய தாக்குதல் வெற்றிக்கு ஜெரியின் திறமையான செயற்பாடு அதிக துணையாய் இருந்தது. எந்தப் பதட்டமான சூழ்நிலையிலும் தான் பதட்டமடையாமல் உறுதியாக நிதானமாக நின்றபடி கட்டளைகளை வழங்கி அணியை வழிநடத்தும் திறன் அவனிடமிருந்தது.

1997ம் ஆண்டின் நடுப்பகுதிவரை திருகோணமலை மாவட்டத்தில் செயற்பட்ட அவன் மீண்டும் வன்னி திரும்பினான். வன்னியில் அவனுக்கு விரும்பமான பணி காத்திருந்தது. சிறப்பு

வேவுப்பிரிவில் ஜெரி இணைக்கப்பட்டான். இந்தக் காலப் பகுதியில் தான் சிறீலங்கா படை ஜெயசிக்குறு என்ற பெயரில் பாரிய நடவடிக்கையைத் தொடங்கி வன்னியில் பல கிரா மங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. தொடர்ச்சியாகச் சண் டைகள் நடந்துகொண்டிருந்தன. ஜெரிக்கும் நிறையப்பணி காத்திருந்தன.

ஒரு வேவு வீரனின் வாழ்க்கை எப்போதுமே கடினமானது. எதிரியின் முகாமுக்குள் ஊடுருவி அவன் மூச்சுப்படும் இடத்தில் நின்றபடி வேவுபார்த்துத் திரும்புவது என்பது இலேசான வேலையல்ல. புறப்படும் நேரத்திலிருந்து மீண்டும் திரும்பும் வரையும் எந்த நொடிப்பொழுதிலும் சாவு நிகழலாம்.

பலமாக போடப்பட்டிருக்கும் எதிரியின் கம்பிவேலிகளை நெருங்கி காவலரணில் விழித்தபடியிருக்கும் சிப்பாய்கள் கண்டு விடாதபடி தடைகளை வெட்டி எதிரிக்கு ஊடாகவே ஊடுருவி சில நாட்கள் எதிரிக்குத் தெரியாமல் அவனுக்கு அருகிலேயே தங்கி யிருந்து வேவுத் தகவல்களைச் சேகரித்து மீள்வது என்பது சாதாரண வேலையல்ல. இந்த வாழ்க்கை மிகக்கடினமானது. ஆனாலும் இந்த கடினமான வாழ்க்கை ஜெரிக்குப் பிடித் திருந்தது.

ஜெரி போராட்ட இலட்சியத்தில் ஊறி வளர்ந்தவன். அவன் மன தில் போராட்ட இலட்சியம் பற்றியதும் தனது கடமையை செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் எப்போதும் ஓடிக் கொண்டேயிருக்கும். தனக்கென தானே வரையறைகளைப் போட்டு அவற்றை நேர்த்தியாகக் கடைப்பிடிப்பவன். எதையும் யாருடனும் நேருக்கு நேரே கதைக்கும் இயல்புடையவன். தன்னைப்போல் மற்றவர்களும் இந்தப் போராட்டத்திற்காக உழைக்கவேண்டும் என்ற எண்ணமுடையவன். இதனால் தான் இவனின் செயற்பாடு சிலருக்கு பிடிப்பதில்லை. உண்மை யில் ஒரு படை வீரன் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இந்த முன்மாதிரியான அவனின் இயல்பின் காரணமாக சிறீ லங்கா படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நின்று செயற்படும் அணியை வழிநடத்துவதற்காக ஜெரி தெரிவு செய்யப்பட்டான். ஏனெனில் எத்தகைய நெருக்கடிகள் ஏற்படினும் ஜெரி பதட்ட மடையாது நிதானமாக முடிவெடுத்துச் செயற்படுவான் என்ற நம்பிக்கை உருவாகியிருந்தது.

1997ல் ஒன்பதாம் மாதத்தில் இறுதி வாரத்தில் ஜெரியின் தலைமையிலான வேவு அணியொன்று படையினர் ஜெயசிக் குறு மூலம் ஆக்கிரமித்த பகுதிக்குள் ஊடுருவுகிறது. படை யினரின் இடத்தில் நின்றபடி எதிரியின் இருப்பிடங்களை, நகர் வுகளை வேவுபார்த்து எதிரிக்குத் தொல்லை கொடுக்கும் தாக் குதல்களை மேற்கொள்வதே இவ் அணியின் நோக்கமாகும். இந்தப் பணி இலகுவான பணியல்ல. தாக்குதலுக்காக பயன் படுத்தும் வெடிபொருட்களையும், கொஞ்சம் உணவுப் பொருட் களையும் தோளில் சுமந்தபடியே எந்த நேரமும் நகர வேண் டும். ஒவ்வொரு நாளும் நீண்டதூரம் நடக்கவேண்டும் அந்த உடற்களைப்பிற்கேற்றதான உணவும் கிடைக்காது. தங் களிடம் இருக்கும் உலருணவைக் கொஞ்சம் உண்டுவிட்டு கொஞ்சத் தண்ணீரைப் பருகிவிட்டு பொழுதை வேவு பார்ப்பதில் களிக்க வேண்டும்.


காட்டு நடவடிக்கை ஒன்றின் போது லெப்.கேணல் ஜெரி



படையினரின் நடுவில் நின்றபடி நிம்மதியாகத் தூங்க முடியாது. அதற்கான இடமும் கிடைக்காது. இந்த கடினங்களையெல்லாம் தாங்கியபடி ஜெரியின் அணி, செயற்பாட்டைத் தொடர்ந்தது எதிரிக்குள் இருந்தபடி தொல்லை கொடுக்கும் தாக்குதல்கள் தொடங்கின. வடகாட்டுப் புளியங்குளத்தில் ரோந்தில் வந்த படையினர் மீது தாக்குதல், கண்டிவீதியில் புளியங்குளம் நோக் கிச் சென்ற படையினரின் கொள்கலன் மீது கிளைமோர்த் தாக் குதல், சேமமடுவிலிருந்து இளமருதங்குளம் நோக்கி வந்த படையினரின் சொகுசு பேரூந்து மீது கிளைமோர்த் தாக்குதல், சின்னப் பூவரசங்குளத்திலிருந்து ஆனந்தர் புளியங்குளம் நோக்கிச் சென்ற படையினரின் வண்டி மீது தாக்குதல், நைனா மடுவிலிருந்து குறிசுட்டகுளம் நோக்கி வந்த படையினரின் உழவூர்தி மீது தாக்குதல் என பல தாக்குதல்கள் ஜெரியின் அணியால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் பல சிறீலங்கா படையினர் கொல்லப்பட்டதுடன் பல படைச் சொத் திழப்பையும் ஜெயசிக்குறுப்படை சந்தித்தது. இவற்றிற்கு மேலாக படைக்கட்டுப்பாட்டுக்குள் மேற்கொண்ட இத்தகைய தாக்குதல்களால் படையினர் எப்போதும் அச்சத்துடன் காணப் படும் நிலை ஏற்பட்டதுடன் அவர்களின் நகர்வுகளில் முடக்கம் ஏற்பட்டது. இது படைகளிற்கு பெரும் தலையிடியாக அமைந்தது.

இவ்வாறு திறமையாகச் செயற்பட்ட ஜெரிக்கு இன்னுமொரு பணி காத்திருந்தது. அது வவுனியா ஜோசப் முகாம் அண்டிய பகுதியில் பறப்பில் ஈடுபடும் சிறீலங்கா உலங்கு வானூர்தியைத் தாக்கி அழிப்பதற்கான வேவு நடவடிக்கை. ஜெரியின் வேவு நடவடிக்கையில் எல்லோருக்கும் நம்பிக்கையிருந்தது. ஜெரி கொண்டு செல்லும் அணி எப்போதும் பாதுகாப்பாகத் திரும்பும். சண்டைகள் ஏற்பட்டாலும் குறைந்த இழப்புடன் அணியைக் காப்பாற்றி வேவுத்தரவுகளைப் பெற்றுவருவான் என்ற நம்பிக் கையிருந்தது. ஏனெனில் ஜெரி ஒவ்வொரு நகர்விற்கும் அவதானமுள்ளவன். கடுமையான விழிப்புடன் சூழலை அவதானித்து முன்னேறும் திறன் படைத்தவன். எந்த இக்கட் டிலும் பதட்டமடையாமல் அணியை சிதறவிடாமல் முடிவெடுத் துச் செயற்படக்கூடியவன். எந்த நகர்விலும் அலட்சியப் போக்கால் அணி எதிரியிடம் சிக்கிவிடாது பாதுகாப்பவன்.

**அது வவுனியா ஜோசப் முகாம் அண்டிய பகுதியில் பறப்பில் ஈடுபடும் சிறிலங்கா உலங்கு வானூர்தியைத் தாக்கி அழிப்பதற்கான வேவு நடவடிக்கை. ஜெரியின் வேவு நடவடிக்கையில் எல்லோருக்கும் நம்பிக்கை யிருந்தது. ஜெரி கொண்டு செல்லும் அணி எப்போதும் பாதுகாப்பாகத் திரும்பும். சண்டைகள் ஏற்பட்டாலும் குறைந்த இழப்புடன் அணியைக் காப்பாற்றி வேவுத்தரவுகளைப் பெற்றுவருவான் என்ற நம்பிக்கையிருந்தது. ஏனெனில் ஜெரி ஒவ்வொரு நகர்விற்கும் அவதான முள்ளவன். கடுமையான விழிப்புடன் சூழலை அவதானித்து முன்னேறும் திறன் படைத்தவன். எந்த இக்கட்டிலும் பதட்டமடையாமல் அணியை சிதறவிடாமல் முடிவெடுத்துச் செயற்படக்கூடியவன். எந்த நகர்விலும் அலட்சியப்போக்கால் அணி எதிரியிடம் சிக்கிவிடாது பாதுகாப்பவன்.**

இந்த முன் மாதிரிகைக்காகத்தான் அவனிடம் இந்தப்பணி கொடுக்கப்பட்டது. படைக்காப்பரண்களை ஊடுருவி அணி வேவுத்தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டு எதிரியின் தளங்களை மிகவும் அண்மையாகச் சென்று பார்த்து தாக் குதலை மேற்கொள்வதற்கான முதற்கட்ட தகவல்களைத் திரட் டியபடி அணி தளம் திரும்பியது. அந்தத் தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டன. மீண்டும் ஜெரியின் வேவு அணி உள்நுழை கின்றது. தாக்குதலுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அணி மீண்டும் தளம் திரும்ப முனைகிறது. எதிரியின் ஒவ்வொரு பகுதிகளாகக் கடந்து அணி எதிரியின் இறுதி காப்பரண் வரிசையை அண்மிக்கிறது.

எதிரி நிறையத் தடைகளைப் போட்டுவைத்திருந்தான். இந்தத் தடைகளுக்குள்ளால் தனது போராளிகளை கவனமாக வெளி யேற்றியபடி தானும் தடையைக் கடந்தான். அப்போதுதான் அது நிகழ்ந்தது. ஜெரி கீழே விழுந்தான். நிலமட்டத்தோடு எதிரியால் பாய்ச்சப்பட்டிருந்த மின் கம்பியில் அவன் சிக்கிவிட்டான். நொடிப் பொழுதில் அவன் உயிர் பிரிந்தது. என்ன நடந்தது என்று ஊகிப் பதற்குள் அவன் வீரச்சாவடைந்துவிட்டான். ஒவ்வொரு அசை விலும் ஒவ்வொரு போராளியையும் கவனமாக வழி நடத் துபவன். இன்று அவனுக்கு ஏன்தான் இப்படி நடந்து என்பதை அந்த இரவுப்பொழுதில் போராளிகளால் உணர முடியவில்லை. அவன் வித்துடலைச் சுமந்தபடி அவர்கள் தளம் திரும் பினார்கள்.

அன்றைய நாளில் உயிர்பிரிந்தாலும் அவன் சேகரித்த வேவுத் தகவல்கள் பத்திரமாக இருந்தன. அவன் சேகரித்த வேவுத் தகவல்களின் சுவடுகள் அவனுடன் கூடச்சென்ற வேவுப் போராளிகளும் விடுதலைப் புலிகளின் வானூர்தி எதிர்ப்புப் போராளிகளும் சென்று 26.06.1998ல் அவன் நினைவாகவே எம்.ஐ.24 ரக உலங்கு வானூர்தி ஒன்றை சுட்டு வீழ்த்தினர்.

“ஜெரி நல்லொழுக்கமும் இயக்க கட்டுப்பாடுகளை மதித்து நடக் கும் பண்புகொண்டவன் நீண்டகால சண்டை அனுபவமும், சிறந்த வேவு அனுபவமும் உடையவன். எந்த வேலை யினையும் தானாகவே முடிவெடுத்துச் செய்யக்கூடியவன். சண் டைகள் திட்டத்திற்கமைய இல்லாவிட்டாலும் நிலைமைக்கேற்ப முடிவெடுத்துச் செயற்படக்கூடியவன். ஜெரி எங்களுடன் இருந் திருந்தால் இன்னும் நிறையச் செய்திருப்பான்” என்று அவனுக்கு இறுதியாகப் பொறுப்பாகவிருந்த கேணல் ஜெயம் அவர்கள் ஜெரியின் நினைவுகளைப் பகிரும்போது குறிப் பிட்டார்.

இந்த தேசவிடிவிற்கான இலட்சியப் போரில் மடியும் ஒவ்வொரு உயிர்களினதும் விலைகளின் பரிசாய் எங்கள் தாயகம் எங்கள் கைகளில் ஒரு பொழுதில் வந்துசேரும்.

ஆக்கம்: புரட்சிமாறன்

மூலம்: விடுதலைப்புலிகள் (கார்த்திகை 2005)




# யாழ். பொது நூலக எரிப்பு நினைவேந்தல்!

யூன, 2023

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் , யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் வியாழக்கிழமை, இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா அவர்களுக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், பழைமையான ஏடுகள் என்பவை பெரும்பான்மையின வன்முறை கும்பலால் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

குறித்த நூலகமே தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




# தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் மீது கொலை முயற்சி!

யூன் 02, 2023

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது கொலை முயற்சி முன்னெடுக்கப்பட்ட போதும் அவர் பாதுகாப்பாக இருப்பதாக கட்சி பிரமுகர் சட்டத்தரணி காண்டீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் விளையாட்டுக் கழக உறுப்பினர்களை சந்திப்பதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சென்று அங்கு விளையாட்டுக்கழக உறுப்பினர்களை சந்தித்துக் கொண்டிருந்த வேளை அங்கு சந்தேகத்திற்க்கு இடமான ஒருவர் அங்கு நடமாடிக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.





அவ்வேளை அதனை அவதானித்த நாடாளுமன்ற உறுப்பினரின் பகுப்பாய்வு அதிகாரி விசாரித்த போது தன்னை ஒரு புலனாய்வு அதிகாரி என அந்நபர் குறிப்பிட்டுள்ளார். அவ்வேளை பகுப்பாய்வு அதிகாரி புலனாய்வு அதிகாரியிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியுள்ளார்

அவ்வேளை அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புலனாய்வு அதிகாரியிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரிய வேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீது தாக்குதல் நடத்தி துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி தப்பிச் சென்றுள்ளார்.

அதேவேளை அங்கு அவருடன் வருகைத்திருந்த மற்றொருவர் பிடிக்கப்பட்டு சிறீலங்கா காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.





# யாழில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி!

யூன் 02, 2023

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி சங்கானையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

சங்கானை பிரதேச கலாசார மண்டபத்தில் ஆரம்பமான நடைபவனி வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நிறைவுற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரேமினி, வேர்ள்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# “என் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி” நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்!

யூன் 03, 2023



மருதங்கேணியில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் நடத்திய சந்திப்பிற்கு துப்பாக்கியுடன் வந்த நபர்கள் குறித்தும் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முழுமையான தகவல்களை வெளியிட்டுள்ளார்

அவர் தெரிவித்துள்ளதாவது,

பகல் மூன்று மணியளவில் நானும் எங்கள் கட்சியின் உறுப்பினர்களும் மருதங்கேணி விளையாட்டு மைதானத்திற்கு சென்றிருந்தோம், விளையாட்டுக்கழக உறுப்பினர்களுடன் சந்திப்பை மேற்கொள்வதற்காக அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க சென்றிருந்தோம்.

அந்த சந்திப்பு ஒரு மரத்திற்கு கீழே இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து நாங்கள் சந்திப்பை மேற்கொண்டிருந்த இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு எங்களிற்கு சந்தேகத்தை கொடுக்கும் விதத்தில் நடந்துகொண்டார்கள்.

என்னுடைய உத்தியோகபூர்வ ரிசேர்ச் உத்தியோகத்தருக்கு அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாக சந்தேகம் எழுந்ததால் அவர்களிற்கு அருகில் சென்று அவர்களின் அடையாளங்களை உறுதி செய்யுமாறு கேட்டிருக்கின்றார்.

அவர்கள் தாங்கள் அந்த பாடசாலையில் பரீட்சைகள் இடம்பெறுவதால் தான் வந்ததாக தெரிவித்துள்ளனர் – அவருக்கு சந்தேகம் மேலும் அதிகரித்ததை தொடர்ந்து நீங்கள் எந்த அடிப்படையில் இங்க வந்தனீங்கள் பள்ளிக்கூடம் என்றால் ஏன் வந்தனீங்கள் என பிரச்சினை பட நான் அந்த இடத்திற்கு சென்று நான் யார் என்பதை அடையாளப்படுத்தி அவர்களின் அடையாளத்தை கேட்டேன்.

அவர்கள் தாங்கள் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சிஐடி என தெரிவித்தனர் – நீங்கள் உத்தியோகபூர்வமாகத்தான் செயற்படுகின்றீர்கள் என்றால் உங்களின் உத்தியோகபூர்வ அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள் என நான் அவர்களிடம் கேட்டேன் அவர்கள் அதனை மறுத்தனர் தாங்கள் காட்டவேண்டிய தேவையில்லை நாங்கள் கேட்கவும் முடியாது என தெரிவித்தனர்.

நாங்கள் நடத்திக்கொண்டிருந்த கூட்டத்திற்கு நீங்கள் அனுமதியில்லாமல் வருகின்றீர்கள் என்றால் கட்டாயம் நீங்கள் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவேண்டும், நாங்கள் கேட்டால் நீங்கள் அதனை செய்யவேண்டும் என நான் தெரிவித்தேன்.

நீங்கள் உத்தியோகத்தை செய்யவந்திருக்கின்றீர்கள் என்றால் நீங்கள் உங்கள் அடையாளத்தை நிச்சயமாக உறுதிப்படுத்தவேண்டும் அதுதான் சட்டம் எனவும் நான் தெரிவித்தேன்.

ஆனால் அவர்கள் அதனை மறுத்து கதைக்கமுற்பட்டார்கள்.

நான் நீங்கள் செல்வதற்கு அனுமதிக்க முடியாது இது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயம் என தெரிவித்தேன், எங்களிற்கு நீங்கள் ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டுள்ளதால் நீங்கள் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என நான் தெரிவித்தேன்,

அவ்வேளை அங்கிருந்த ஒருவர் எனக்கு அடித்துவிட்டு எனது ரிசேர்ச் உத்தியோகத்தருக்கு தலைக்கவசத்தால் அடித்துவிட்டு அங்கிருந்து ஓடதொடங்கினார். என்னுடைய சாரதியும் ஏனையவர்களும் அவருக்கு பின்னால் சென்று பிடிக்க முயன்றபோதும் முடியவில்லை அவர் தப்பிவிட்டார்.

இரண்டாவது நபரை அங்கிருந்த அனைவரும் சுற்றிவளைத்தனர், நாங்கள் அவரின் அடையாள அட்டையை கேட்டவேளை அவர் அதனை காண்பிக்க மறுத்தார் தனக்கு அடையாள அட்டை உள்ளது என்பதை காண்பிக்க ஏதோ ஒன்றை கண்ணிற்கு முன்னாள் காண்பித்தாரே தவிர யார் என்பதை குறிப்பிடுவதற்கு அவர் மறுத்தார்.

அந்த இடத்தில் நான் கதைத்துக்கொண்டிருக்கும்போது மைதானத்திற்கு அங்கால ஒரு வயர் வேலி காணப்பட்டது அதற்கு அங்கால இருந்து இரண்டு நபர்கள் வேலிக்கு அருகில் வந்தனர் அவர்களில் ஒருவர் சீருடையில் காணப்பட்டார் அவரிடம் துப்பாக்கி காணப்பட்டது, மற்றையவர் பொலிஸாரின் விளையாட்டு சீருடையுடன் காணப்பட்டார்.

அவர் இவையெல்லாம் எங்கட ஆட்கள் அவர்களை இப்படி தடுத்துவைத்திருக்க முடியாது உடனடியா அவர்களை விடுங்கள் என்று சத்தம்போட்டார் நான் அப்படி விடமுடியாது நீங்கள் யார் என கேட்க அவர் தூசனத்தில் ஏச தொடங்கினார். நானும் அவரை ஏசி சட்டம் தெரியாட்டி பிரச்சினை படுத்தாத என்று சொல்லி சுற்றிவளைத்து வைத்திருந்தவருடன் கதைக்க தொடங்க அங்கிருந்த அனைவரும் கத்ததொடங்கினார்கள்.

ஏனென்றால் விளையாட்டுசீருடையில் காணப்பட்ட அவர் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து சுடுவதற்கு தயாராகும் விதத்தில் நடந்துகொண்டுள்ளார்.

# சூரிய சக்தியில் இயங்கும் இயந்திரப் படகு வல்வெட்டித்துறைக் கடலில் வெள்ளோட்டம்!

யூன் 04, 2023



சூரிய மின்னாற்றலில் (சோலார்) இயங்கும் இயந்திரபடகு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

சூரிய சக்தியிலிருந்து கிடைக்கும் சக்தியை கொண்டு, மின்சாரத்தை பெற்றுக்கொண்டு 13 குதிரைவலுக் கொண்ட அதி உச்ச வேக இயந்திரத்தினைக் கொண்டு இயங்கும் மீன்பிடிப் படகு வல்வெட்டித்துறையில் இன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணிவாசகம் என்பவரது முயற்சியால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது கடல் தொழிலாளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருட்களின் தேவை இல்லாமல் வெறுமனே சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு இயங்க வைக்கின்ற மோட்டார் இயந்திரம் மீன்பிடி தேவைகளுக்கு மிகவும் பயனுள்ள விடயமாக எதிர்காலத்தில் அமையும்.

எதிர்காலத்தில் கடல் தொழிலாளிகளின் தேவைகள் இந்த இயந்திரங்களினால் பூர்த்தி செய்யப்படுமாயின், பாரிய எரிபொருள் பிரச்சனைகளில் இருந்து அவர்களை மீள வைக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர்.





# காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் நம்பிக்கை வைக்கப்போவதில்லை!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

யூன் 04, 2023

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், தாம் ஒருபோதும் அதில் நம்பிக்கை வைக்கப்போவதில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் அறிவித் துள்ளது.

மேலும், சர்வதேசத்தின் தலையீடின்றி மேற்கொள்ளப் படும் எந்தவொரு விசாரணைப்பொறிமுறையையும் தாம் ஏற்கப்போவதில்லை என்றும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை.

தமது சங்கத்தைச் சேர்ந்த 75 சதவீதமானோர் இந்த அலுவலகத்திடம் முறைப்பாட்டை வழங்கவில்லை.

மேலும் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி வறுமை யில் உள்ள தாய்மார்களை காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட அரசதரப்புக்கள் பயன்படுத்திக் கொள்கின்றன.

ஆகவே வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப் படுத்த தேவையான உதவிகளை, சர்வதேச நாடுகளும், மனித உரிமைகள் அமைப்புக்களும், புலம்பெயர் தமிழர் களும் வழங்க முன்வரவேண்டும்.” என்றும் தெரிவித் துள்ளார்



# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளருக்கு அச்சுறுத்தல்!

யூன் 04, 2023

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு செயற்பட்டாளர் சற்குணதேவியின் வீட்டிற்கு சென்ற இனந்தெரியாதவர்கள் அவரை அச்சுறுத்தியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியின் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளர் ஜெ.சற்குண தேவி (அருள்மதி) வீட்டிற்கு சற்று முன்னர் 22.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தாம் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதுடன் நீர் விரைவில் கைது செய்யப்படுவீர் என்று எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளனர் என அவர் தெரிவித் துள்ளார்




# பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால் வட, கிழக்கு மக்களின் நிலை குறித்து சிந்தியுங்கள்!

### தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன்

யூன் 04, 2023

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே மிகமோசமாக நடத்தப்படும் பட்சத்தில், வட - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்கள் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப்படக்கூடும் என்பதை ஒட்டுமொத்த உலகமும் புரிந்துகொள்ளவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை அரச புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றதோடு, பிறிதொரு நபர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்கு இலக்குவைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மருதங்கேணியில் பதிவானது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பொலிஸ் உள்ளடங்கலாகப் பாதுகாப்புத்தரப்பினரால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டிப் பதாகத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இவ்வாறு நடத்தப்படும் பட்சத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் சிங்களமொழி பேசும் பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப்படக்கூடும் என்பதை ஒட்டுமொத்த உலகமும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சி.வி.விக்கினேஸ் வரன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். அதுமாத்திரமன்றி குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதில் தாமதமேற்படும் பட்சத் தில், அது அவர்களை மேலும் ஊக்குவிக்கக்கூடும் என்றும்

# யாழ். பல்கலைகழகத்தில் ஈகையர் பொன். சிவகுமாரனது 49 ஆவது நினைவேந்தல்!

யூன் 05, 2023

ஈகையர் பொன். சிவகுமாரனது 49 ஆவது நினைவேந்தல் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக் கப்பட்டது.





பொன் சிவகுமாரனது உருவப்படத்திற்கு ஈகைச் சுடர் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தி யாழ் பல்கலைக்கழக மாணவர் களால் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.



# ஈகையர் பொன். சிவகுமாரனின் 49ஆவது ஆண்டு நினைவேந்தல்!

யூன் 05, 2023

ஈகையர் பொன் சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சுடரேற்றி பொன் சிவகுமாரனது சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

வணக்க நிகழ்வில் அரசியல் தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள் பொதுமக்கள் என பல்வேறு தரப்புகளும் கலந்து கொண்டனர்.





பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், கோப்பாயில் பொலிசாரின் சுற்றி வளைப்பின் போது, பொலிசாரிடம் அகப்பட்டு விட கூடாது என சைனைட் (நஞ்சு) அருந்தி 1974 யூன் 5ம் திகதி உயிரிழந்தார்.

# யாழ்ப்பாணம் புத்தூரில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யூன் 05, 2023

இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தையில் இன்றைய நாள் திங்கட்கிழமை இடம் பெற்றது.

1987 ஆம் ஆண்டு யூன் மாதம் 05ஆம் திகதி வாதரவத்தைப் பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.









# யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் வேலூர் தொழில் நுட்பப் பக்கலைகழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை!

யூன் 05, 2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கும், இந்தியாவின் வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்வி சார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இன்றைய தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளான ஸ்ரீ மனோஜ் குமார், ஸ்ரீ நாகராஜன் ராமஸ்சுவாமி மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், பொறியியல் பீடாதிபதி ஏந்திரி கே. பிரபாகரன், முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா, குடிசார் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி பி.கேதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பில், கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பாடசாலையின் (School of computer science and Engineering - SCOPE) பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ் பாபு, பேராசிரியர் பி. சுவர்ணலதா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே. என்.வி. ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதன் சர்வதேச உறவுகளுக்கான அலகின் ஊடாக சர்வதேச ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இத் தகைய கூட்டு ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒப் பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையில் ருகுண பல்கலைக்கழகம் வேல்லூர் தொழில் நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.



கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கைக்கமைய இரண்டு தரப்புகளில் இருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு போன்ற விடயங்கள் கவனஞ் செலுத்தப்படவுள்ளன.

# தியாகி பொன். சிவகுமாரனின் தியாகம் வீண்போகாது!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேஸ் தர்மலிங்கம்

யூன் 05, 2023



1970 ஆம் ஆண்டில் சிறிமாவே பண்டாரநாயக்கா ஆட்சி காலத்தில் கல்வி தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டதையடுத்து அதனை மையமாக வைத்து ஆரம்பித்த போரட்டம் காரணமாக முதற் செயற்பாட்டாளராக செயற்பட்டு முதலில் சயனைடை உட்கொண்டு வீரமரணம் அடைந்த ஈகையர் பொன் சிவகுமாரன் முக்கிய இடத்தை பிடித்தவர் என்பது வரலாறு.

எனவே தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் கட்சி காரியாலயத்தில் திங்கட்கிழமை (5) தியாகி பொன் சிவகுமாரன் 49 ஆவது நினைவேந்தல் இடம்பெற்றது.

இதில் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு அன்னாரது திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட வணக்கம் செலுத்தினர்.

இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள், இளைஞர்கள், யுவதிகள் வடகிழக்கில் சிங்கள காடையர்களால் கடத்தப்பட்டும் துன்புறுத்தல் செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் இவ்வாறு மாணவர் சமூதாயத்தை எவ்வாறு சீரழிக்கலாம் என அப்போதைய ஆட்சியாளர்கள் கல்வி தரப்படுத்தலை மேற்கொண்டபோது பொன் சிவகுமாரன் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் முதற் செயற்பாட்டாளராக செயற்பட்ட இவர் முதல் முதலில் சயனைட்டை உட்கொண்டு வீரமரணம் அடைந்து ஒவ்வொரு இளைஞர்கள் மத்தியில் தமிழ் உணர்வு புரட்சியை ஏற்படுத்தியவராக அவர் இன்று வரையும் திகழுகின்றார்.

ஒரு இனத்தினுடைய மாணவர்களுக்கு எதிராக இடம் பெறும் அடக்கு முறைக்கு எதிராக மாணவர்களின் எழுச்சியினால் எமது இனத்துக்கான விடுதலை பயணம் நடைபெற்றுவந்தது.

கல்வியை வைத்து நடைபெற்ற இந்தபோரிலே சிவகுமாரன் முக்கிய இடத்தை பிடித்தவர் என்பது வரலாறு என்பதுடன் இந்த தியாகி சிவகுமாரனை அடிப்படையாக வைத்துக் கொண்டே இதுவரைக்கும் தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்திய அத்தனை இளைஞர்களும் அத்தனை போராட்ட இயக்கங்களும் உருவெடுக்க உந்துதலாக இருந்தது.

அவர் இறக்கும் போது தமிழ் இனத்துக்காக மீண்டும் பிறப்பு எடுத்து விடுதலையை பெற்றுக் கொள்வேன் என்றார் அந்தடிப்படையில் எத்தனையோ இளைஞர் யுவதிகள் ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களின் இனப் பிரச்சனையை உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் தமிழ் மக்களுக்கு இன்றுவரை விடுதலை கிடைக்கவில்லை. ஆனால் விதைக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு மாவீரர்களின் தியாகங்கள் விதையாக இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என்பதுடன் எந்த அரசியல் நோக்கத்துக்காக எமது இனம் போராடியதோ அந்த அரசியல் பணியை தொடர்ந்து செய்வதற்காக பல்வேறுபட்டவகையில் இந்த போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றதுடன் அந்த வரலாற்றின் அடிப்படையில் அந்த பணியை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம் என்றார்.

# தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் மாணவர் சக்தியின் எழுச்சி அளப்பரியது!

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னால் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

யூன் 05, 2023



எழுச்சியாக உருப்பெற்ற பொன் சிவகுமாரனின் பயணம் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய போராட்டப்பாதையில் அத்திபாரமாக அமைகின்றது. இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உரும்பிராயில் அமைந்துள்ள பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் முன்னர் இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் மீள பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள பொன் சிவகுமாரனின் அஞ்சலி செலுத்திய பின் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவகுமாரன் அவர்களது தியாகம் எமது விடுதலைப்போராட்டப் பாதையில் முக்கியமானது. தமிழ் மாண



வர்களுக்கு அரசினால் இழைக்கப்பட்ட தரப்படுத்தல் அநீதி மற்றும் ஏயை ஒடுக்குமுறைகள் மற்றும் தேசத்துரோகங்களுக்கு எதிராக மாணவர் சக்தியாக துணிந்து போராடியவர்.

பொன் சிவகுமாரனின் தியாகம் என்பது தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுதியுடனான போராட்டமாகும். அவருக்கான அஞ்சலி என்பது உறுதியான தமிழ்த் தேசிய பயணப்பாதையுடனேயே அமைய வேண்டும். சிவகுமாரனின் விடுதலைப் பயணத்தில் அவர் காட்டிக்கொடுப்புக்களுக்கும் தேசத்துரோகங்களுக்கும் எதிராகப் போராடியுள்ளார். மேலும் காலத்திற்குக் காலம் தமிழ் மாணவர்களின் எழுச்சி என்பது எமது போராட்டத்தில் திடகாத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளது.

சிவகுமாரன் அவர்கள் என்ன என்ன இலட்சியத்தினை கொண்டு தன் இன்னுயிரை ஆகுதியாக்கினாரோ அவரது இலட்சியத்திற்காகவும் அபிலாசைகளுக்காகவும் நாம் திடமாகப் பயணிக்கவேண்டியவர்களாகவுள்ளோம். எம் போன்றோருக்கு அவரது தியாகமும் இலட்சியமும் எப்போதும் சுவடாக அமைகின்றது.

தடைகள் இருந்த சமயத்திலும் பல்வேறு இடர்பாடுகளைத் தாண்டியும் நாம் இங்கே அஞ்சலி செலுத்தி வந்துள்ளோம். அண்ணன் சிவகுமாரன் அவர்களுடைய சிலைகள் கூட பல்வேறு தடவைகள் உடைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட உடைக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்துவைக்கப்பட்ட சிலை மண்ணுக்குள் புதையுண்டு காணப்பட்ட நிலையில் அதனை நான் தவிசாளராக பெறுப்பேற்ற உடன் மீள குறித்த வளாகத்திற்குள்பிரதிஸ்டை செய்திருந்தேன்.

அவ்வாறு பிரதிஸ்டை செய்யப்பட்ட இடத்திலேயே தற்போது அஞ்சலி செய்துள்ளேன். வரலாற்றை நாம் ஆவணப்படுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னால் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# சற்குணதேவிக்கு விளக்கமறியல்!

யூன் 05, 2023

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணித் தலைவி சற்குணதேவி ஜெகதீஸ்வரனை, எதிர்வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாது,

வடமராட்சி கிழக்கு தளையடி பொதுளையாட்டரங்கில் 03.06.2023 அன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்ட நிகழ்வு ஒன்றில் தம்மை உறுதிப்படுத்தாத நபர்கள் புகைப்படம் எடுத்தபோது அவர்கள் யார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது ஆய்வு உத்தியோகத்தர் ஆகியோர் வினவினர்.

அவர்கள் தங்களுடைய அடையாளங்களை நிரூபிக்க தவறிய வேளையில் அவரை அடையாளத்தை நிரூபித்து விட்டு செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்கப்பட்டபோது அவர் மீது தாக்குதல் நடத்தி தப்பிச்சென்றுவிட்டார்.

இந்நிலையில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்றக் குற்றச்சாட்டை முன்வைத்து மருதங்கேணி பொலிஸாரால் சற்குணதேவி ஜெகதீஸ்வரன் திங்கட்கிழமை (05) காலை செய்யப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அப்போது நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட 10க்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குறித்த நபருக்கு பிணை வழங்க வேண்டாம் என்று நீதிமன்றத்திடம் கோரிநின்றனர்.

அக்கோரிக்கையை ஆராய்ந்த நீதிமன்றம் எதிர்வரும்



7ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது

# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறீலங்கா பொலிசாரால் கைது!

யூன் 07, 2023

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.






கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் மருதங்கேணியில் பொலிசாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

# கஜேந்திரகுமாரின் கைதைக் கண்டித்து கறுப்புத் துணி கட்டி கவனயீர்ப்பு போராட்டம்!

யூன் 07, 2023

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதை கண்டித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக வாயில் கறுப்பு துணி கட்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது

குறித்த போராட்டம் இன்று (07) பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரை பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த சமயமே அவரது கட்சி ஆதரவாளர்கள் செயற்பாட்டாளர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.





# கஜேந்திரகுமாருக்கு நேர்ந்த கதியே நாளை ஒட்டுமொத்த தமிழ் தலைமைகளுக்கும் நேரிடும்!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

யூன் 07, 2023

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்கு நேர்ந்த கதி நாளை ஒட்டுமொத்த தமிழ் தலைமைகளுக்கும் நேரிடும்.

தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் அச்சுறுத்தப்படுவதும், கொலை செய்யப் படுவதும் இந்த நாட்டில் இயல்பானதே.

30 ஆண்டுகளாக யுத்த சூழலில் வாழ்ந்த தமிழர்களுக்கு நீதியை வழங்காவிடின் இந்த நாடு ஒருபோதும் உருப் படாது. கர்மவினை தொடரும் என பாராளுமன்ற உறுப் பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம் மருதங்கேணி பகுதியில் பொதுமக்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு, கொலை முயற் சிக்கு உள்ளாகியுள்ளார். பொது மக்களின் முயற்சியால் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தரப்பினரை விசாரிக் காமல், கைது செய்யாமல் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீது விசாரணைகள் திரும்பியுள்ளன.

தமிழ் தேசிய முன்னணியின் வடமராட்சி மகளிர் அணி தலைவி ஜெகதீஸ்வரன் சற்குண தேவி நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, இன்று வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற் பாட்டாளர் உதய சிவம் வற்றாப்பளை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் மருதங்கேணி பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பயணத் தடை விதித்துள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் அரச புலனாய்வு பிரிவினரால் கொலை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படும் போது அது குறித்து விசாரணை செய்யாமல் பாதிக்கப்பட்ட தரப்பினர் கைது செய்யப்படுவது இந்த நாட்டில் எவ்வகை யான சட்டம், ஜனநாயகம் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

இவ்வாறான தன்மையே கடந்த காலங்களிலும் இந்த மண்ணில் இடம்பெற்றது. இந்த சம்பவத்தின் உண்மை தன்மையை அரசாங்கம் இன்னும் வெளிப்படுத்த வில்லை. எமக்கு எதிரான துப்பாக்கி முனை திரும்பும் சம்பவங்களே காலம் காலமாக பதிவாகுகிறது.

தமிழரின் உரிமைக்காக தமிழ் தலைமைகள் அறவழியில் போராட்டத்தில் ஈடுபட்ட போது அரச கட்டமைப்பினர் அற வழி போராட்டத்தை வன்மையான முறையில் தாக் கினார்கள்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கம் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலி முகத் திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர் மீது தாக் குதல் நடத்தப்பட்டது, அவரது தலையில் காயமேற்படுத்தப் பட்டது. அவர் காயத்துடன் பாராளுமன்றத்துக்கு வந்து உரையாடிய போது சிங்கள அரசியல்வாதிகள் 'சண்டை என்றால் காயம் ஏற்படும்' என எள்ளி நகையாடினார்கள்.

அதேபோல் 1956 ஆம் ஆண்டு காலி முகத்திடலில் போராட்டம் இடம்பெற்ற போது திருகோணமலை மாவட் டம் கந்தளாய் பகுதியில் 150 தமிழ் விவசாயிகள் பொலிசார் பார்த்துக் கொண்டிருக்கும் போது சிங்கள காடையர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் பல இந்த நாட்டில் அரங்கேறி யுள்ளன. எதற்கும் நீதி,நியாயம் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் நிரபராதிகளாக இருந்த தமிழர்கள் மீது துப்பாக்கி முனை திருப்பப்பட்டுள்ளது.

டயஸ்போராக்களுடன் இணைந்து ஆயுத கலாசாரத்தை தூண்ட கூடாது என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி குறிப்பிடுகிறார். 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழர் தரப்பில் இருந்து துப்பாக்கி நீண்டுள்ளதா?, குண்டு வெடித்துள்ளதா?, தமிழ்ர்கள் தமக்கு நேர்ந்த அநீதிக்காக சர்வதேசத்தை நாடியுள்ளார்கள். இவ்வாறான பின்னணி யில் தமிழ் மக்கள் பிரதிநிதி மீது எவ்வாறு துப்பாக்கி முனையை திருப்ப முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தின் தந்தை சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவரை நீதி கிடைக்கவில்லை. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தேவாலயத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டவர்கள் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக உள் ளார்கள்.அரச அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஜோசப் பரராசசிங்கத்துக்கு நீதி கிடைக்கவில்லை.

அதே போல் பல தமிழ் அரசியல் தலைமைகள் பகிரங்க மாக கொல்லப்பட்டார்கள் எவருக்கும் இதுவரை நீதி



கிடைக்கவில்லை. 2011 ஆம் ஆண்டு அனுராதபுரம் பகுதியில் நான் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகி மயிரிழை யில் உயிர் தப்பினேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நேர்ந்த சம்பவம் பாரதூரமானது. இது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் எதிரானது.

அரசாங்கத்தின் பயங்கரவாதமாக இதனை கருத வேண் டும். தென்னாபிரிக்காவின் நல்லிணக்கம் பற்றி அர சாங்கம் பேசுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களை அடக்குதல் ஊடகங்களை அடக்குதல், ஜனநாயகமா தன்னை ஒரு லிபரல்வாதியாக காண்பிக்கும் ஜனாதிபதி தனது பிறிதொரு முகத்தை காண்பிக்கும் வகையில் செயற் படுகிறார். இதன் ஒரு செய்தியே தற்போது வெளிப்படுகிறது.

30 ஆண்டுகள் யுத்த சூழலில் வாழ்ந்த தமிழர்கள் நீதிக் காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். வலிந்து காணாமல் போனோரின் உறவுகள் வீதியில் உள்ளார்கள். தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் செத்து மடிகிறார்கள்.

தமிழர்களின் காணிகள் தொல்பொருள், பாதுகாப்பு படை களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. பாராளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் விவகாரத்தில் அரசாங்கம் ஒருதலை பட்சமாக செயல்படுகிறது.

குற்றஞ் செய்தவரை நீதிபதியாக நிறுத்தும் போது எவ்வாறு நீதியை வழங்க முடியும். நல்லிணக்கம் பற்றி பேசும் தகுதி இலங்கை அரச தலைவர்களுக்கு உண்டா ?

தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம். இன்று கஜேந்திரகுமாருக்கு நேர்ந்த கதி நாளை ஒட்டுமொத்த தமிழ் அரசியல்வாதிகளுக்கும் நேரிடும். எமது மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் போது தமிழ் தலைமைகள் உயிர் அச்சுறுத்தலுக்கு உள் ளாக்கப்படுவார்கள். கர்ம வினை தொடரும் நியாயமான நீதி வழங்குகள் இல்லாவிடின் இந்த நாடு அழிவதை தடுக்க முடியாது என்றார்.

# 33 வருடங்களின் பின் காங்கேசன்துறை ஜே – 233 கிராமத்தில் சில பகுதிகளில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்!

யூன் 10, 2023

ஆழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை வைரவர் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள சில பகுதிகள் 33 வருடங்களின் பின்னர் மீள கையளிக்கப்படவுள்ளது.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக J/ 233 கிராம சேவையாளர் பகுதியில் உள்ள மாங்கொல்லை வைரவர் ஆலயமும் அதனை சூழவுள்ள தனியார் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

மிக விரைவில், அவை மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.





# நீதி கிடைப்பதில் சந்தேகம் எழுந்துள்ளது!

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யூன் 08, 2023

பொலிசாரினால் தனக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக, பொலிசாரின் ஊடாகவே விசாரணைகள் இடம்பெறுவதால், இதற்கான நீதி கிடைப்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்துள்ளார்.

பொலிசாரினால் நேற்று கைது செய்யப்பட்ட விவகாரம் மற்றும் 3 ஆம் திகதி மருதங்கேனியில் இடம்பெற்ற சம் பவம் தொடர்பாக இன்று நாடாளுமன்றில் சிறப்புரையாற் றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்ற சிறப்புரிமையின் பிரகாரம், நேற்றைய தினம் நான் நாடாளுமன்றில் உரையாற்றிய பின்னர், பொலிசார் என்னை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென் றிருக்கலாம்.

ஆனால், பொலிசார் நேற்று என்னை கைது செய்வதில் தான் உறுதியாக இருந்தார்கள். இதுதொடர்பாக நான் சபா நாயகர் மற்றும் பிரதி சபாநாயகருக்கும் அறியப்படுத்தி யிருந்தேன்.

இந்த நிலையில் சில பெரும்பான்மை ஊடகங்கள், பொலிசரின் சார்பாக மட்டும் செய்திகளை வெளியிட்டுள் ளமையை நான் அவதானித்தேன். இவை தவறானது.

நான் ஒழிந்துக் கொண்டதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனது தந்தைக் கொல்லப்பட்டபோதும், வெள்ளை வான் கலாசாரம் நாட்டில் இருந்தபோதும்கூட நானும் எனது குடும்பமும் எங்கும் ஓடி ஒழிந்துக் கொள்ளவில்லை.

இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே கருதப்படுகிறது. இந்த விடயத்தில் பாரபட்சம் காண்பிக்கப் பட்டது.



பொலிசாரின் இந்த செயற்பாடு தொடர்பாக பொலிசாரே விசாரணை செய்வதால் இந்த விடயத்தில் நீதி கிடைக் குமா என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்!

யூன் 08, 2023

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் ஆரம்பித்து 2300 ஆவது நாளான இன்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பிரதான தபாலகத்திற்கு அரு காமையில் உள்ள கொட்டகையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்த போராட்டக்காரர்கள், உணவு, மருந்து, சமையல் எரிவாயு, உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட் களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனுடன், தமிழர்களின் நிலத்தில் இனப்படுகொலை நடவடிக்கைகளை துரிதப்படுத்துகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு பின்னர், இலங்கை இராணுவமும் பௌத்த பிக்குகளும் சட்டவிரோத மாக தமிழர்களிடமிருந்து நிலங்களை அபகரித்து, பௌத்த சிங்களவர்கள் வசிக்காத தமிழர்களின் தாயகம் முழுவதும் மகா சங்க சிங்கள பௌத்த சின்னங்களை கட்டியுள்ளனர்.

குறித்த கடன் பண்டைய இந்து கோவில்களை அழிக்க பண பலத்தை வழங்கியதுடன், அழிக்கப்பட்ட கோவில்கள் சிங்கள இனவாத பௌத்த சின்னங்களால் மாற்றப்பட்டன.








இந்த பௌத்த சின்னம் தமிழர்களால் வெறுக்கப்படுகிறது, ஏனெனில் இந்த சின்னம் இன அழிப்பு மற்றும் தமிழ் தாயகத் தில் தெற்கிலிருந்து சிங்களவர்களின் குடியேற்றத்தை குறிக் கிறது.

தமிழர்களின் தாயகத்தில் இலங்கை இராணுவத்தின் பிரசன்னம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனினால் மேலும் ஊக்குவிக்கப்பட்டதுடன், தமிழ் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள்களை ஊக்குவித்து, எதிர்கால தமிழ்ச் சந் ததியை அழிக்கின்றது என அவர்கள் மேலும் குறிப்பிட் டுள்ளனர்.



# முன்னாள் வடகமாகாணசபை உறுப்பினர்களான துரைராச ரவிகரன் கந்தையா சிவநேசன் மற்றும் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக பௌத்ததேரர்களால் தொடரப்பட்ட வழக்கு செப்டம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

யூன் 08, 2023

குருத்தூர் மலையில் பௌத்தவழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக பௌத்ததேரர்களால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது வியாழக்கிழமை (08) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், கடந்த 12.06. 2022 அன்றைய நாள் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்தபிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பாண்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம், முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைந்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் குருந்துர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்கமுற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொதுமக்களோடும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல் தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் தேரர்களால் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டவர்களை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலீசார் அழைப்பாணை விடுத்திருந்தனர்.

இவ்வாறு பொலீசாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைவாக கடந்த 02.09.2022அன்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்ளான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த விசாரணைகளைத் தொடர்ந்து பொலீசாரால் 20.09.2022 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் B/688/2022 என்னும் வழக்கிலக்கத்தில் குறித்த வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.



குறித்த வழக்கானது 08.06.2023இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந் நிலையில் வழக்கினை ஆராய்ந்த நீதவன் குறித்த வழக்கினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்துள்ளார்.

அத்தோடு இந்த வழக்குடன் தொடர்புடைய பாரளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும், வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் அடுத்த தவணையின்போது மன்றில் முன்னிலையாகவேண்டும் எனவும் நீதவானால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சிரேஸ்ட சட்டத்தரணிகளான கெங்காதரன், பரன்சோதி, சுதர்சன் ஆகியோர் உட்பட நீதிமன்றிற்கு வருகைந்த சட்டந்தரணிகள் அனைவரும் ரவிகரன், சிவநேசன், ஜூட்நிக்சன் ஆகியோருக்கு ஆதராவாக மன்றில் முன்னிலையாகியிருந்தமையும் குறிப்படத்தக்கது.

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது குறித்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கண்டனம்!

யூன் 08, 2023

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு
வடக்கு கிழக்கு சிறிலங்கா
ORGANIZATION OF RELATIVES OF ENFORCED DISAPPEARANCES
IN NORTH AND EAST SRI LANKA

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுசெய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டித்திருக்கும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம், தமிழ் அரசியல் கட்சிகளிடையேயும் தமிழ் மக்கள் மத்தியிலும் நிலவும் ஒற்றுமையின்மையே இதற்குக் காரணம் என்று விசனம் வெளியிட்டுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கடந்த 3 ஆம் திகதி தாக்கமுற்பட்ட சம்பவம் மற்றும் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டமையையும், அவரது சிறப்புரிமையை மீறும் வகையில் அவர் கைதுசெய்யப்பட்டமையையும் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, கடந்த 5 ஆம் திகதி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் சற்குணதேவி (அருள்மதி) மருதங்கேணியில் கைதுசெய்யப்பட்டமையையும், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தையிட்டி போராட்டத்தில்வைத்து பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டமையையும் கண்டிக்கின்றோம்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டபோது, கட்சி பேதங்களை மறந்து அதுகுறித்து அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பைக் காண்பித்திருந்தால் இந்தளவுக்குக் கைதுகள் தொடர்ந்திருக்காது. சரி, தவறு என்ற வாதங்களுக்கு அப்பால், எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருநாள் பாராளுமன்ற அமர்வைப் பகிஷ்கரித்திருந்தால், இந்த அடக்குமுறைகள் நிகழ்ந்திருக்காது.

தெற்கில் நடைபெறும் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவிக்கின்ற யாழ்ப்பாணத்தைத் தளமாகக்கொண்ட மகளிர் அமைப்புக்கள், தமிழ் தாய்மார்கள் தாக்கப்பட்டபோதும், சற்குணதேவி கைதுசெய்யப்பட்டபோதும் வாய்மூடி மௌனித்திருப்பது ஏன்?

தமிழ்மக்களிடையே நிலவும் ஒற்றுமையின்மை எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதைப் பாருங்கள். அனைத்து வேறுபாடுகளையும் மறந்து, இலங்கையின் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இன ஒற்றுமையைக் காண்பிக்கவேண்டிய தருணம் இதுவாகும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கஜேந்திரகுமாரின் கைதுக்கு ஆறு. திருமுருகன் கடும் கண்டனம்!

யூன் 07, 2023

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது தொடர்பாக அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் இன்று புதன்கிழமை (07.06.2023) மாலை அவர் கண்டன ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கே இத்தகைய இடையூறு ஏற்படுமானால் எங்கே சமாதானம் உருவாகப் போகிறது? கௌரவ ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரை அவகௌரவப்படுத்தியுள்ளமை கவலைதரும் செய்தியாகும். இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடக்கக் கூடாது.

வடக்கில் தமிழர்களின் பிரதிநிதிகளில் ஒருவராக விளங்கும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தொடர்ந்து அவமரியாதை செய்வது தமிழர்களை அவமரியாதை செய்வதற்குச் சமமானது. எனவே, இத்தகைய சம்பவம் தொடர்பாக மிகுந்த கண்டனத்தையும், எமது கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் அந்த ஊடக அறிக்கையில் கலாநிதி. ஆறு.திருமுருகன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# முல்லை புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் படுகொலையின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யூன் 10, 2023




முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 10 ஆம்திகதி இலங்கை இராணுவத்தின் விமான தாக்குதல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செல்





தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட 33 அப்பாவி பொது மக்களுடைய 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 10.06..23 உணர்வு பூர்வமாக இடம்பெற்றது

தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லை ஈசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தையான முடியாண்டி ஏற்றி வைக்க தொடர்ந்து உயிரிழந்தவர்கள் நினைவாக பொது படத்திற்கு சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டு உயிரிழந்தவர்கள் நினைவாக சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உயிரிழந்த பொதுமக்களின் உறவினர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் கரைச்சி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.



நோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு நினைவுரைகளை ஆற்றியுள்ளார்கள்.

# தமிழ் தேசிய மக்கள் முனன்ணி உறுப்பினர்கள் மூவருக்கு சிறீலங்கா காவல்துறையினால் விசாரணைக்கு அழைப்பு!

யூன் 13, 2023

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மீதான மருதங்கேணி அச்சுறுத்தல் விவகாரம் தொடர்பில் முன்னணி உறுப்பினர்கள் மூவருக்கு சிறீலங்கா காவல்துறையினால் விசாணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளீர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், மகளீர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோரை விசாரணைக்காக கிளிநொச்சி காவல் நிலையத்திற்கு வருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கொழும்பில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு கிளிநொச்சி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அதேபோன்று கைதாயிருந்த ஆதரவாளர்களான செல்வராஜா உதயசிவம், சற்குணதேவி ஜெகதீஸ்வரன் ஆகிய இருவருமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# வடக்கு கடற்தொழிலாளர்களை காப்பதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர்!

யூன் 13, 2023

வடக்கு கடற்தொழிலாளர்களை காப்பதற்கு இந்தியப் பிரதமர் மோடி ஆவணஞ் செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதுவர் ஊடாக யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழில் சங்க பிரதிநிதிகள் மகஜரொன்றை கையளித்தனர்.

யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழில் உள்ள இந்திய துணை தூதுவரை சந்தித்து செவ்வாய்க் கிழமை (13) காலை கலந்துரையாடினர்.

இதன்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளதாக கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி அ.அன்னராசா தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 15ம் திகதி இந்தியாவில் மீனவர்களுடைய மீன்பிடி தடைக்காலம் நிறைவடைகிற நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, தீவக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பான நடவடிக்கைகள் வெளிப்படையாக இடம்பெற்று வருகின்றது. இதனால் கடற்தொழிலாளர்களும் மீன் சாப்பிடும் மக்களும் பாதிக்கப்படுவர்.

டொலர் வருகிறது ஏற்றுமதி இடம்பெறுகிறது என்பதற்காக அரசாங்கம் சட்டவிரோதமான தொழிலை கனகச்சிதமாக அனுமதிக்கிறது.

கடற்தொழில் இருந்து வடக்கு கடற்தொழிலாளர்களை அந்நியப்படுத்தும் முயற்சி தற்போது இடம்பெற்று வருகின்றது. சீன கடலட்டைப் பண்ணைகளால் கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சட்டவிரோதமான தொழில் மற்றும் சீன கடலட்டைப் பண்ணை விவகாரங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியு றுத்தி ஆறுக்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்




சங்கங்களும் மூன்று கடற்தொழிலாளர் சமாசங்களும் இணைந்து குறித்த மகஜரை இந்திய துணைத்தூதர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு வழங்கினர்.

# சேருவில – வெருகல் படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யூன் 13, 2023

சேருவில - வெருகல் - ஈச்சிலம்பற்று பகுதி அகதி முகாம்களில் தஞ் சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது இடம்பெற்ற சேருவில படு கொலையின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 12 ஆம் திகதி ஈச்சிலம்பற்று பூநகர் பகுதியில் அமைக்கப் பட்ட நினைவேந்தல் மண்டபத்தில் மிகவும் உணவுபூர்வ மான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.




திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந் திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை 1986.06.12 அன்று சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம் பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படு கொலை செய்யப்பட்டதோடு மூன்றுபேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தார்கள். படு கொலை செய்யப்பட்டவர்களில் இருவர் முஸ்லீம் சகோதரர் களாவர்.

இப்படுகொலைச் சம்பவத்தில் பின்வரும் நபர்கள் படு கொலை செய்யப்பட்டிருந்தார்கள்:

1.தங்கராஜா - கிராம சேவகர் (பூமரத்தடிச்சேனை) - ஈச்சிலம்பற்று முகாம்)
2.அலிபுகான் - கிராம சேவகர் (தோப்பூர்) - பூமரத்தடிச் சேனை முகாம்
3.அயாசு முகம்மது அப்துல் லத்தீப் (பாலத்தோப்பூர்) - மீள்குடியேற்ற உத்தியோகத்தர் - பூநகர் முகாம்
4.கோணாமலை வேலாயுதம் - பூமரத்தடிச்சேனை
5.கதிர்காமத்தம்பி - விநாயகமூர்த்தி - பூமரத்தடிச்சேனை
6.தெய்வேந்திரம் நவரெட்ணம் - பூமரத்தடிச்சேனை
7.தம்பிராசா நவரெட்ணம் - பூநகர்
8.கனகசபை கனகசுந்தரம் - பூநகர்
9.கதிர்காமத்தம்பி செல்லத்தம்பி - பூநகர்
10.மூத்ததம்பி காசிப்பிள்ளை - பூநகர்
11.கதிர்காமத்தம்பி நாகராசா - பூநகர்
12.வீரபத்திரன் நடேசபிள்ளை - பூநகர்
13.முத்தையா காளிராசா - பூநகர்
14.முத்துக்குமார் வேலுப்பிள்ளை - பூநகர்
15.வேலுப்பிள்ளை சித்திரவேல் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
16.சித்திரவேல் சிவலிங்கம் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
17.வீரபத்திரன் சோமசுந்தரம் - விநாயகபுரம், ஈச்சிலம் பற்று
18.சித்திரவேல் தம்பாப்பிள்ளை - விநாயகபுரம், ஈச்சிலம் பற்று
19.நல்லையா பரமேஸ்வரன் - இலங்கைத்துறை முகத்துவாரம்
20.தாமோதரம் தர்மலிங்கம் - ஈச்சிலம்பற்று
21.புண்ணியம் மதிவதனன் - பூமரத்தடிச்சேனை

அத்துடன் 1.வீரபத்திரன் சோமசுந்தரன், 2.வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தப்பியிருந்தார்கள்













# கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

யூன் 14, 2023

சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர தினக் கொண் டாட்டத்திற்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம்-11 ஆம் திகதி யாழ். நகரில் போராட்டம் நடாத்திய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் உள்ளிட்ட 18 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன் றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு விசாரணை இன்று புதன்கிழமை (14.05.2023) காலை-10 மணியளவில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது 18 பேர் சார்பாகவும் சட்டத்தரணிகளான மகிந்தன், அமலன் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையானார்கள்.

இந்த வழக்குத் தொடர்பில் பொலிஸார் உரிய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் தவறியமையால் எதிர்வரும் அக்டோபர் மாதம்-10 ஆம் திகதி வரை வழக்கினை ஒத்தி வைத்து நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.






# ஒவ்வொரு சிகரெட்டும் சுகாதார எச்சரிக்கையுடன் வெளிவரவுள்ளது!

யூன் 02, 2023

உலகிலேயே முதன்முறையாக வெண்சுருட்டுகளில் (சிகரெட்டுகளில்) நேரடியாக எச்சரிக்கை வாசகங்களை அச்சிடும் என கனடா சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிய வெண்சுருட்டுப் பொதிகளில் உள்ள வெண்சுருட்டுகளிலும் ஒவ்வொரு எச்சரிக்கை வாசகங்கள் கொண்டிருக்கும். "சிகரெட் புற்றுநோயை உண்டாக்கும்" , "ஒவ்வொரு பஃப்பிலும் விஷம்" போன்ற சொற்றொடர்களைக் கொண்டிருக்கும்.

இந்த கட்டுப்பாடு ஆகஸ்ட் 1 முதல் நடைமுறைக்கு வரும் என்று கனடா சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

2035க்குள் கனடாவில் புகையிலை பயன்பாட்டை 5%க்கும் குறைவாகக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகும்.

ஏப்ரல் 2025க்குள், கனடாவில் உள்ள சில்லறை விற்பனையாளர்கள் வெண்சுருட்டுகள் மற்றும் சுருட்டுகளில் நேரடியாக புதிய எச்சரிக்கை லேபிள்களைக் கொண்ட புகையிலை பொருட்களை மட்டுமே கொண்டு செல்வார்கள் என்று சுகாதார நிறுவனம் எதிர்பார்க்கிறது.

டிப்பிங் பேப்பரில் லேபிள்களைக் கொண்டிருக்கும் தயாரிப்புகளில் தனிப்பட்ட சிகரெட்டுகள், சிறிய சுருட்டுகள், குழாய்கள் மற்றும் பிற புகையிலை பொருட்கள் அடங்கும் என்று கனடா சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட 75 நாள் பொது கலந்தாய்வு காலத்தை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை லேபிள்கள் ஏற்கனவே சிகரெட் தொகுப்பு அட்டைகளில் அச்சிடப்பட்டுள்ளன. பொதிகளுக்குள்ளேயே கூடுதல் எச்சரிக்கை லேபிள்களை அச்சிட்டு, புதிய வெளிப்புற எச்சரிக்கை செய்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவற்றை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக கனடா சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு அறிக்கையில், கனடாவின் மனநலம் மற்றும் போதைப் பொருள் அமைச்சர் கரோலின் பென்னட், புகையிலை பாவனையால் ஒவ்வொரு வருடமும் சுமார் 48,000 கனடியர்கள் 




உயிரிழப்பதாகக் கூறினார்.

சுகாதார எச்சரிக்கை செய்திகளுடன் தனிப்பட்ட வெண்சுருட்டுகளில் லேபிளிடும் உலகின் முதல் நாடாக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று திருமதி பென்னட் கூறினார். மாற்றத்தை தைரியமான நடவடிக்கை என்று அவர் அழைத்தார்.

# கனடாவில் குடியேற விரும்புவோருக்கு ஓர் விசேட அறிவித்தல்!

யூன் 03. 2023

கனடாவில் குடியேறுவதற்காக காத்திருப்போருக்கு அரசாங்கம் விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தொழிற்சந்தையை அடிப்படையாகக் கொண்டு குடியேறிகளுக்கு சந்தர்பம் வழங்கும் புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிமுகம் செய்ய உள்ளது.

ஐந்து துறைகளில் அனுபவம் உடையவர்களுக்கு குடியேற்ற விண்ணப்பங்களின் போது அதிக முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய குடிவரவு அமைச்சர் சீன் ப்ரேசர் இது குறித்து அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

- சுகாதார துறை
- விஞ்ஞான, தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியதுறைகள்
- தச்சு வேலை, குழாய் பொருத்துதல் மற்றும் ஒப்பந்த பணிகள் போக்குவரத்து
- விவசாயம் மற்றும் விவாசய உணவு

ஆகிய ஐந்து துறைகளில் அனுபவம் உடையவர்களின் குடியேற்ற விண்ணப்பங்களுக்கு அதிகளவ முன்னுரிமை அளிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு மொழியாற்றல் காணப்பட்டால் அதுவும் விசேட தகைமையாகக் கருத்திற் கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த பிரதான ஐந்து துறைகளைச் சேர்ந்த 82 தொழில்களுக்காக தெரிவு செய்யப்பட உள்ளதாக அமைச்சர் ப்ரேசர் அறிவித்துள்ளார்.

நாட்டில் தொழிற்சந்தையில் சில துறைகளில் ஆளணி வளப்பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.




துறைசார் சிறப்புத் தேர்ச்சியுடைய தகுதியான பணியாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் ப்ரேசர் தெரிவித்துள்ளார்.

# கனடாவிற்கு தீயணைப்புப் படையினரை அனுப்பி வைக்கும் நேச நாடுகள்!

மே 14, 2023

கனடாவின் பல்வேறு இடங்களில் நிலவும் காட்டுத் தீ சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு பிரான்ஸ் உதவிகளை வழங்கியுள்ளது.

குறிப்பாக கியூபெக் மாகாணத்தில் நிலவி வரும் காட்டுத் தீ அனர்த்தத்தை கட்டுப்படுத்துவதற்கு பிரான்ஸ் 100 தீயணைப்புப் படைவீரர்களை அனுப்பி வைக்க உள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவெல் மெக்ரோன் இந்த விடயம் தொடர்பில் டுவிட்டர் பதிவிட்டுள்ளார்.

இவ்வாறு தீயணைப்புப் படையினரை அனுப்பி வைப்பது குறித்து கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நன்றி பாராட்டியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு காணப்படுவதாகவும் இந்த உறவுகள் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு வலுப்பெற்றுள்ளது எனவும் பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கியூபெக்கில் 141 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. காட்டுத் தீ காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கனடாவில் ஒரே மாதத்தில் அதிகரித்த வேலையின்மை விகிதம்!

யூன் 09, 2023

கடந்த 9 மாதங்களில் முதல் முறையாக மே மாதத்தில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவில் கடந்த மே மாதத்தில் மட்டும் வேலையின்மை விகிதம் 5.2 சதவீதம் அதிகரித்துள்ளது. 2022 ஆகஸ்டு மாதத்திற்கு பின்னர் வேலையின்மை விகிதம் அதிகரிப்பது இதுவே முதல் முறை.



பெடரல் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கையில், மே மாதம் மட்டும் கனேடிய பொருளாதாரம் 17,000 வேலை வாய்ப்புகளை இழந்ததால் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் சிறிது மாற்றம் ஏற்பட்டது என குறிப்பிட்டுள்ளனர்.

வேலையின்மை விகிதமானது முன்பு ஐந்து சதவீதமாக தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு இருந்தது. உற்பத்தி, பயன்பாடுகள் மற்றும் பராமரிப்பு போன்ற சேவைகளில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ள போதும், குறிப்பிட்ட சில துறைகளில் வேலைவாய்ப்பு சரிவடைந்தே காணப்பட்டுள்ளது.

இருப்பினும், மே மாதத்தில் ஊதிய உயர்வு என்பது தொடர்ந்துள்ளதாகவே கூறப்படுகிறது. கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில், 5.1 சதவீதம் அதிகரித்துள்ளது.

# நாடுகடத்தலை எதிர்கொள்ளும் இந்திய மாணவர்கள் சுமூக தீர்வு உறுதி கனேடிய அமைச்சர்!

யூன் 09, 2023

போலியான கல்லூரி சேர்க்கை தொடர்பில் ஏமாற்றப்பட்ட 700 இந்திய மாணவர்கள் கனடாவில் இருந்து வெளியேற்றப்படும் சூழலில் சுமூக தீர்வு உறுதி என அமைச்சர் தெரிவித்துள்ளார்.




ஆனால் வழக்குகள் தீர்க்கப்படும் போது மாணவர்களுக்கு எதிரான நாடு கடத்தல் உத்தரவு நிறுத்தி வைக்கப்படுமா என்பது தொடர்பில் குடிவரவு அமைச்சர் Sean Fraser தெளிவு படுத்தவில்லை.

கல்லூரி சேர்க்கை தொடர்பான போலியன கடிதம் அனுப்பப்பட்ட விவகாரத்தில் ஒரு தீர்வுக்காக தாங்கள் தீவிரமாக முயன்று வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும், சர்வதேச மாணவர்கள் விவகாரத்தில் எவரேனும் ஆதாயம் பெற முயன் நிருந்தால், உண்மையில் அவர்கள் அதற்கான விலையை அளிக்க வேண்டியிருக்கும் என்றார்.

2017 மற்றும் 2018ல் மாணவர்கள் விசாவில் கனடா வந் தவர்கள் வெளியேற்றப்படும் ஆணையை எதிர்கொள்வதாக அவர்கள் சார்பான சட்டத்தரணிகள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் ஜலந்தர் பகுதியை சேர்ந்த Brijesh Mishra என்பவரே போலியான கல்லூரி சேர்க்கை கடிதங்களை தயார் செய்தவர் என்பதையும் அந்த செய்தி குறிப்பில் பதிவு செய்துள்ளனர்.

மட்டுமின்றி, அந்த மாணவர்கள் கனடாவுக்கு வந்து சேர்ந்த பின்னர், Brijesh Mishra தலைமையிலான நிறுவனம், மாணவர்களுக்கு அதிர்ச்சியளிக்கும்



வகையில் குறிப்பிட்ட கல்லூரியில் பதிவு செய்ய முடியாது என மறுத்துள்ளது.

அத்துடன் கல்லூரியை மாற்றிக்கொள்ளவும் மாணவர்களை கட்டாயப்படுத்தியுள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் ஐந்து அல்லது 6 ஆண்டுகளில் படிப்பையும் முடித்துள்ளனர். ஆனால் நிரந்தர வதிவிட அனுமதி கோரி விண்ணப்பித்த நிலையிலேயே அவர்களுக்கு தாங்கள் போலியான கல்லூரி சேர்க்கை கடிதத்தால் ஏமாற்றப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தில் சுமூக தீர்வு கண்டிப்பாக எடுக்கப்படும் என்றே அமைச்சர் Sean Fraser உறுதிபட தெரிவிக்கிறார்.

# 21ஆம் நூற்றாண்டின் மிக மோசமான நெருக்கடியை கனடா எதிர்கொள்கிறது!

## அமைச்சர் பில் பிளேயர்

யூன் 13, 202

கனடா 21ம் நூற்றாண்டின் மிக மோசமான காட்டுத்தீயை



எதிர்கொள்வதாக அமைச்சர் பில் பிளேயர் அறிவித்துள்ளார்.



கனடாவில் தற்போது, இந்த ஆண்டு மட்டும் இதுவரை காட்டுத்தீயால் 47,000 சதுர கிலோமீற்றர்கள் எரிந்து சேதமாகியுள்ளது. மட்டுமின்றி, கனடா முழுவதும் 431 இடங்களில் காட்டுத்தீ பற்றியெரிந்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஒன்று ஆல்பர்ட்டாவின் எட்ஸன் பகுதி மக்களை கடுமையாக அச்சுறுத்தி வருகிறது. 8,400 குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படும் நெருக்கடியில் உள்ளனர். பிரிட்டிஷ் கொலம்பியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் அல்லது வெளியேற்றப்படும் நெருக்கடியில் உள்ளனர்.

சுமார் 4,660 சதுர கிலோமீற்றர்கள் பற்றியெரிந்து வருகிறது. இதுவரை பதிவானதில் மாகாணத்திலேயே இரண்டாவது பெரிய காட்டுத்தீ இதுவாகும் என கூறுகின்றனர். நோவா ஸ்கோடியாவில் Shelburne மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய தீ, கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

இருப்பினும், 235 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் உள்ள பாரிங்டன் ஏரி காட்டுத்தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். கனடா முழுவதும் பல நாடுகளில் இருந்து சுமார் 5,000 தீயணைப்பு வீரர்கள் உதவிக்கு களமிறக்கப்பட்டுள்ளனர்.

வரும் நாட்களில் சிலி, கோஸ்டாரிகா, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலில் இருந்து நூற்றுக்கணக்கானோர் வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழக செய்திகள்



# மாணவி தற்கொலை; மதுவிலக்கு ஒன்றே தீர்வு !

யூன் 06, 2023

திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்தது போல் முழு மது விலக்கை அமல்படுத்தி மதுக்கடைகளை மூட வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரும், பண்ருட்டி சட்ட மன்ற உறுப்பினருமான வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது,



வேலூர் மாவட்டம், குடியாத்தம், சின்னராஜ குப்பம் பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி விஷ்ணுபிரியா, 10ம் வகுப்பில் 410 மதிப்பெண் பெற்றவர். இவர், தனது தந்தை குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டும் என கடிதம் எழுதி வைத்துவிட்டு 04.06. 2023 அன்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் அளிக்கிறது.

மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு என்று சொல்வார்கள் அப்படி சொல்லிவிட்டு தமிழ்நாடு அரசே மதுக்கடைகளை ஏற்று நடத்தி வருவது ஏற்புடையதல்ல. மதுவால் மது அருந்துவர்களுக்கு மட்டுமல்லாமல் அவரை சார்ந்திருப்பவர்களின் வாழ்க்கையும் கடுமையாக பாதிக்கப்படும் என்பது மாணவி விஷ்ணுபிரியா வின் மரணத்தின் வாயிலாக மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களும், படித்து வேலைக்குச் செல்லும் இளைஞர்களும், அலுவலகங்களில் பணிபுரியும் நடுத்தர வர்க்க உழைப்பாளிகளும் மதுவை நாடிச் சென்று தம் ஆளு மையை சீரழித்துக் கொள்வது தான் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெண்கள் குடிப்பழக்கத் திற்கு ஆளாகும் சமூகப் போக்கும் கவலை கொள்ள வைத்துள்ளது.

உலகமய நுகர்வியப் பண்பாட்டின விளைவாலும், பொருளியல் அழுத்தங்களாலும் சிதைக்கப்பட்ட குடும்ப அமைப்பு, குடும்பம் மற்றும் சுற்றத்தாருடன் விரிசலை ஏற்படுத்தி, குடும்ப உறுப் பினர்களை உதிரிகளாகக் கட்டமைத்தது. ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாகப் பேசி, ஒன்று கூடி வாழ்ந்த வாழ்க்கை முறை மாற்றி, அனைவரும் தனித்து விடப்பட்ட நிலையில், எளிமையான சிக்கல்களுக்குக் கூட, மதுவையும், அதன் உச்சமாகத் தற்கொலையையும் தீர்வாக மக்கள் நாடு கின்றனர்.

உழைக்கும் மக்களில் கணிசமானோர், தமக்குக் கிடைத்த கொஞ்ச நஞ்சக் கூலி வருவாயைக் கூட மது அருந்தி அழித்ததன் காரணமாக வந்தத் தொகை. மதுவிற்கு அடிமையாகி நுரை யீரல் அழுகி இறந்தவர்களின் குடும்பங்கள், வாழ வழியற்று நடுத்தெருவிற்கு வந்ததன் மூலம் கிடைத்த தொகையால் தான் அரசாங்கமே செயல்படுகின்றது எனச் சொல்வதற்கு உண்மை யில் நாம் வெட்கப்பட வேண்டிய தருணம் இது.

வரி என்ற பெயரில், தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசு கொள்ளை அடித்து செல்லும் பெரும் தொகையில், தமக்குரியப் பங்கைக் கேட்டாலே, அதில் மது வருமானத் தைவிட கூடுதலாக ஈட்டமுடியும். தமிழ்நாட்டின் பால் மற்றும் பால் பொருட்கள் (ஆவின் நிறுவனம்) விற் பனையை தமிழ்நாடு அரசு விரிவாக் கினால் ஆண்டுக்கு ரூபாய் 40 ஆயிரம் கோடி வருமானம் கிடைக்கும்.

எனவே, ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் இருந்து கொள்ளை யடித்துச் செல்லும் பணத்தை கேட்டுப் பெற்று, வருவாய் இழப்பில்லாமல் மதுபானக் மதுக்கடைகளை உடனடியாக மூட வேண்டும்.

குறிப்பாக, திமுக. தேர்தல் அறிக்கையில் அறிவித்தது போல்




முழு மதுவிலக்கை அமல்படுத்தி மதுக்கடைகளை மூட வேண் டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது. அப்போது தான், பல விஷ்ணுபிரியாக்களின் தற்கொலையை நாம் தடுக்க விட முடியும்.

தனது தந்தை குடிப்பழக்கத்தை நிறுத்தக் கோரி, கடிதம் எழுதி விட்டு தன்னுயிரிந்த மாணவி விஷ்ணுபிரியாவுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித் துக்கொள்வதோடு, அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக் கும், உறவினர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக்கொள் கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான கொலை முயற்சி சீமான் கடும் கண்டனம்!

யூன் 03, 2023

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மீதான படுகொலை முயற்சி இலங்கை அரசினுடைய இனவாத கோரமுகத்தின் மற்றொரு வெளிப் பாடேயாகும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான அன்புச்சகோதரர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்களைச் சுட்டுப் படுகொலை செய்வதற்கு இலங்கை புலனாய்வுத்துறையினர் முயன்றுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

சமகால அரசியல் சூழலில் ஈழத்தமிழ் மக்களுக்கு இலங்கை அரசால் இழைக்கப்படும் இனவெறிக் கொடுமைகளுக்கு எதி ராகவும் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளுக்கு ஆதர வாகவும், வலுவான குரல் கொடுத்து அரசியல் தளத்தில் போராடி வரும் சகோதரர் கஜேந்திரகுமார் மீதான இக்கொடுந்தாக்குதல் இலங்கை இனவாத அரசின் கோழைத்தனத்தையும், கோர முகத்தையுமே மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்துகிறது.

நெஞ்சில் தீரத்துடனும் நேர்மை அறத்துடனும் சமரசமின்றி தமிழீழ விடுதலைக் குரலாக இலங்கை நாடாளுமன்றத் திலேயே ஓங்கி ஒலித்தவரும் தேசியத்தலைவரால் மாமனிதர் என்று போற்றப்பட்டவருமான ஐயா குமார் பொன்னம்பலம் அவர்களைக் கடந்த 2000 ஆம் ஆண்டில் அரசக் கைக் கூலிகள் மூலம் சுட்டுப்படுகொலை செய்தது இலங்கை இன வெறி அரசு. தற்போது தந்தையைப் போலவே சமரசமற்ற அரசியல் தலைவராகத் திகழ்கின்ற அவரது மகன் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் இருப்பையும் திரைமறைவில் அழித்தொழிக்கும் இலங்கை இனவெறி அரசின் சதிச்செயலே இக்கொலைமுயற்சி நிகழ்வாகும்.

ஈழத்தில் ஆயுதமேந்திய விடுதலைப்போராட்டம் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளைக் கடந்தும் இனப்படுகொலை செய்யப் பட்ட இரண்டு இலட்சம் மக்களுக்கான நீதியைப் பன்னாட்டு நீதிமன்றத்தில் இன்னமும் பெறமுடியாமலும் இலங்கை இன வாத அரசால் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் நிலை குறித்த தகவல்களை அவர் களது குடும்பத்தினருக்கு இன்றுவரை பெற்றுத்தரமுடியாமலும் கடுந்துயரத்தோடும் காயம் சுமந்த கண்ணீரோடும் கையறு நிலையில் ஈழத்தில் தமிழினம் தவித்துவரும் நிலையிலும் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவெறி அடக்கு முறைகள் இன்னும் நின்றபாடில்லை என்பதை இக்கொடுந்தாக் குதலின் மூலமாவது பன்னாட்டுச்சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் கடும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டு தமிழ் மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் பசியும், பட்டினியுமாக வாழ வழியற்று நிற்கும் நிலையிலும் அணுவளவு உரிமையும் தமிழர்கள் பெற்றுவிடக்கூடாது என்பதில் சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் எந்த அளவுக்குத் தீவிரமாக உள்ளார்கள் என் பதை உலக வல்லாதிக்க நாடுகள் இப்போதாவது அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் எத்தனை ஆட்சி மாறினாலும் எத்தனை சிங்கள ஆட்சியாளர்கள் மாறினாலும் அவர்கள் எத்தனை நல் லெண்ண நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினாலும் அவை ஒருபோதும் தமிழர் நலனுக்கு ஒரு சிறிதும் உதவப்போவ தில்லை என்பதையும் தமிழரது உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் சிங்களர்களது இனவெறி மனப்பான்மை மாறப்போவ தில்லை என்பதையும் இலங்கை அரசுக்கு ஆதரவாக ஈழத் தமிழ் மக்களின் ஆயுதமேந்திய விடுதலை போராட்டத்தை அழித்தொழிக்கத் துணைநின்ற உலக நாடுகள் இனியாவது உணரத் தலைப்பட வேண்டும்.

தங்கள் உரிமைக்காக அறவழியில் போராடிய ஒற்றைக் காரணத்திற்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையே பட



கொலைசெய்ய முயலுமென்றால் ஈழத்தில் வாழ்கின்ற பாமர மக்கள் என்ன உரிமையைக் கோரி இலங்கை இனவெறி அர சிடம் பெற்றுவிட முடியும் என்பதை இந்தியா உட்பட உலக நாடுகள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால் தனித்தமிழீழம் மட்டுமே அம்மக்களுக்கான நிரந்த தீர்வாக இருக்க முடியும் என்பதை உணர முடியும்.

ஆகவே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான அன்புச்சகோதரர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீதான இலங்கை இன வாத அரசின் புலனாய்வுத் துறையினர் நடத்தியுள்ள கொலை முயற்சி தாக்குதலுக்கு இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்து அவருக்கு உரிய பாதுகாப்புகள் வழங்கிடவும் இலங்கை அரசினை எச்சரித்து, வலியுறுத்திட வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தனித்தமிழீழம் எனும் உண்மையான அர சியல் உரிமையைப் பெற்றிட கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ஈழ விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பு கோரும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிட வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத் துகிறேன்.

# ரூபா 650 கோடி நாள்தோறும் குடிப்பதற்காக செலவு செய்யும் நம் மக்களுக்கு எதற்கு இலவசம் சீமான் கேள்வி

யூன் 12. 2023

தமிழ் தேசிய பேரியக்கத்தின் தலைவர் மணியரசன் 75-வது பிறந்தநாள் விழா திருவெறும்பூர் பகுதியில் நேற்று காலை முதல் இரவு வரை கூத்தாப்பர் பகுதியில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நடந்தது. இந்த மண்டபத்தில் பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு மணியரசனுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் தெரி வித்தனர்.

அதன் பின்னர், திருவெறும்பூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு பேசியதாவது;

பிரபாகரனுக்கு பிறந்தநாள் கொண்டாடுவது விருப்பமில்லை. ஆனால், நாம் பிறந்தநாள் கொண்டாடுகிறோம் அப்படி கொண் டாடுவதால் நம் உணர்வுகள் இருமடங்காக ஆகிறது. மக்களுக் காக போராடுபவன் தலைவன் ஆகிறான். மக்களை போராட வைப்பவன் புரட்சியாளன் ஆகிறான். வரலாறு எந்த தலை வருக்காகவும் காத்திருப்பதில்லை. இருப்பவன் ஒருவனை தேர்வு செய்து செல்கிறது.

காவிரியில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் கவலை அடைந்த நேரத்தில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்காக விளை யாட்டு மைதானத்தில் 2.50 லட்சம் குடி தண்ணிரை வீணாக் கினார்கள். இதைக் கேட்ட என்னை சிறையில் அடைத்தனர். என் மீது 176 வழக்குகள் உள்ளது. சிறைச்சாலை நமக்காக



தான், நாம் சிறை பறவைகள், சீமானை மட்டும் யாரும் ஜெயி லுக்கு அனுப்ப முடியாது, போனால் எல்லோரும் போவோம்.

தமிழனாக பிறந்தால் மட்டும் தமிழன் இல்லை, யார் இறுதி வரை உறுதியாக உழைக்கிறானோ அவன் தான் தமிழன். ஜாதி, மதம் அடிப்படும்போது தமிழனாக இல்லாமல் இனத்திற்கு அடிவிழும் பொழுது கொதித்து எழுபவன் தான் தமிழன். ஒருவன் உயிரை இழப்பதை காட்டிலும் உரிமையை இழப்பது தேசிய மற்றும் நாட்டின் பெரிய இழப்பு ஆகும்.

தமிழ்நாடு என அரசு அலுவலக கட்டிடங்களில் தமிழில் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும், ஆனால், அங்குள்ள கோப்புகளில் தமி ழில் எழுத்துக்கள் இருக்காது. மோடி தமிழ் மொழி சிறந்தது என் பார், தமிழனை முதல்வராக்குகிறேன் என்பார், ஆனால், பாராளுமன்ற கட்டிடத்தில் ஆங்கிலத்திலும், இந்தியில், சமஸ் கிருதத்திலும் கல்வெட்டுகள் இருக்கும், தமிழ் மொழியில் இருக்காது.

நாம் அடிமையான இனம் தாய் நாட்டில் தமிழ் மொழியை படிக்க முடியாது. மற்ற மாநிலங்களில் உள்ள நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு அந்த மாநிலங்கள் 90 விழுக் காடு வைத்துக் கொள்கிறது. மற்ற மாநிலங்களுக்கு பத்து விழுக் காடு மட்டுமே இட ஒதுக்கீடு வழங்குகிறது.

ஆனால் நாம் தமிழகத்தில் 80 விழுக்காடு இட ஒதுக்கீடு கேட்கிறோம், ஆனால் உயர் நீதிமன்றம் 20 விழுக்காடு தான் ஒதுக்குகிறது. ரூ.650 கோடி வரை நாள்தோறும் குடிப்பதற்காக செலவு செய்யும் நம் மக்களுக்கு எதற்கு இலவசம், தமிழ் மொழி யின் வீழ்ச்சி தமிழர் வீழ்ச்சி, இரண்டு மொழியில் கையெழுத்து போடும் ஈன இனம் நமது இனம் மட்டும்தான்.

கலப்பட பொருள்களை வாங்க விரும்பாத நாம் தாய் மொழியில் தான் கலக்கிறோம். வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட தமிழர் களால் தற்பொழுது தமிழர்களுக்கான வரலாறு எழுதும் நேரம் வந்துவிட்டது. பிரபாகரனுக்கு நிகழ்ந்தது நமக்கும் நிகழலாம், நிகழ்கிறது. எதிரிகள் தூரத்தில் இருப்பார்கள், துரோகிகள் அருகே இருப்பார்கள், தமிழ் வரலாறு திரிக்கப்பட்டுள்ளது, தமிழ் வரலாறு இல்லை, எங்களுக்கு உயிர் என்றார்.

இந்த விழாவில் தமிழ் தேசிய பேரியக்க தலைவருக்கு செங்கோல் வழங்கியும், ஏலக்காய் மாலை அணிவித்தும், மகுடம் சூட்டியும் மகிழ்ந்தார் சீமா. இந்த நிகழ்வில் தமிழ் தேசிய பேரியக்க நிர்வாகிகள் மற்றும் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்ட பிற கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# இலங்கை செல்வதற்கு அனுமதிகோரி இந்திய பிரதமருக்கு சாந்தன் கடிதம்!

யூன் 12, 2023

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 30 ஆண் டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட சாந்தன், தாம் இலங்கைக்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சிறையில் இருந்து விடுதலையாகி தற்போது ஒரு அறையில் கைதி போல அடைக்கப்பட்டிருப்பதாகவும், தன்னுடைய சொந்த நாடான இலங்கைக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் கோரி சாந்தன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த முகாமில் இரத்த உறவுகளை மட்டுமே சந்திக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் தம்மை போன்ற வெளி நாட்டு பிரஜைகளுக்கு இந்தியாவில் எவ்வாறு இரத்த உறவுகள் இருக்க முடியும் எனவும் சாந்தன் தமது கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 7 பேரும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுப வித்த நிலையில் கடந்த ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

முதலில் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்ட நிலையில் அதனை அடுத்து, சிறையில் இருந்த நளினி, முருகன், சாந்தன், ஜெயகுமார், ரொபர்ட் பயஸ் மற்றும் ரவிச்சந்திரன் உள்ளிட் டோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் இலங்கையை சேர்ந்த, முருகன், சாந்தன், ஜெயக் குமார் மற்றும் ரோபர்ட் பயஸ் ஆகிய நால்வரும்

விடுதலை செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகியும் திருச் சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



# திருச்சி சிறப்பு முகாமில் உள்ள சாந்தனை விடுவியுங்கள் அவனுடன் சிறிது காலம் வாழவேண்டும்; சாந்தனின் தாய் மகேஸ்வரி!

யூன் 13, 202

வேலூர் சிறையிலிருந்து விடுதலையான சாந்தன், முருகன் மற்றும் புழல் சிறையிலிருந்து விடுதலையான ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த 7 பேரில் ஒருவ ரான பேரறிவாளனை கடந்த மே மாதம் உச்ச நீதிமன்றம் தனது தனிப்பட்ட அதிகாரமான, சட்டப்பிரிவு 142-ஐ பயன்படுத்தி விடுதலை செய்தது. தொடர்ந்து நவம்பர் மாதம் சாந்தன், முருகன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் உள்ளிட்ட 6 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

தொடர்ந்து வேலூர் சிறையிலிருந்து விடுதலையான சாந்தன், முருகன் மற்றும் புழல் சிறையிலிருந்து விடுதலையான ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்த வர்கள் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை வல்வெட் டித்துறையிலுள்ள சாந்தனின் தாயார் மகேஸ்வரி என்பவர், தனது மகனை சொந்த நாட் டுக்கு அனுப்பி வைக்குமாறு உருக்கத்துடன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து சாந்தனின் தாயார் மகேஸ்வரி செய்தியாளர் களிடம் தெரிவித்ததாவது எனது மகன் சாந்தன், இந்தியப் பிரதமர் மோடிக்கு தனது சொந்த நாடான இலங்கைக்குச் செல்ல அனு மதி கேட்டு கடிதம் எழுதி உள்ளார். என் பிள் ளையை திரும்ப அனுப்பித் தாருங்கள்.

கடந்த 32 ஆண்டுகளாக நான் என் பிள்ளையைப் பார்க்காமல் உள்ளேன். எனது கடைசிக் காலத்தை பிள்ளையுடன் கழிக்க வேண்டும் என்பதற்காகத் தான் எனது உயிரைப் பிடித்து வைத்திருக்கின்றேன். எனது வலது கண் பார்வை முழுவதும் போய் விட்டது. இடது கண் பார்வையும் போவதற்குள் என் பிள்ளையை நான் பார்த்து விட வேண்டும். என் பிள்ளையை நான் பார்க்காவிட்டால் இனிமேலும் நான் உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை. எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிது காலம் வாழவேண்டும். அதற்காகத் தான் நான் உயிருடன் இருக்கின்றேன்" – என்றார்.

# உலக செய்திகள்

# 45 பைகளில் மனித எச்சங்களைக் கண்டுபிடித்தனர் மெக்சிக்கோ காவல்துறையினர்!

யூன் 01, 2023







மெக்சிக்கோவில் கடந்த வாரம் காணாமல் போன 7 இளம் தொழிலாளர்களைத் தேடும் நடவடிக்கையின் போது, மனித உச்சங்களுடன் பல பைககளை காவல்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இன்று வியாழக்கிழமை குவாடலஜாராவின் மேற்கு நகரத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள மிராடோர் டெல் போஸ்க் என்ற இடத்தில் துண்டிக்கப்பட்ட உடல்களைக் கொண்ட நாற்பத்தைந்து பைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

45 பைகளில் ஆண்கள் மற்றும் பெண்களின் எச்சங்கள் இருப்பதாக முதற்கட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

அரசு வழக்கறிஞர் அலுவலகம், எச்சங்கள் காணாமல் போன ஏழு தொழிலாளர்களுடையதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை ஆனால் அவர்களைத் தேடும் பணி நடந்து வருவதாக அறிவித்தார்.

மெக்சிகோவில், குறிப்பாக குவாடலஜாரா போன்ற போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகள் நிறைந்த நகரங்களில் காணாமல் போன குற்றங்கள் பொதுவானவை. கடந்த ஆண்டு மே மாதம், உள்துறை அமைச்சகம் 100,000 க்கும் அதிகமானோர் காணாமல் போனதாக அறிவித்தது.

2006 ஆம் ஆண்டு போதைப்பொருள் மீதான போர் தொடங்கியதில் இருந்து மெக்சிகோவில் வன்முறை பரவி வருகிறது, அதன்பிறகு 350,000 க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

# 32 ஆயிரத்து 808 அடி ஆழத்துக்கு பூமியை துளையிடும் பணியில் சீனா!

யூன் 01, 2023



32 ஆயிரத்து 808 அடி ஆழத்துக்கு பூமி யைத் துளையிடும் பணியை சீனா துவக்கியுள்ளது.

கனிம வளங்கள் மற்றும் நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு உள்ளிட்டவை குறித்து அறிய சீனா இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

நாட்டின் எண்ணெய் வளம் மிக்க ஜின்ஜியாங் மாகாணத்தில் அமைந்துள்ள தாரிம் படுகையில் இதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

பூமிக்கு மேற்பரப்பில் துளையிடும் பணிகள், 10-க்கும் மேற்பட்ட பாறை அடுக்குகளை ஊடுருவிச் சென்று, பூமியின் மேலோட்டத்தில் உள்ள 145 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய கிரெட்டேசியஸ் அமைப்பை அடையும்.

தாரிம் படுகையில் உள்ள கடுமையான நிலச் சூழல் மற்றும் சிக்கலான நிலத்தடி நிலை மை காரணமாக பூமியின் மேலோட்டத்தில் ஆழமான துளை துளையிடுவது அவ்வளவு எளிதானது அல்ல.

அதேவேளை பூமியில் 20 வருட துளையிடலுக்குப் பிறகு மனிதனால் உருவாக்கப்பட்ட ஆழமான துளை, ரஷ்யாவில் உள்ள 12 ஆயிரத்து 262 மீட்டர் கோலா சூப்பர் டீப் போர்ஹோல் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# உலகம் பன்முகத் தன்மை கொண்டது

# ஒருவரின் கீழ் செயற்பட முடியாது

# பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் அழைப்பு!

யூன் 02. 2023



ஐந்து நாடுகளைக் கொண்ட பிரிக்ஸ் குழுவைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் தென்னாப்பிரிக்காவில் பேச்சு வார்த்தையில் உலக ஒழுங்கை மறுசீரமைக்க அழைப்பு விடுத்தனர். பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் தென்னாபிரிக்காவில் கலந்துகொண்டு விவாதித்தனர்.பிரிக்ஸ் குழுவில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளன.

உலகம் பன்முகத்தன்மை கொண்டது, அது மறுசீரமைக்கிறது மற்றும் பழைய வழிகள் புதிய சூழ்நிலைகளை எதிர்கொள்ள முடியாது என்று எங்கள் கூட்டம் ஒரு வலுவான செய்தியை அனுப்ப வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தொடக்கக் கருத்துரையில் கூறினார். நாங்கள் மாற்றத்தின் சின்னமாக இருக்கிறோம். அதன்படி செயல்பட வேண்டும் என்று ஜெய்சங்கர் கூறினார்.

பொருளாதார சக்தியின் செறிவு பல நாடுகளை மிகச் சிலரின் தயவில் விட்டுவிடுகிறது.

இந்த வாரம் குழுவின் உயர்மட்ட தூதர்களிடையே பேச்சுக்கள் சர்வதேச வர்த்தகத்திற்காக அமெரிக்க டாலருக்கு மாற்று நாணயங்களின் சாத்தியமான பயன்பாடு மற்றும் குழுவின் புதிய வளர்ச்சி வங்கியை வலுப்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர ஆபிரிக்க பிரதிநிதித்துவம் இல்லாததை தென்னாப்பிரிக்க வெளியுறவு அமைச்சர் நலேடி பாண்டோர் விமர்சித்த உடன், குழுவின் உறுப்பினர்கள் உலகளாவிய முடிவெடுப்பதை சீர்திருத்துவது குறித்தும் விவாதித்தனர்.

ஒரு டசனுக்கும் அதிகமான நாடுகள் பிரிக்ஸ் குழுவில் சேர ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறினார்.

பிரிக்ஸ் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளான சவுதி அரேபியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை அடங்கும்.

கேப்டவுனில் இருந்த சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சர் பைசல் பின் ஃபர்ஹானுடன் விரிவாக்கம் குறித்து விவாதிக்கப்பட்டதாக லாவ்ரோவ் கூறினார்.

சீன துணை வெளியுறவு அமைச்சர் Ma Zhouxu, குழு புதிய உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளும். எங்கள் பெரிய குடும்பத்தில் அதிக நாடுகள் சேரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று மா கூறினார்.

ஜோகன்னஸ்பெர்க்கில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் புடின் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், சர்வதேச நீதிமன்றம் புடினுக்கான கைது அழைப்பானை விடுத்துள்ள நிலையில் அவர் பங்கேற்பாரா என்ற கேள்விகளுக்கு முன்னர்

உச்சிமாநாட்டிற்கு முன்பு பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

# இந்தியாவில் தொடரூந்து விபத்து 275 மேல் பலி! 800க்கு மேற்பட்டோர் காயம்!

யூன் 02, 2023

பெங்களூர் யஷ்வந்த்புரில் இருந்து ஹவுரா நோக்கி சென்று கொண்டிருந்த அதிவிரைவு தொடரூந்து சில பெட்டிகள் ஒடிசா மாநிலம் பாலசோர் அருகே இரவு 7 மணியளவில் தடம் புரண்டன. இதில் இரண்டு பெட்டிகள் அருகில் இருந்த இணை தண்டவாளத்தின் மீது சரிந்து வீழ்ந்தது.

அப்போது மேற்கு வங்க மாநிலம் ஷாலிமார் தொடரூந்து இருந்து சென்னையை நோக்கி நேற்று பிற்பகலில் புறப்பட்ட கொரமண்டல் விரைவு தொடரூந்து எதிர்த் தடத்தில் வந்து கொண்டிருந்தது.

வேகமாக வந்த கொரமாண்டல் தொடரூந்து, தடம் புரண்ட பெட்டிகளின் மீது மோதியதில் 12 பெட்டிகள் கவிழ்ந்தன. சில பெட்டிகள் அங்கு நின்று இருந்த சரக்கு ரயில் மீதும் மோதின.



ஒரே இரவில் மற்றும் சனிக்கிழமை காலை வரை குறைந்தது 275 உடல்கள் மீட்கப்பட்டன என்று ஒடிசாவின் தீயணைப்புத் துறையின் இயக்குனர் சுதன்ஷ் சாரங்கி தெரிவித்தார். காய மடைந்த 800க்கும் மேற்பட்ட பயணிகள் பல்வேறு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பலர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர் 1981 ஆம் ஆண்டு பீகார் மாநிலத்தில் ஏற்பட்ட சூறாவளியின் போது, நெரிசல் மிகுந்த பயணிகள் தொடரூந்து தண்டவாளத்தில் இருந்து ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு, குறைந்தது 800 பேர் உயிரிழந்தமை இந்தியாவின் மிக மோசமான தொடரூந்து பேரழிவாகும்.

# கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் நியூயோர்க் நகரத்தை சூழ்ந்த புகை மண்டலம்!

யூன் 08, 2023

ஆரஞ்சு நிற புகை சூழ்ந்த  நியூயோர்க் நகரம் சில மணி நேரங்கள் ஆரஞ்சு நிற புகையால் மூடப்பட்டதால் மக்கள் குழப்பமும் பீதியும் அடைந்தனர்.



கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீயின் தாக்கத்தினால் உருவான நச்சுப் புகைகள்தான் வட அமெரிக்காவின்  நியூயோர்க் நகரில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று வானிலை ஆய்வு மையம் விளக்கிய நிலையில் மக்கள் சகஜ நிலைக்குத் திரும்பினர்.

இந்தப் புகையினால் நியூயோர்க்கில் காற்று மாசு அளவு அபாயகரமான அளவை எட்டியது, அதனால் அன்றைய நாளில் உலகளவிலான காற்றின் தரத்தின் அடிப்படையில் மிக மோசமான நகரங்களில் ஒன்றாக நியூயோர்க் அடையாளப்படுத்தப்பட்டது.

இது குறித்து  நியூயோர்க் வானிலை மையம் கூறும்போது, “வயதானவர்கள் மற்றும் சிறு குழந்தைகள், மோசமான காற்றின் தரத்தால் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதால் அவர்கள் வெளியே வருவதை குறைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறியுள்ளது.

மேலும்  நியூயோர்க் நகரம் சில நொடிகளில் ஆரஞ்சு நிறமாக மாறிய வீடியோ பதிவையும்  நியூயோர்க் வானிலை மையம் வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

பூமியின் சராசரி வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் வெள்ளம், காட்டுத் தீ, மலையின்மை, வறட்சி போன்ற தீவிர இயற்கை பேரிடர்களை உலக நாடுகள் சந்தித்து வருகின்றனர்.



காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பை உலகெங்கிலும் இலட்சக்கணக்கான வனவிலங்குகள் அவற்றின் பாதிப்பை உணர்ந்து வருகின்றன. மனிதர்களும் அதன் தீவிரவத்தை கடந்த பத்து ஆண்டுகளாக எதிர்கொண்டு வருகின்றனர். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு பூமி வெப்பமடைதலை குறைப்பதற்கான செயல்பாடுகளை விரைவாக நகர்த்த வேண்டிய சூழலில் மனித இனம் உள்ளது என்ற எச்சரிக்கையை சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர்.

# சிங்கப்பூரில் ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்கும் ஈழத் தமிழர்!

யூன் 09. 2023

சிங்கப்பூரில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் களம் இறங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் யாழ்ப்பாணம் - ஊரெழு மற்றும் உரும்பிராய்ப் பகுதியை தாய் தந்தையரின் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

இவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மக்கள் செயல் கட்சியில் இருந்து பதவி விலகல் செய்வதுடன் தனது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார்.

அதோடு அவர் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் (MAS), GIC இன் துணைத் தலைவர், பொருளாதார மேம்பாட்டு வாரியத் தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் அமைச்சர் பதவியில் அவர் ஆற்றி வரும் பிற பொறுப்புகளில் இருந்து விலகுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# கொலம்பியாவின் வனப்பகுதியில் விபத்துக்குள்ளான விமானம் ஐந்து வாரத்தின் பின் உயிருடன் மீட்கப்பட்ட நான்கு குழந்தைகள்!

யூன் 10, 2023

கொலம்பியாவில், வனப்பகுதியில் விபத்துக்குள்ளான விமானத் தில் பயணித்த நான்கு குழந்தைகள் ஐந்து வாரத் தேடலுக்குப் பின் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் மே முதலாம் திகதி, சான் ஹோஸ் நகரம் நோக்கி சென்ற சிறிய ரக பயணிகள் விமானம் எந்திரக்கோளாறால் கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் இரண்டு விமானிகளும், ஒரு பெண் பயணியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், உயிரிழந்த பெண்ணின் 13, 9 மற்றும் 4 வயதிலான குழந்தைகள், ஒரு வயதே ஆன தங்கள் தம்பியை தூக்கிக்கொண்டு வனப் பகுதியில் உதவி தேடி அலையத் தொடங்கினர்.



பழங்குடி மக்கள் மற்றும் மோப்ப நாய்கள் உதவியுடன், இரவு பகலாக வனப்பகுதியை சல்லடையிட்ட இராணுவ வீரர்கள், ஐந்து வாரத் தேடலுக்குப் பின் நான்கு குழந்தைகளையும் மீட்டுள்ளனர்.



மீட்கப்பட்ட குழந்தைகள் ஹெலிகாப்டர் மூலம் மருத்துவமனை அனுப்பிவைத்தனர். அவர்கள் நலமுடன் உள்ளதாக கொலம் பியா அதிபர் தெரிவித்துள்ளார்.

# கனடா வாழ் ஈழத் தமிழ் உறவுகள் மூவர் பிரித்தானியாவில் வாகன விபத்தில் உயிரிழப்பு!

யூன் 12, 2023

பிரித்தானியாவின் தென் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மேற்கு சசெக்ஸ் (West Sussex) பகுதியில் இரு கார்கள் மோதி விபத்திற்குள்ளானதில் கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் நால்வர் படு காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் அடங்குவர்.

10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை V285 வீதியில் சிசெஸ்டர் (Chichester) பகுதியில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது. வெள்ளை நிற பிஎம்டபிள்யூ (BMW 220) மற்றும் பழுப்பு நிற மேர்சிடிஸ் (Mercedes C200) ஆகிய இரண்டு கார்கள் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் பிஎம்டபிள்யூ காரில் பயணித்த நால்வரில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் காயங்களுடன் மீட்கப்பட் டிருக்கிறார். மேர்சிடிஸ் (Mercedes C200) காரில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சிசெஸ்டர் (Chichester) நகர் அருகே விபத்து நடைபெற்ற Duncton கிராமப் புறத்தில் வீதியில் ஆட்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டுள்ளதால், கார் விபத்து தொடர்பான நேரடி சாட்சியங்கள் இல்லாததால் பொதுமக்களின் உதவியை பொலிசார் நாடியுள்ளனர்.

திருமணக் கொண்டாட்டம் ஒன்றுக்காக கனடாவில் இருந்து பிரித்தானியாச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள்



ஆகியோரே உயிரிழந்துள்ளதுடன் மகன் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, இவர்கள் பயணம் செய்த பிஎம்டபிள்யூ காரைச் செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் உறவினரான பெண் ஒருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

# உக்ரைன் அணை உடைப்பால் உலகளாவிய உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்: ஐ.நா.!

யூன் 14, 2023

உக்ரைன் - ரஷ்யா போர் ஒன்றரை வருடத்திற்கு மேலாக நடைபெற்று வரும் நிலையில், உக்ரைனில் உள்ள டினிப்ரோ ஆற்றின் மீது கட்டப்பட்ட சோவியத் - காலத்து மிகப்பெரிய அணையான ககோவ்கா அணை ஜூன் 6 ஆம் திகதி உடைந்து 18 கியூபிக் கிலோமீட்டர் பரப்பளவு நீர், தென் உக்ரைன் பகுதியை மூழ்கடித்தது.

இதை ஆராய்ந்த நோர்வே நிலநடுக்கவியலாளர்களும், அமெரிக்க செயற்கைக்கோள்களும் இது குண்டு வைத்து தகர்த்தது போன்று இருப்பதாக தெரிவித்தன. எனினும், இந்த அணை உடைந்ததற்கு உக்ரைனும், ரஷ்யாவும் பரஸ்பரம் குற்றம் சாட்டின.

இதன் தாக்கம் குறித்து கருத்து தெரிவித்திருக்கும் ஐ.நா. சபையின் உதவிகளுக்கான தலைவர் மார்ட்டின் கிரிஃபித்ஸ், இந்த தாக்குதலால் உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு குடிநீர் கிடைப் பதில் பிரச்சனைகளும் ஏற்படலாம் என தெரிவித்திருக்கிறது.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோதுமை, பார்லி, சோளம், ராப்சீட், ராப்சீட் எண்ணெய், சூரியகாந்தி விதை மற்றும் சூரிய காந்தி எண் ணெய் உற்பத்தியில் உக்ரைன் மற்றும் ரஷ்யா முக்கிய பங்கு வகிக் கின்றன. இந்த உடைப்பின் காரண மாக, வரப்போகும் பயிரிடும் காலங் களில் இவற்றை விதைப்பதிலும், அறுவடை செய்வதிலும் மிகப்பெரிய சிக்கல் வருவது தவிர்க்க முடியாதது.

சுமார் 7 இலட்சம் பேர் வரை குடி நீருக்காக அணைக்கு பின்னால் உள்ள நீர்த்தேக்கத்தை நம்பியிருக் கின்றனர். இந்த உடைப்பின் காரணமாக சுத்தமான குடிநீர் இல் லாமல் மக்கள் நோய்வாய்ப்படும் வாய்ப்பும், குழந்தைகளுக்கு அதிகமான பாதிப்பும் ஏற்படும்.



ஜெனிவா உடன்படிக்கையின்படி ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு எதிரான வகையில், சிவிலியன் உள்கட்டமைப்புக்கு எதிராக இந்த பாரிய அளவிலான சேதம் ஏற்பட்டுள்ளது.

"யார் இதை (அணை தகர்ப்பு) செய்திருந்தாலும் ஜெனிவா உடன்படிக்கைகளை மீறியதாகும்" என்றும் கிரிஃபித்ஸ் குறிப் பிட்டுள்ளார்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

**ஜெ (Jey) இராசதுரை** MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

---

LILAND

## LIFE INSURANCE

Mortgage Insurance Line of Credit Insurance

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

## 20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை **Cash Back Value** பெறமுடியும்.

## Living Benefits / Income Replacement

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

## Super Visa, RRSP Loan, RESP (Education)

கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness) for 25 Sickness
நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.

(24 Yrs Experience)

## INCOME TAX




REFUND within 10 Days

- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration

வருமான வரித்திணைக்களத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

**Philip Chandran**
Liland Insurance
**416-450-9043**
philipsam0715@hotmail.com

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

INSURANCE IS LIKE YOUR MUM AND DAD

---

# சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# போர்க்கால இலக்கியத்திற்கு புதுமை படைத்த கவிஞன்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
05.08.1993

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாக சித்திரிக்கும் கலை இலக்கியங்கள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் வளர்ந்த சூழல், தான் உறவுகொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத் தளமாக அமைகிறது. வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன்.

புதுவை அண்ணா என நாம் அன்பாக அழைக்கும் புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கலைஞர்.

அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர். இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர். இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துகொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப்பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை.

புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஒரு இசை இருக்கிறது; ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது.

இந்த தேசத்தின் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்பதால் அவரது கவிதைக்கு அலாதியான வீச்சும் வலிமையும் உண்டு. சதையும் இரத்தமுமாக இந்த மண்ணின் பண்பாட்டுப் படிமங்கள் அவரது கவிதைக்கு உயிர் வடிவம் கொடுக்கும்.

மனித அவலங்களையும், ஏக்கங்களையும் படிமக் காட்சிகளாக சித்தரித்து, இனவாதக் கொடூரத்தின் அராஜகத்தை, அழுத்தமாக உணர்த்திக்காட்டுவதுடன் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசமிக்க கொதிப்புணர்வையும் அவரது கவிதை தட்டி எழுப்புகிறது.

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது. கவிதை உலகில், போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவமும் இதிலேதான் தங்கியிருக்கிறது.

எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி, தமிழ்த் தேசிய பிரக்ஞையை வழிப்புறச் செய்ததில் அவரது பங்கு கணிசமானது. விடுதலைக்காக ஏங்கும் தமிழினத்தின் ஆன்ம தாகமாக வெளிப்பாடு காணும் அவரது கவிதை போர்க்கால இலக்கியத்திற்கு புதுமையும் செழுமையும் கொடுக்கிறது.

புதுவை இரத்தினதுரை இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றி, ஒரு இலட்சியப் போராளியாகவும் எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து நிற்பவர். இலக்கியப் படைப்பிலும், இலட்சியப் பயணத்திலும் அவரது பணி சிறப்புடன் தொடர எனது நல்லாசிகள்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்ப: கவிஞர் புதுவை இரத்தினதுரையின் “நினைவழியா நாட்கள்” என்ற கவிதைத் தொகுப்பிற்கு தலைவர் மேதகு வே. பிரபாகரன் வழங்கிய வாழ்த்துரையை இங்கு பிரசுரிக்கிறோம்.




மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# கழுகும், காட்டெருமையும் வயல்காரரும்



எங்கள் வானத்தில் இருளகற்ற இதுவரையில்
திங்கள் வரவில்லை, திரண்டகரு மேகத்தைக்
கலைத்துவிட இங்கே காற்றெதுவும் வீசவில்லை.
நிலைத்து நிற்கும் வர்க்க நெடுமலையைத்தகர்த்துவிட
பூகம்பம் ஏதும் பெரிதாய் நிகழவில்லை.
ஆரம்பம் போலே...
ஆங்காங்கு சிறுதூறல் வந்ததுதான்
ஆனால்... வரண்டநிலம் குளிரவில்லை.
இந்த நிகழ்வேதான் இப்பொழுதும் தொடர்கிறது.
காட்டெருமை எங்கள் கடப்புக்குள் மேய்கிறது.
வீட்டுக்குக் காவலென விட்டநாய் கடிக்கிறது.
ஆனை திமிர் கொண்டு அலைகிறது; எங்களது
சேனைக்குள் வந்ததும் சிலவேளை மிதிக்கிறது.
அமெரிக்கக் கழுகு அமருதற்கு இடம்தேடி,
குமாரிக் கடலோரம் குறிவைத்துப் பறக்கிறது.
கழுகை எங்களது கமுகுமரம் மீதமர்த்த,
தொழுது வரவேற்கும் தொழும்புகளும் நடக்கிறது.
இத்தனையும் நடக்கிறது
என்றாலும் வயர் காரர்
நித்திரையாக் கிடக்கின்ற நிகழ்வே தொடர்கிறது.
வயலுக்கு நீர் பாய்ச்ச வாய்த்த கரங்களெல்லாம்
விழலுக்கு நீர் பாய்ச்சல்
விரும்பத் தகும் செயலா?
விழலுக்கு நீர் பாய்ச்சி வேர்த்துக் களைத்த
புயல் காற்றே வா!
உன்னைக் கணக்கிட்டுக் கொள்
பின்னர் ஆற்றுப்படுத்தி
அளவாக வீசு
நீரை வயலுக்குப் பாய்ச்சு
வாய்க்காலைச் செப்பனிடு
அயலை எழுப்பு, அதிகாலை ஏர்பூட்டு.

**– புதுவை இரத்தினதுரை, 1982**


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




# புதிய வரலாற்றைத் தொடங்கியவன் பொன். சிவகுமாரன்

பொன்னுத்துரை சிவகுமாரன் (26.08.1950 - 05.06.1974) ஈழ விடுதலைப்போரட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், கோப்பாயில் சிறீலங்கா காவற்துறையினரின் சுற்றி வளைப்பில் நஞ்சருந்தி வீரச்சாவடைந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நஞ்சு அருந்தி உயிர் வீரச்சாவை தளுவியவர் இவரே.





உரும்பிராயில் 1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் நாள் பொன்னுத்துரை, அன்னலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது மகவாக சிவகுமாரன் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்றவர். அந்தக் கால கட்டத்தில் தான் இலங்கையில் கல்வித் தரப்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட் தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார்.

சரியாக நாற்பத்தி ஏழு ஆண்டுகளுக்கு முன்னான நிகழ்வு அது. ஏறத்தாழ நண்பகல் நேரம். உச்சி வெயிலை உயர்த்திப் பிடித்தபடி மரவள்ளித் தோட்டத்து செம் மண்ணில் அவன் வீழ்ந்து கிடந்தான். அவனது குதிக்காலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. துப்பாக்கியால் குறிபார்த்தபடி காக்கிச் சட்டைக் காவலர்கள் சூழ்ந்து நின்றனர். இனித் தப்ப வழியில்லை என்னும் நிலையில் தன் சட்டைப்பையில் இருந்த சிறிய வெற்று வாசனைத் திரவிய குப்பிக்குள் பத்திரப்படுத்தியிருந்த சயனைட்டை அவன் அருந்தினான். இது பெருந் தீயை மூட்டப்போகும் ஒரு பொறி அல்லது காட்டிடை ஆங்கோர் பொந்திடை வைக்கப்பட்ட ஒரு அக்கினிச் குஞ்சு என்பதை அப்போது அவன் அறிந்திருப்பானா? அல்லது வேறு யாரேனும் எதிர்வு கூறியிருப்பார்களா? நான் அறியேன். ஆனால் அவனது நெஞ்சில் கனன்ற அந்த தீயை நான் அறிந்திருந்தேன். ஆம் 1974ம் ஆண்டு ஜூன் 5ம் நாள் திரவியம் என வீட்டாராலும் நெருக்கமானவர்களாலும் அழைக்கப்பட்ட சிவகுமாரன் ஈழப்போராட்டத்தில் சயனைட்டை அறிமுகம் செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான். முதல் களப்போராளியாகி ஈழப்போராட்டத்தை முன் நகர்த்தினான். தன் சாவின் மூலம் அன்றைய இளந்தலைமுறையை, தமிழ் சமூகத் தை ஒரு உலுக்கு உலுக்கினான்.

1972ம் ஆண்டுக்கு முன்னரே சிவகுமாரனின் பெயர் எங்களைப் போன்றோருக்கு அறிமுகமாகி இருந்தது. பத்திரிகைச் செய்திகளிலும் அவனது பெயர் அடிபடத் தொடங்கி இருந்தது. யாழ்ப்பாண பிரதான வீதிக்கு அருகே அப்போதைய யாழ்பாண மேயர் துரையப்பாவின் காருக்கு குண்டு வைத்தது, அப்போதைய ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறியின் காருக்கு உரும்பிராயில் வைத்து குண்டெறிந்தது என்பன போன்ற சம்பவங்களில் அவனது பெயர் பரபரப்பாகப் பேசப்பட்டது. இவற்றிற்காக அவன் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தான். சிறைக்குள்ளும் அவன் கலகக்காரனாகவே இருந்ததனால் அவன் அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தான். அவனது வழக்குகளுக்கான ஒவ்வொரு தவணையின் போதும் யாழ்ப்பாணம் கொண்டுவரப் படுவான். அவனது வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப் படாமல் தவணைகளாக இழுத்தடிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டான். அப்படியாக யாழ்ப்பாணச் சிறைக்கு கொண்டு வந்த ஒரு பொழுதினில்தான் நான் சிவகுமாரனை முதலில் சந்தித்தேன்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசினால் வரையப்பட்ட புதிய அரசியல் யாப்பின்படி 1972-05-22 அன்று இலங்கை, சிறீலங்கா என்ற புதிய பெயருடன் குடியரசாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் கைது செய்யப்பட்ட நாங்கள் எழுபது பேர் வரையிலும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம். ஏற்கனவே 1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜேவிபியினரும் அவர்களின் தலைவரான ரோஹண விஜயவீராவும் அங்கிருந்தார்கள். இந்தக் குடியரசு எதிர்ப்பு நடவடிக்கையில் முதலில் கைது செய்யப்பட மூன்று இளைஞர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். எதிர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம் என்ற வகையில் மே 18ம் தேதியே நாங்கள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தோம். மறுநாள் சிறைக்கு அனுப்பப்பட்டபோது சிறைப் பணிமனைக்கு அருகிலேயே தீவிர கண்காணிப்புக்கும் பாதுகாப்பிற்குமாக வைக்கப்பட்டிருந்த ரோஹண விஜய வீரா தான் முதலில் எங்களை வரவேற்றார். என்ன மூன்றுபேர் தானா என்று தனது மழலைத்தமிழில் இளக்காரத்துடன் அவர் கிண்டலடித் தார். எங்களுக்கு சற்று வெட்கமாயிருந்தது. ஆனாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் எங்களுக்கு பின்னால் இன்னும் ஆயிரம் பேர் வரு




வார்கள் என்று பெருமை யடித்துக் கொண்டோம். ஆனால் மொத்தம் எழுபது பேர்தான் எதிர்ப்பு நடவடிகைக்காக கைதானார்கள் என்பது எங்களுக்கு சற்று ஏமாற்றம்தான். எங்கள் அனைவருக்கும் ஒரு மண்டபம் போன்ற கட் டிடத்தை ஒதுக்கியிருந்தார்கள். அந்த மே மாத இறுதி வாரத்தின் ஒருநாள், மாலைச் சாப்பாட்டிற்குப் பின்னால் எங்களைக் கணக்கெடுத்து மண்டபத்திற்குள் தள்ளி அடைத்துவிட்டார்கள். நாங்களெல்லோரும் கம்பிகளைப் பிடித்தபடி ஆவலுடன் வெளியை வெறித்தபடி இருந்தோம். ஏனெனில் அன்றிரவு சிவகுமாரன் கொண்டுவரப்படு கின்றான் என்ற தகவல் இரகசியமாக மதியமே எங்களுக் குக் கிடைத்திருந்தது. எங்கள் கட்டிடத்திற்கு எதிரே செல் என்று சொல்லப்படும் தனி அறைகளில் ஏப்ரல் கிளர்ச்சிக் காரர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். இரண்டு பகுதியையும் நடைவழி பிரித்திருந்தது ஏப்ரல் கிளர்ச்சியாளர்களுக்கு சிவகுமாரன் மீது மிகுந்த மரியாதை இருந்தது. ஏனெனில் அவர்கள் ஏப்ரல் கிளர்ச்சிக்குப் பயன்படுத்திய வெடி குண்டு மற்றும் ஆயுத அறிவுகள் மிகப் பழசானவை. ஆனால் சிவகுமாரன் புதிய பல தொழில் நுட்பங்களை அறிந்திருந்தான். சிறைக்குள் வருபவர்கள் முதலில் ரோஹண இருக்குமிடத்தை தாண்டி பின்னர் எங்கள் இடத்தையும் தாண்டித்தான் அந்த நடைவழியே மற்றப் பகுதிகளுக்கு செல்ல வேண்டும். இரவு ஒன்பது மணி யளவில் சிறைக்காவலர்கள் புடைசூழ நடைவழியே வேட்டி அணிந்த அந்த நெடிய உருவம் நடந்து வந்தது. நாங்கள் அடையாளம் கண்டு கொண்டோம். எங்கள் கட்டிடத்தின் முன்னால் வந்ததும் நாங்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கினோம். முகமெல்லாம் மலர்ந்திருக்க கனிந்த குரலில் எல்லோருடனும் உரையாடத் தொடங்கிய சிவகுமாரன், தன்னை மறந்தவனாய் அங்கேயே தரித்து நின்றான். நான் என்னை மறந்தவனாக அவனையே வெறித்தபடி இருந்தேன். அவனுடைய காவிய வாழ்வில் நானும் பங்காளியானது ஆச்சரியம்தான். இன்றைக்கும் அந்தக் காட்சி என்னால் மறக்க முடியவில்லை. சிறைக் காவலர்கள் அவனை நகரும்படி வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தனர். இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் இவர்களுடனேயே என்னையும் தங்க வையுங்கள் என்று உறுதியான குரலில் கூறத் தொடங்கினான் சிவகுமாரன். முகத்தின் மலர்வும் குரலின் கனிவும் அவனிடத்தே மறைந்துவிட்டது. காவலர்கள் மறுக்க சிவகுமாரன் அடம் பிடிக்க நிலைமை கலகச் சூழலுக்கு மாறத்தொடங்கியது. சிவகுமாரன் அந்த நடைவழியிலேயே உட்கார்ந்து விட டான். இறுதியில் எங்கள் கட்டிடத்திற்கு எதிரே செல்லில் அடைப்பதாக உடன்பாடு காணப்பட்டது. இந்தத் தீவிரம், இந்தப் போர்க்குணம் அவனது இறுதிக்கணம் வரையில் அவன் கூடவே இருந்தது.

அவனது போர்க்குணத்திற்கும் தனித்த செயற்பாட்டிற்கும் உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைக் கூறலாம். 1973ம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது காவல் கடமை யில் ஈடுபட்டிருந்த சிங்கள மொழிபேசும் பொலிசார் பெண் களுடன் அத்துமீறி நடக்க முற்பட்டனர். இதனைக் கண் ணுற்ற சிவகுமாரன் தன்னந்தனியனாகவே அவர்களை எதிர்த்தான். அவன் நல்லூர் காவல் நிலையத்தில் அடைக் கப்பட்டான். பொதுமக்கள் அவனுக்காக காவல் நிலை யத்தை முற்றுகையிட்டதால் பொலிசார் அவனை விடு விக்க வேண்டியதாயிற்று.

## செயல்வீரன்

1960களின் பிற்கூறு இலங்கைத்தீவின் இன்றைய நிலைமைக்கான பல முகிழ்ப்புகளைக் கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன் னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக் கப்போராட்டங்கள், உலக அளவில் நிகழ்ந்த சீனக் கலாச் சாரப் புரட்சி, பிரான்சில் எழுந்து உலகெங்கும் பரவிய மாணவர் கிளர்ச்சிகள், தமிழரசுக் கட்சியில் இருந்து வெளி யேற்றப்பட்ட, தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக் கப்பட்ட நவரெத்தினம் அமைத்த சுயாட்சிக் கழகத்தின் தோற்றம், இரசியாவில் லுமும்பா பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ரோகஹண விஜய வீரா இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் பின்னர் தனியான கட்சியை அமைத்தும் இளம் கிளர்ச்சிக்காராக தோற்றம் பெற்றமை போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை அந்தக் காலம் வெளிப்படுத்தியிருந்தது. இவை யாழ் இந்துக் கல்லூரியில் படித்த சிவகுமாரனைப் பாதித்தது ஆச்சரியம் தான். சிவகுமாரன் கம்யூனிசக் கருத்துக்கள் கொண்ட நண்பர்களுடன் உறவுகளைப் பேணுவதிலும் சமூக நீதிக் கான செயல்பாடுகளை முன்னெடுப்பதிலும் ஈடுபாடு கொண்டவனாக இருந்தான். அதேவேளையில் தமிழர் களின் மிதவாத தலைமைக்கு மாற்றாக போர்க் குணம் கொண்ட தலைமை ஒன்றை கட்டியெழுப்ப முயற்சித் தோருடனும் இணைந்து செயற்பட்டான். ஆனாலும் அவன் பேசுவதைவிடவும் செயல் என்பதிலேயே அக்கறை கொண்டவனாக இருந்தான். அதனாலேயே பல செயற் பாடுகளைத் தனியாளாய் மேற்கொண்டு பொலிசாரின் கண்காணிப்புக்கு ஆளாகியிருந்தான்.

சிறையில் இருந்து வெளியே வந்ததன் பின்னர் இளைஞர் களுக்கான இயக்கம் அமைப்பதில் நான் அக்கறை காட்டிவந்தேன். ஆனால் சிவகுமாரன் அதில் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். இருவரும் யாழ்ப்பாணம் கொட்டடியில் இயங்கி வந்த மீனாட்சி வணிகக் கல்லூரியில் கணக்கியல் படித்து வந்தோம். அந்தக் காலகட்டத்தில் போராட்டத்தில் அக்கறை கொண்ட யாழ்ப்பாண இளைஞர் பலரும் அங்கு படித்தார்கள் அல்லது சிறை, பொலிஸ் என்பவற்றில் இருந்து மீள்பவர்களுக்கான புகலிடமாக அது அமைந்தது என்றும் கூறலாம். தமிழ் இளைஞர் பேரவை அமைக்கப் பட்டதும் அதன் செயல்பாடுகள் சிலவற்றில் சிவகுமாரன் முகம் காட்டாமல் பங்கேற்றும் இருக்கிறான். 1973ன் பிற்பகுதியில் மலையக மக்களுடன் உறவைப் பேண வேண்டும் என்ற வேலைத்திட்டம் முன்வைக் கப்பட்டபோது அதில் சிவகுமாரன் ஆர்வத்துடன் பங்கேற்று எங்களுடன் மலையகம் வந்திருந்தான். மலையகத்தில் இருந்து நாங்கள் யாழ்ப்பாணம் திரும்பியபோது நான் காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான தயாரிப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. (மாநாட்டை கொழும்பில்தான் நடத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் நெருக்குதல்களை மீறி அமைப்பாளர்கள் யாழ்பாணத்தில் நடத்த முடிவெடுத்திருந்தனர்) ஆனால் எங்களைப் போன்ற இளம் சமூக ஆர்வலர்கள் ஒதுக்கப்பட டவர்களாகவே கணிக்கப்பட்டிருந்தோம். இது எங்களுக் குச் சினத்தை மூட்டியது. சிவகுமாரன் தலைமையில் யாழ்ப்பாண பிரதான வீதியில் அமைந்திருந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் செயலகத்திற்குச் சென்றோம். மாநாட்டுப் பொறுப்பாளர்களைச் சந்தித்து நாங்களும் பங்களிக்கும் வகையில் செயல் திட்டத்தை வகுக்கும்படி கோரினோம். முதலில் அவர்கள் மறுத்தார்கள். அப்படி யானால் எங்கள் பங்களிப்பு இல்லாமல் மாநாடு நடைபெற முடியாது என சிவகுமாரன் எச்சரித்தான். அதன் பின் தொண்டர் அமைப்பில் எங்களையும் இணைப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சிவகுமாரன் பொறுப்பாளர்களில் ஒருவனாக அறிவிக்கப்பட்டான். நானும் வேறு பல நண்பர்களும் தொண்டாராகப் பணியேற்றோம். எங்கள் பணிகள் சுமுகமாகவே நடைபெற்றன. ஆனால் இரு பாலைச் சந்தியில் இருந்து புறப்பட்ட இறுதிநாள் காண்பிய ஊர்திகள் பங்கேற்ற ஊர்வலத்தில் பண்டாரவன்னியன் பற்றிய காண்பிய ஊர்தி கலந்து கொள்வதற்கு மாநாட்டு அமைப்பாளர் அனுமதி மறுத்திருந்தனர். அரச நெருக் கடியை சமாளிக்க அமைப்பாளர்கள் எண்ணியிருக்க கூடும். சிவகுமாரன் தலைமையிலான தொண்டர்களாகிய நாங்கள் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்துபவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். இந்தத் தகவல் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் ஊர்வலம் நகராத படி தெருவை மறித்தபடி நாங்கள் மறியல் செய்தோம். மாநாட்டு அமைப்பாளர்கள் எத்தனையோ விளக்கங்கள் அளித்து கெஞ்சினர். ஆனால் சிவகுமாரன் எதற்கும் மசிய வுமில்லை விட்டுக் கொடுக்கவும் இல்லை. கடைசியாக பண்டாரவன்னியன் காண்பிய ஊர்தியுடன் ஊர்வலம் நடைபெற்றது.

1974 ஜனவரி 10 இறுதிநாள் நிகழ்வாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டுப் பேராளர்கள் உரை யாற்றும் பொதுக்கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருநது. இந்த மாநாடு திட்டமிடப்பட்டபோது இத்தனை எழுச்சியாக மக்கள் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என்று அமைப் பாளர்கள் எதிர்பாத்திருக்கவில்லை. ஆதலால் சில நூற்றுக் கணக்கானவர் கலந்து கொள்ளக் கூடிய வீரசிங்கம் மண்டபத்தைப் பொதுக் கூட்டத்திற்கு ஒழுங்கு படுத்தி யிருந்தனர். ஆனால் மாநாடு நடைபெறுவது தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகள்





சிவகுமாரனின் இறுதிப்படம்


சிவகுமாரன் இல்லத்தில்



சிவகுமாரன் இல்லத்தில்





சிவகுமாரன் இல்லத்தில்


சிவகுமாரன் இல்லத்தில்


சிவகுமாரானின் இறுதி ஊர்வலம்


சிவகுமாரானின் இறுதி ஊர்வலம்


வேம்படி மயானம்

தமிழ் பேசும் மக்களிடையே எழுச்சியைத் தோற்றுவித்து விட்டது. ஆதலால் யாரும் எதிர்பாராத வகையில் இறுதி நாள் நிகழ்ச்சிக்கு பல்லாயிரக் கணக்கணக்கில் மக்கள் வீரசிங்கம் மண்டபத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர். மண்டப ஒழுங்கைக் கவனித்துக் கொண்டிருந்த தொணடர்களாகிய எங்களுக்கு நிலமையின் தீவிரம் தெரியத்தொடங்கி விட்டது. உடனடியாக சிவகுமாரன் எங்களை அழைத்து மாற்று வழிகளை யோசிக்கும்படி கோரினான்... அப்போதுதான் நாங்கள் கூட்டத்தை எல்லாப் பொதுமக்களும் பார்க்கவும் கேட்கவும் வசதியாக மண்டபத்திற்கு வெளியே நடத்தக் கோருவதென்று தீர்மானித்தோம். எங்கள் அழுத்தம் காரணமாக அமைப்பாளர்கள் வெளியே கூட்டம் நடாத்தச் சம்மதித்தனர். நாங்கள் வெளியே கட்டப்பட்டிருந்த சிகரத்தற்குக் கீழே வாங்குகளை அடுக்கி தற்காலிக மேடை அமைத்தோம். வீரசிங்க மண்டபக் கட்டடிடத்தின் சிறு முற்றம் அதற்கும் எதிரே கோட்டைச் சுவரில் இருந்து சரிவாக அமைந்த புல்வெளி. இதனைப் பிரித்தபடி தார்ச்சாலை. நாங்கள் மேடைக்கு அருகே இருந்தோம். தார்ச்சாலை புல்வெளி எங்கும் மக்கள் தலைகளே தெரிந்தன. திருச்சி போராசிரியர் நயினார் முகமது பேசத் தொடங்கினார். நாங்கள் பேச்சை இரசிக்க தொடங்கியிருந் தோம். அப்போதுதான் அந்த நாமெல்லாரும் அறிந்த துயரம் நிகழ்ந்தது. மேடையின் இடது பக்கத்தே அதாவது புல்லுக்குளம் பக்கத்தே சலசலப்பு ஏற்பட்டது. பொலிசார் அமர்ந்திருந்த மக்களை கலைக்க முயற்சித்தித்து கொண்டிருந்தனர். சலசலப்பு உடனேயே அல்லோல கல்லோலமாக மாறத்தொடங்கியது. மக்கள் நெருக்கியடித்தபடி நகரத் தொடங்கினர். மேடையில் இருந்தவர்கள் மக்களை அமைதியாக இருக்கும் படியும் பொலிசாரை விலகிச் செல்லும்படியும் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. மக்கள் மிரண்டு ஓடத்தொடங்கினர். அவ்வேளையில்தான் அது நடந்தது. தொண்டர்கள் என்ற நிலையில் மேடையின் அருகே இருந்தோம் என்பதால் எல்லாவற்றையும் எங்களால் தெளிவாகவே பார்க்க முடிந்தது. அந்த மேடை அமைக்கப்ட்டிருந்த சிறு முற்றத்தையும் தார்த் தெருவையும் பிரித்த மறிப்புக் கம்பியை தாண்டுவதற்கா ஒருவர் தொட்டபோதே எங்களைப் பார்த்து அலறியபடி வீழுந்தார். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் அறுந்து விழுந்த மின்சார கம்பியில் இருந்து மின் ஒழுக்கு அந்த மறிப்பு கம்பியிலும் பரவியிருப்பதை அப்போதுதான் நாங்கள் உணர்ந்தோம். ஆதலால் அதனைத் தொட வேண்டாம் என்று நாங்கள் கத்தித் தடுத்துக் கொண்டிருந்த போதும் அதைத் தொட்டவர்கள் அலறியபடி செத்து வீழ்ந்தார்கள். எல்லாம் அடங்கிய இறுதி நேரம் வரையில் நானும் சிவகுமாரனும் அங்கிருந்தோம். இதற்குப் பழிக்குப் பழி வாங்குவதென்று நாங்கள் இருவரும் சபதம் செய்து கொண்டோம். காலையில் சந்திப்பதற்கான இடத்தையும் தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் விடிவதற்கு முன்பாகவே நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டிற்குக் காவலாக நின்ற பொலிசார் மீது சிவகுமாரன் வெடிகுண்டை வீசி விட்டான். பொலிசார் காயமடைந்தார்கள். சிவகுமாரன் தேடப்படுபனாக மாறிவிட்டான். இது அவனது குண இயல்பை விளக்க போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

டேவிட் குஞ்சு என்றுதான் சிவகுமாரன் என்னை அழைப்பதுண்டு. நான் பொலிசாரின் தீவிர கண்காணிப்புக்கு உட்பட்டிருக்கவில்லை. 1974-01-10ம் திகதியில் இருந்து 1974-06-05ம் திகதி வரையில் நான் அவனுடன் கூடவே இருந்தேன். எல்லாச்செயல்பாட்டிலும் பங்கேற்றேன். வெடி மருந்துகள் ஆயுதங்கள் தேடி சாதிய எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்றிருக்கிறோம். நானும் சாவகச்சேரியை சேர்ந்த ஜீவராசாவும் மருத்துவர் ஒருவரின் உதவியுடன் சைனட்டைத் தேடிப் பெற்று வந்ததும், இது எனக்கு மட்டும்தான் உங்களுக்குத் தேவையில்லை என்று சிவகுமாரன் கட்டளையிட்டதும் ஒரு முப்பதாண்டுகளுக்கு முன்னான நிகழ்வு. இனி ஒரு தடவை பொலிசின் கையில் தான் பிடிபடுவதில்லை என்பதில் சிவகுமாரன் உறுதியாகவே இருந்தான். எங்களைப் பொலிசார் பிடித்தால் எல்லாப்பொறுப்பையும் தனது தலையில் சுமத்தி விடும்படியும் கூறியிருந்தான். இந்த ஐந்து மாத காலமும் ஒரு காவியத்திற்கான சம்பவங்கள் நிறைந்து கிடக்கின்றன, எல்லாவற்றையும் இப்போது கூறுவதும் தேவையற்றதாகும். அவனது இறுதிக்கணம் வரைக்கும் நான் டேவிட்டாகவே இருந்தேன். பின்னாட்களில் எனக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகைகளிலும் இந்தப் பெயரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் துயர நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்த உதவி பொலிஸ் அதிபர் சந்திரசேகராவை பழி வாங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது. மிகச் சரியான அந்தத் திகதி எனக்கு நினைவில் இல்லை. கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் சந்திர சேகராவை மறித்துக் கொலை செய்வது என்பது எங்கள் திட்டமாக ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி

எங்களுக்குப் பாரிய தோல்வியையே தேடித்தந்தது. சந்திரசேகரா உயிர் தப்பிவிட்டான் சிவகுமாரன் மிக உயர் தேடலுக்கு உரியவனாக அறிவிக்கப்பட்டான். அவனது தலைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1974ம் ஆண்டில் அவனது ஊரான உரும்பராய் கிராமம் எழுநூறு பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டைக்கு உள்ளானாது. இன்றைக்கு போராட்டம் முதிர்ந்த நிலையில் இவையெல்லாம் சாதாரணமாக இருக்ககூடும். இந்நிலையில் சிவகுமாரனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவெடுத்தோம். இரகசிய கடல்வழி பயணத்திற்குத் தேவையான பணம் எம்மிடம் இருக்கவில்லை. தெரிந்தவர்களிடம் பணம் கேட்டுச் சேகரிப்பது எனது பணியாயிற்று. அப்போது புகழ்மிக்க பெண்மணி ஒருவர் ”என்னிடம் தாலிக்கொடி மட்டும்தான் இருக்கின்றது” என்ற பொன்மொழியை உதிர்த்தார். எல்லோரும் கைவிரித்து விட்டார்கள். இந்திலையில்தான் பணம் தேடும் வேறு முயற்சிகளை ஆராயத் தொடங்கினோம். அப்போதுதான் சத்தியசீலனின் சகோதரி சத்தியசீலி பணியாற்றும் கோப்பாய் கிராமிய வங்கி எங்கள் கவனத்திற்கு வந்தது.

1974ம் ஆண்டு யூன் 5ம் திகதி காலை பத்து மணியளவில் மருதனார்மடத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வாடகை வண்டியில் உரும்பிராயில் இருந்து நாங்கள் நால்வர் (சிவகுமாரன், மகேந்திரன், ஜீவராசா, நான் (டேவிட்)) கோப்பாய் நோக்கி பயணித்தோம். எங்கள் திட்டம் சொல்லளவில் மிகச் சிறந்ததாகவே இருந்தது. ஆனால் நடைமுறையில் இறங்கியபோது கட்டுத் தோட்டாக்கள் கொண்ட எங்கள் ஆயுதங்கள் எதுவும் ஒத்துழைக்கவில்லை. ஒன்று பிழைக்க மற்றவையெல்லாம் குழப்பமாகிவிட்டன. கார்ச் சாரதி திறப்புடன் ஓடிவிட்டான். திறப்பில்லாமல் காரை இயங்கச் செய்யயாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஊர் மக்கள் கூடிவிட்டார்கள். எங்கள் கால்களை நம்பி குடிமனைகளுக்கு ஊடாக ஓடத்தொடங்கினோம். கொள்ளைக்காரர் என்றபடி மக்கள் எங்களைத் துரத்தத் தொடங்கினர். கற்காளால் எறியத் தொடங்கினர். ஊர்மனை தாண்டி தோட்டப்பகுதிக்கு வந்துவிட்டோம். வெடிக்காத கட்டுத் தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கியைக் காட்டி துரத்தி வருபவர்களைத் தடுத்து நிறுத்தினோம். நாம் யார், எதற்கு வந்தோம் என்பதை விளங்கப்படுத்தினோம். சிவகுமார் தன்னை அறிமுகப்படுத்தியதும் சிலருக்கு அவனைத்தெரிந்திருந்தது. நாங்கள் மெதுவாக ஆசுவாசப் படுத்தியபடி நீர்வேலி நோக்கி தோட்ட வரப்புகள் வழியே நடக்கத் தொடங்கினோம். ஊர்மக்கள் பின்னே எங்களைப் பார்த்தபடி நின்றிருந்தனர். நேரம் நண்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் எதிரே மண்பாதையில் விரைந்து வந்த பொலிஸ் வாகனங்கள் எங்களை வழி மறித்தன. பின்னால் திரும்பிய போது அங்கேயும் பொலிசார் எங்களை நோக்கி வருவது தெரிந்தது. நாங்கள் முற்றுகைக்குள் மாட்டப்பட்டோம். இப்போது எல்லோரது கைகளிலும் இருந்த குண்டுகள் இல்லாத ஆயுதங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. நால்வரும் ஒன்றாகப் பிடிபடாமல் நான்கு திசையில் பிரிந்து ஓடி, போக்கு காட்டுவதென்றும் தீர்மானித்துக் கொண்டோம். இதனால் சிவகுமாரன் உட்பட எல்லோரும் தப்ப முடியுமென்று நம்பினோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சிவகுமாரனே பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தான். உண்மையில் அப்போது யார் சுற்றிவளைக்கப்பட்டார் என்பதனை நான் அறிந்திருக்கவில்லை. நான் ஒரு வாழைத் தோட்டத்திற்குள் மறைந்து நடந்தபடி வெகுதூரம் வந்திருந்தேன். எனது சாரத்தின் மடிப்பிற்குள் ஆயுதங்கள் கனத்தபடி இருந்தன. என்னைப் பொலிஸ் துரத்தவில்லை என்பது உறுதியாயிற்று. வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

## சயனைட் அருந்திய சிவகுமாரன்

நான் புன்னாலைக்கட்டுவன் வந்து சேர்ந்துவிட்டேன். என்னைக்கண்டதும் அபயமளித்தவர்கள் ஏங்கிப் போனார்கள். அப்போதுதான் என்னால் முழுத் தகவலையும் அறிய முடிந்தது. அந்த இடத்திலேயே சிவகுமாரன் பிடிபட்டதாகவும் அவனது காலில் மரவள்ளித்தடி குத்திக் காயமாகி வீழ்ந்து விட்டதாகவும் அந்த நிலையிலும் பொலிசாருடன் போரடியதாகவும் இறுதியில் அவன் சயனைட் அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மற்ற இருவரும் மாலையில் குடிமனைக்குள் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. நான் யாழ்ப்பாண வைத்தியசாலைக்குப் புறப்பட்டுச்சென்றேன். மாலை ஐந்து மணியிருக்கும். யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரி பொலிசாரால் நிறைந்திருந்தது. நான் வேறு வழியால் உள்நுழைந்தேன். ஏனெனில் வைத்தியசாலை எனக்கு மிகப்பழக்கமானது. எனது அம்மா, அம்மாவின் தோழிகள், எங்களுக்கு ஆதரவான மருத்துவர்கள், ஊழியர்கள் என என்னை அறிந்த பலர் அங்கிருந்தனர். பொலிஸ் காவலையும் தாண்டி நான் சிவகுமாரன் அருகே சென்றுவிட்டேன். சிவகுமாரனின் அம்மா அங்கு இருக்கின்றார். சிவகுமாரனின் அதே சிரிப்பு அதே மலர்ச்சி. டேவிட் குஞ்சு என்று அழைக்கின்றான். சயனைட் பிழைச்சிட்டுது போல கிடக்குது இவங்கட விசாரணைக்குப் போகக் கூடாது வழியைப்பார் என்கிறான். வெளியே வந்து நண்பர்களுடன் திட்டமிடுகிறேன். திட்டமொன்று வகுக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மின்சார நிலையத்தில் எனது சிறை நண்பன் ஒருவன் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவனிடம் உதவி கோருகிறேன். நாங்கள் குறிப்பிடும் நேரத்திற்கு மின்சாரத்தை தடைப்படுத்துவதாக உறுதி கூறுகிறான். மற்றைய ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். உங்கள் முயற்சியை நிறுத்துங்களென சிவகுமாரனது மரணச் செய்தி எங்களை வந்து சேர்கின்றது. அவனது இறுதி ஊர்வலத்திலும் சடங்கு நிகழ்விலும் நான் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் சிவகுமாரன் மரணித்த மறு நாளில் இருந்து நான் தேடப்படுபவனாக மாறியிருந்தேன். பத்திரிகையிலும் பெயர் அடிபடத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அவனது இறுதி ஊர்வலத்தை நான் பார்த்தேன். நான் பார்க்கும் படியாக ஊர்வலப் பாதை மாற்றப்பட்டது. அவனது சிதையில் மூட்டப்பட்ட தீ தகதகதகவென இன்னமும்தான் எரிந்து கொண்டிருக்கின்றது. எனது கவிதையில் குறிப்பிட்டது போல்...

**முதல் வித்து நீ**
**முன்னறிவித்தவன் நீ**
**சாத்வீகப் பாதையில்**
**சந்தி பிரித்தாய்**
**கால வெளியில்**
**சுவடுகள் பதித்தாய்**
**காலக் கரைவிலும்**
**உந்தன் சுவடுகள்...**

ஈழப்போராட்டத்தின் ஒரு பொறியாய் அக்கினிக் குஞ்சாய் இளைஞர்களின் குறியீடாய் எங்கள் தலைமுறை தாண்டியும் அவன் இருப்பான்.

நன்றி: டேவிட் ஐயா

**தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலகட்ட களச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை**
**05.06.1974 அன்று சிறீலங்கா காவல்துறையினால் சுற்றிவளைக்கப்பட்ட தருணத்தில் சயனைட் அருந்தி**
**வீரச்சாவைத் தழுவிக்கொண்ட "முதற் தற்கொடையாளர்" ஈகையர் பொன். சிவகுமாரன் அவர்களின் 49ஆம் ஆண்டு நினைவு நாள்.**
**தமிழீன ஒடுக்குமுறைக்கு சிங்களம் வித்திட்டு கல்வி தரப்படுத்தலை வீசியபொழுது அதை எதிர்த்து தமிழினப் புரட்சிக்கு வித்திட்ட மாவீரன்.**






சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, ஆனி 2 உ (16-6-74) ஞாயிறு ஜூன் 16 ஜ:அவ்: 24 புத்தகம் 27 இதழ் 42

## புதிய புறநானூறு படைத்த வீரத் தாய்!

"தமிழ் சமுதாயத்துக்காக எனது வீர மகனை நான் களபலியாக தந்து எனது கடமையை நிறைவேற்றிவிட்டேன். அதிலே நான் பெருமையுமடைகிறேன். இதே போல ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் வீட்டுக்கொரு பிள்ளையை தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு தயங்காமல் ஒப்படையுங்கள்!"

—இவ்வாறு மாவீரன் சிவகுமாரனைப் பெற்றெடுத்த வீரத் தாய் தமக்கு தேறுதல்கூற வந்தவர்களைப் பார்த்து உணர்ச்சி பொங்கக்கூறினாராம். மெய்சிலிர்க்க வைத்திடும் இச்செய்தி புறநானூற்று வீரப் பரம்பரை இன்னும் அற்றுப் போகவில்லையென்பதை நமக்கு நினைவூட்டுகிறதல்லவா?

## சிவகுமாரன் படம்

மாவீரன் சிவகுமாரனின் புகைப்படம் ஒன்று அடுத்த இதழ் சுதந்திரனுடன் வழங்கப்படும். அதிகப் பிரதிவேண்டுவோர் உடன் சுதந்திரன் நிர்வாகியுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

# 'மீண்டும் பிறப்பேன் விடுதலைக்கு போரிடுவேன்'

"நான் மீண்டும் மீண்டும் இந்த மண்ணில் தமிழனாகவே பிறப்பேன். எந்த இலட்சியத்துக்காக இந்தப் பிறவியில் போராடி வந்தேனோ — அந்த இலட்சியங்களை ஈடேற்றுவதற்காக அடுத்த பிறவி

(5ம் பக்கம் பார்க்க)



தமிழர் வீட்டுப் பிள்ளை சிவகுமாரன்!

## சிவகுமாரன் வீரமரணம் அடைந்த இடத்தில் நினைவுச் சின்னம்!

தமிழ் ஈழ மண்ணின் விடுதலைப்போராட்டத்தில் தன்னுயிரையே அர்ப்பணித்த மாவீரன் சிவகுமாரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப் படவேண்டும் என்ற கருத்து பொதுமக்கள் மத்தியிலும் இளைஞரிடையேயும் வளர்ந்துள்ளது.

ஈழத்தமிழர் வரலாற்றிலேயே இதுவரை காணாத வீரத்திருமகனான சிவகுமாரன்—எந்த இடத்தில் பொலீசாருடன் போராடி இறுதியில் அவர்களிடம் மண்டியிட மறுத்து தனக்குத்தானே நஞ்சருந்திக் கொண்டு தன்னைத்தான் அர்ப்பணித்தானோ— அந்த இடத்திலேயே அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப் படவேண்டும் என்று பொது மக்கள் கருதுகின்றனர்.

சிவகுமாரனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் இந்த அபிப்பிராயமே காணப் பட்டது.

## 'அஞ்சாநெஞ்சன்' சிவகுமாரனுக்கு தமிழ் சமுதாயத்தின் இறுதி அஞ்சலி!

### நெஞ்சைப் பிழியவைத்த இறுதி ஊர்வலக் காட்சி!

தமிழ்ச் சமுதாயத்தின் மாவீரன் சிவகுமாரனின் இறுதிச் சடங்குகளில் 50,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும், இளைஞர்களும் யுவதிகளும், மாணவ மாணவியரும்—கலந்துகொண்டு கண்ணீரும் கம்பலையுமாகத் தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

சிவகுமாரனின் 4 மைல் நீளமான இறுதியாத்திரைக் காட்சி பார்த்தோர் நெஞ்சைப் பிழியு வைக்கும் காட்சியாக அமைந்திருந்தது.

சுடுகாட்டில், தலைவர்கள் ஆற்றிய இரங்கலுரையின் பின்னர்—சந்தனக்கட்டை தன்னைத் தானே அழித்துக் கொண்டு மற்றவர்களுக்கு மணம் கொடுப்பது போல —தமிழினத்துக்காக தன்னையே ஈந்த சிவகுமாரனின் சடலம் சந்தனக் கட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்டசிதையின்மீது தகனம் செய்யப்பட்ட போது "ஐயோ' என்று எழுந்த அழுகை யொலிவானை முட்டி மோதி எதிரொலித்து அனைவரையும் துயர வெள்ளத்தில் மூழ்கடித்தது.

பொலிசாரால் தீண்ட முடியாமற் போன அந்தத் தூயதியாக மேனியை அக்கினி தேவன் அன்புடன் ஆரத் தழுவிக்கொண்டான்.

(5-ம்பக்கம் பார்க்க)

ஒரு தமிழன்
தமிழர்க்காய்
உயிர் வாழ்கின்றான்
உயிர்வாழ்வோன்
தமிழர்க்கே
தனை ஈகின்றான்!

—பாரதிதாசன்.

## யார் அந்த இருவர்?

இலங்கை வங்கியில் எழுதுவினைஞர் பதவிகளுக்கு அண்மையில் ஏறத்தாழ நூறு பேர் தெரிவு செய்யப்பட்டுளர். இவர்களில் ஆகஇருவர் மட்டுமே தமிழராம்; இந்த இருவரில் ஒருவர் அரசாங்கத்துக்கு வால் பிடிக்கும் தமிழ் பா. உ. ஒருவரின் மகன். மற்றவர் குறித்த பா.உ.வின் உறவினராம்!

## காசியைவிடுதலைசெய்யக்கோரி மன்னாரில் உண்ணுவிரதம்!

கடந்த இரண்டாண்டு காலமாக விசாரணையோ விடுதலையோ இன்றி சிறை வைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனையும் ஏனைய தமிழ் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அல்லது அவர்கள் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப் படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த 9-6-74 அன்று மன்னார் இளைஞர்கள் ஒரு நாள்

(5-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்குக்கு இரும்புத் திரை!

### இந்திய யாத்திரிகர்கள் செல்ல அனுமதி மறுப்பு!

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் நுழைவதற்கு சமய யாத்திரை மேற்கொண்டு தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் யாத்திரிகர்களுக்கு இலங்கை அரசு தடைவிதித்து வருவதாக அறியப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இரும்புத் திரைபோடும் முயற்சியில இலங்கை அரசு இறங்கியுள்ளதா என்று அவர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

அண்மையில் இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து 87 இந்து யாத்திரிகர்கள் ஈழம் வந்து ஈழத்தின் பல் வேறு ஸ்தலங்களுக்கும் யாத்திரை செய்தனர். ஆனல் அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆலயங்களுக்கும் மற்றும் புனித இடங்களுக்கும் செல்ல முடியாது ஏமாற்றத்துடன் தாயகம் திரும்பினர்.

இதற்கு காரணம் அவர்களுக்கு இலங்கைத் தூதரகம் வழங்கியிருந்த விசாவில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு செல்வதற்கு அனுமதியில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். இதனல் அவர்கள் இவ்விரு மாகாணங்களுக்கும் செல்ல முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

பொதுவுடமை நாடுகளில் கூட சமய ஸ்தலங்களுக்கு செல்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஈழத்தில் மட்டும் தமிழ்மக்கள் வாழும் பகுதிக்கு நாம் செல்லக்

(8ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# இந்திய இராணுவத்தின் வாதரவத்தைப் படுகொலைகள்!

எங்களின் மண்ணில் அநியாயமாக கொல்லப்பட்ட எம் உறவுகளின் நினைவுத்தூபிகள் எம் மக்களின் கண்முன்னே இடித்து அழிக்கப்படுகின்றன.

ஆனால், அமைதிப்படை என்கிற பெயரில் ஈழத்தில் காலடி எடுத்து வைத்து எம் மக்களை அன்று உயிருடன் கொழுத்திய இந்தியப் படைக்கு, அதன் அதிகாரிக்கு யாழில் நினைவுத்தூபியை பராமரித்து நினைவு கூர்வதில் இந்தியா அதிக அக்கறை செலுத்துகிறது. இந்திய அமைதிப்படை ஈழத்தில் நடாத்திய காட்டுமிராண்டித்தனங்களை தொடர்ந்தும் நினைவுபடுத்துவது அனைவரதும் கடமையாகும்.



நினைவு தூபி
சிறீலங்கா இராணுவத்தால் இடிக்கப்பட்டபோது

இந்திய இராணுவத்தின் வாதரவத்தைப் படுகொலை இடம்பெற்று இன்றுடன் 34 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது, இருந்தும் அவர்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே இன்றும் இருக்கின்றது.

அன்று, 1989 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 5 ஆம் திகதி விடிந்தும் விடியாத விடிகாலை பொழுது, நடக்கப்போவதை ஏதுமே அறியாத அந்த இரு கிராமங்களும் மெல்ல மெல்ல துயிலெழுந்தன.

யாழ்ப்பாணம் - வாதரவத்தை - நான்கு பக்கமும் உப்புநீரால் சூழப்பட்ட ஒரு சிறியதரைத் தோற்ற அமைப்பை கொண்ட நிலப்பரப்பு. அன்றாட வாழ்க்கையை இக்கிராமமக்கள் கூலி வேலையையும், விவசாயத்தையுமே நம்பி வாழும் சூழல், ஆனாலும் மழை வீழ்ச்சி தொடர்ந்தும் கிடைக்காத காரணத்தினால் முழுதாக விவசாயத்தை நம்பியும் வாழ்ந்து விட முடியாது.

இதனால் கூலி வேலை என்றாலும், விவசாயம் என்றாலும் அயல் கிராமங்களையே இன்றும் இம்மக்கள் நம்பி வாழ்ந்து வருகின்றனர். “ஒன்பது பேரை இந்தியன் ஆமி பிடித்து அயல் கிராமமான புத்தூர் தகரம் பிள்ளையார் கோவிலடியில் சுட்டுப்போட்டு எரித்து விட்டார்களாம்” என வெளிப்பிரதேசங்களில் இருந்து ஊருக்குள் வருபவர்களால் ஜாடைமாடையாக கசிய விடப்பட்ட செய்தி, ஊர் மக்களையே பதைபதைப்பில் ஆழ்த்தியது.

வாதரவத்தை பகுதி மக்கள் வழமையாக வாதரவத்தை - தகரம்பிள்ளையார் வீதி - புத்தூர் ஊடாக பயணம் செய்வது வழமையாகும். தங்கள் பிள்ளைகள் வேலைக்கு சென்று கொண்டிருக்கும் நேரத்தை ஒவ்வொரு தாய்மாரும் மனக்கண்ணில் எண்ணி பதைபதைத்துக் கொண்டனர்.

கோரமாக சுடப்பட்டு இறந்தவர்களை காண ஊரே திரண்டது. என்மகனா என்று கேட்கும் தாயும், என் கணவனா என்று கேட்கும் துணைவியர்களும் கதறியழுது அவ்விடத்தை நிரப்பி தம் ஒவ்வொரு உறவுகளையும் கொளுத்திய சாம்பலுக்குள் தேடத்தொடங்கினர்.



நினைவு தூபி
இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக
தமிழீழ விடுதலை புலிகளால் அமைக்கப்பட்ட தூபி
சிறீலங்கா இராணுவத்தால் இடிக்கப்பட்டபோது

இந்திய இராணுவத்தின் படுகொலைத் தாக்குதலுக்கு தம்பிராசா லட்சணகுமார், தளையசிங்கம் தயானந்தராசா, சுந்தரராசா வைகுந்தராசா, வல்லிபுரம் துரைராஜசிங்கம், வல்லிபுரம் பாலசிங்கம், தம்பிமுத்து யோகேந்திரம் ஆகிய வாதரவத்தையை சேர்ந்தவர்களும், சம்பவ இடத்தில் தோட்டவேலை செய்து கொண்டிருந்த புத்தூர் கிழக்கு புத்தூர் பகுதியை சேர்ந்த தவசி நல்லதம்பி (நல்லான்), சின்னவன் சிவபாதம், சடையன் கந்தையா ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்து கிடப்பவர்கள் மத்தியில் உறவுகளை தேடுபவர்களுக்கு எரியூட்டப்பட்ட, அரைகுறை எரிந்த உடற்கட்டைகள் தான் மிச்சம் கிடைத்தன.

இந்திய இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் பற்றி விபரிக்கிறார் இறந்தவர்களில் ஒருவரான சின்னவனின் மனைவி வசந்தலீலா, “தம்பி நாங்கள் அதுல தோட்டம் தான் செய்யிறனாங்கள், எங்கட வீடுகளும் பக்கத்தில தான் இருக்கு. அதுல நாலைந்து வீடுகள் இருந்துச்சு எங்கட நிலையான கல்வீடு.

விடியப்பறம் வந்துட்டாங்கள். என்ர மனுசனையும், மாமாவையும் அவற்ற பெரியப்பாவையும் கூட்டிக்கொண்டு அங்கால போனவங்கள், பொம்பளையள் எங்களை எல்லாம் தகரம்பிள்ளையார் கோவிலுக்க கூட்டிக் கொண்டு போய் விட்டிட்டாங்கள்.

அதே நேரத்தில வாதரவத்தையால வந்த ஆறு பேரையும் பிடிச்சு எங்கட மனுசன் இருந்த இடத்துக்கு கூட்டி போனவங்கள். அதுகளும் மணல் ஏத்தப் போற பிள்ளைகள் எல்லாரையும் சுட்டு சத்தம் கேட்டுது. கொஞ்ச நேரத்துல அவங்கள் வாதரவத்தை பக்கம் போட்டாங்கள். நாங்கள் வெளில வந்து பார்த்தால் எரிச்சுகுறையளாக விட்டுப்போயிருக்கிறாங்கள், அதுக்குள்ள என்ர மனுசனும் இருந்தவர், ஒருத்தரையும் அடையாளம் காண ஏலாம இருந்துச்சு.

நான் தம்பி எண்பத்திரண்டாம் ஆண்டு கலியாணம் கட்டினான். சம்பவம் நடக்கும் போது எனக்கு மூன்று பிள்ளைகள். இருக்கிற வீட்டைக்கூட வேற சொந்தக்காரர் தான் பரிதாபம் பார்த்து தந்தவை”. இவ்வாறு கூறி முடித்ததும் அவரின் கண்களில் கண்ணீர் முட்டியது.

நா தழுதழுக்க அந்த தாயின் வாயிலிருந்து வேறெந்த வார்த்தைககளும் வெளிவரவில்லை.

“யாராச்சும் வந்து கேட்பாங்கள் தம்பி இது



# இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக தமிழீழ விடுதலை புலிகளால் அமைக்கப்பட்ட தூபி சிறீலங்கா இராணுவத்தால் இடிக்கப்பட்டபோது



வல்லிபுரம் பாலசிங்கம்



தம்பிராசா இலட்சணகுமார்



சடையன் கந்தையா



சின்னவன் சிவபாதம்



தவசி நல்லதம்பி

யார்கட்டின தூபி என்று. இறந்தவங்களோட நினைவாக இயக்கம் தான் தம்பி அதுல தூபி கட்டினது, உடனையே நான் சொல்லிப்போடு வன் எங்களுக்கு தெரியா என்று. உதுகளால தம்பி கரைச்சல். இருக்கிற பிள்ளைகளையாச் சும் காப்பாத்திட்டேன் என்ற பெருமையோட இனி சாவேன் மோனை". ஏக்கப் பெருமூச் சுடன் எழுந்து சென்றார் அந்த தாய்.

சுட்டு எரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அந்த வீதியில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இரத்தக்கறைகளை காணக்கூடிய தாக இருந்ததாக பிரதேச வாசிகள் நினைவு கூர்ந்தனர்.

குறித்த சம்பவத்தில் கணவனை இழந்த யோகேந்திரம் பத்மாவதி கருத்து தெரிவிக்கை யில், "எனக்கு தம்பி ஒண்டும் தெரியாது. வழமையா வெளிக்கிட்டு போற போல தான் தம்பி போச்சுதுகள். விடியப்பறம் ஒரு ஐந்து மணி ஐந்தரை இருக்கும். வெடிச்சத்தங்கள் கேட்டுது. நாங்கள் நினைச்சுக்கூட பார்க்கலை எங்கட மனுசனும் அதுக்குள்ளே தான், எங்கட சனங்கள் எல்லாம் போச்சுதுகள் அதுகளோட போய்த் தான் தம்பி தெரியும் அகப்பட்டது என்ர மனுசனும் என்று.

பிறகு தம்பி நாங்கள் வாதரவத்தைல இருந்து அக்காச்சி எழுச்சி கிராமத்துக்கு வந்துட்டம். பிறகு இயக்கம் தான் புது வீடு கட்டி தந்தது. இப் பவும் தம்பி நடந்த சம்பவங்களை நினைக்க



## நினைவு தூபி சிறீலங்கா இராணுவத்தால் இடிக்கப்பட்டபோது

உடல் தானாக நடுங்குது". இவ்வாறு கூறிய வாறு கண்களை மறுபுறம் திருப்பி துடைத்துக் கொண்டார்.

புத்தூர் அருகே "கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு" எனும் கிராமம். விடுதலைப் புலி களால் தத்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப் பட்ட ஒரு மாதிரி "கம்யூன்". இந்த கிராம மக்கள் இன்னும் தங்கள் கிராமத்தின் பெயரை "கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடி யிருப்பு" என பெருமையாக சொல்கிறார்கள். விடுதலைப்புலிகளின் வீட்டுத் திட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்த வீடுகள் மட்டுமே இன் னும் அவர்களின் பாதுகாப்பு அரணக்ளாக அசையாமல் உறுதியோடு நிற்கின்றன.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரைக் கேட் டாலும் கப்டன் அக்காச்சி பற்றி "சீவலப்பேரி பாண்டி" கதை சொல்வது போல் கதை கதை யாக சொல்கிறார்கள். கப்டன் அக்காச்சி அந்த கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் உண்டு, உறங்கி, தோட்டங்களிலும் வயல்களிலும் மக்களோடு மக்களாக உழுது, உழைத்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வாழ்ந்திருக்கிறான் என்பதை அந்த மக்கள் சொல்லும் கதைகளிலிருந்து உணரலாம்.

அங்கு 60 வயது நிரம்பிய ஒரு தாயொருவர் கூறுகையில், 1989 ஆம் ஆண்டு. ஆனி மாதம் 5ஆம் திகதி காலையில் தன் கண வனையும் அண்ணனையும் அண்ணனின் மகனையும் ஒரு மருமகனையும் சீமெந்து தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்பி போட்டு பிள்ளைகளை குளிப்பாட்டிக் கொண் டிருந்த நேரம், அக்கம் பக்கமெல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. வாதரவத்தை, "தகரம் பிள்ளையார் கோவிலடி யில் இந்தியன் ஆமி ஆரையோ சுட்டுக் கொண்டு போட்டாங்களாம்".

"ஆரோ எவரோ பாவங்கள்" என பரிதாபப் பட்டுக் கொண்டிருந்த வேளையில் அறிகிறார் அந்த தாய்... அது யாருமில்லை அவரின் கணவனும் கணவனோடு போன அண் ணனும் அண்ணனின் மகனும் மருமகனும் அவர்களோடு இன்னும் 5 பேர். எல்லாரும் அரைகுறை எரிஞ்ச நிலையில் தான், கண் கொடுத்து பார்க்கேலாம இருந்தது. என்றார்.

இதேவேளை இந்திய அரசால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவாக தமிழீழ விடுதலைப்புலிகளால் நினைவு தூபி ஒன்று சம்பவம் இடம்பெற்ற தகரம்பிள்ளையார் கோவிலடியில் தொண்ணூறாம் ஆண்டள வில் நிறுவப்பட்டிருந்தது. இறுதிப்போர் நிறைவடைந்ததன் பிற்பாடு இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு சிறீலங்கா இராணு வத்தினரால் அந்த நினைவுத் தூபி இடித்தழிக் கப்பட்டது.

என்ன ஒரு ஒற்றுமை! கடல் கடந்து வந் தவர்கள் ஆட்களைக் கொன்றார்கள். தேசம் விட்டு தேசம் வந்தவர்கள் தூபியை உடைத் தார்கள்.

கொல்லப்பட்ட எம் மக்களின் நினைவுத் தூபி களும் விதைகளாகிப் போன எம் மாவீரர் களின் உறங்கும் இல்லங்களெல்லாம் அழிக் கப்பட...



தளையசிங்கம் ஜெயானந்தராசா



சுந்தரராசா வைகுந்தராசா



வல்லிபுரம் துரைராஜசிங்கம்



தம்பிமுத்து யோகேந்திரம்

கொலை செய்தவர்களுக்கு எம் கண் முன் னால் தூபிகள் எழுப்பப்பட்டு கொண்டிருக் கின்றன.

கண்ணீரால் அல்ல செந்நீரால் எழுதிய வரலாற்றை சூழ்ச்சியால் மாற்றி எழுதிட விடுத லும் முறையோ?

நன்றி: ஜெகதீஸ்வரன் டிஷாந்த்


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com
kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# தம்பலகாமம் படுகொலை 20 யூன் 1986

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புகழ் பெற்ற கிராமங்களில் ஒன்றாக தம்பலகாமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது.

1986.06.20 அன்று தம்பலகாமம் சந்தியிலிருந்த விமானப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து அக்கிராமத்தில் மேற்கொண்ட தாக்குதலினால் மக்கள் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் பொற்கேணி அரிசி ஆலையில் தஞ்சமடைந்தனர். இந்தவேளையில் அங்குவந்த இராணுவத்தினர் அனைவரையும் கைது செய்து கொண்டு சென்றனர். பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரையும் உள்பந்தை கிராமத்தின் சமுனைஆறு என்னும் இடத்தில் வைத்துச் சுட்டதில் அனைவருமே உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி கனகசபாபதி - -
02. கனகசபாபதி புவனேஸ்வரி - -
03. கனகசபாபதி தாசன் - -
04. கனகசபாபதி தீபன் - -
05. கனகசபாபதி தீசன் - -
06. கனகசபாபதி ரஞ்சி - -
07. கணபதிப்பிள்ளை சபநாயகம் - தொழிலாளி - 51
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் - வியாபாரம் -
09. முனியையா லெட்சுமி - 37
10. சேகர் கந்தமுத்து - -
11. சேகர் கணபதிப்பிள்ளை - -
12. சேகர் வனிதா - -
13. சேகர் ராதிகா - -
14. சுப்பிரமணியம் ஜெயானந் - -
15. சுப்பிரமணியம் ஜெயராணி - -
16. சுப்பிரமணியம் செல்வராணி - -
17. சுப்பிரமணியம் சுதாகரன் - -
18. சுப்பிரமணியம் சசீகரன் - -
19. சுப்பையா சாந்தகுமார் வியாபாரம் -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# பரந்தன் விவசாயிகள் படுகொலை 28 யூன் 1986



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள பிரதேசம் பரந்தன் ஆகும். இந்த மாவட்டத்திற் காணப்படும் நகரங்களில் முதன்மையான ஒரு நகரமாக பரந்தன் விளங்குகின்றது. இங்கு வாழ்பவர்களது பிரதான தொழில் நடவடிக்கையாக விவசாயம் காணப்படுகின்றது. அத்தோடு சிலர் பகுதிநேர மீனவர்களாகவும், கூலித் தொழில் செய்பவர்களாகவும் உள்ளார்கள்.

பரந்தன் நகரமானது, யுத்தகாலத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருந்தது. குறிப்பாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்த இலங்கை இந்தியப்படை 87 இன் பின்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களுக்கும் முகம்கொடுத்த பிரதேசமாக இருந்தது.

28.06.1986 அன்று அதிகாலை 5.15 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல் செய்தவாறு பரந்தனை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் நகரின் பிரதான வீதியை அண்டியுள்ள வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு நின்ற விவசாயிகள் ஏழு பேரைக் காரணமின்றிக் கைதுசெய்து, அவர்களை ஒன்றாகக் கயிற்றினால் பிணைத்துக் கட்டி சித்திரவதை செய்து கொன்ற பின்னர் உயிரற்ற அவர்களது உடல்களை அங்கிருந்த கழிவாற்றுப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றனர்.

அன்றையதினம் 03.30 மணியளவில் வயல் வேலைக்காக வந்தவர்கள் இராணுவத் தாக்குதலினால் உயிரிழந்து கிடந்தவர்களைக் கண்டு அவர்களது உறவினர்களிடமும் கிராம மக்களிடமும் தெரிவித் ததைத் தொடர்ந்து, கிராம மக்கள் அவர்களது உடல்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்தார்கள்.
இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதல்களையும் கெடுபிடிகளையும் தொடர்ந்து பரந்தன் பகுதி மக்கள் 1980களில் சொந்த இடங்களை விட்டு வெளியேறினார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஜோசப் செபஸ்டியன் 44
02. வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் - 23
03. முனுச்சாமி உதயசூரியன் - 17
04. நாராயணப்பிள்ளை நடராசா - 75
05. வினாசித்தம்பி சண்முகநாதன் - 18
06. சுப்பையா கனகசபை - 39
07. ஆறுமுகம் சிவஞானசுந்தரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வீரமுனை படுகொலைகள் 20 யூன் 1990

[illegible] முனைக் கிராமம் அமைந்துள்ளது. வீர முனைக் கிராமத்திற்கு வடக்கே சொறிக்கல் முனையும் தெற்கு மற்றும் மேற்குப் பக்கங் களில் செழிப்பான வயல் நிலங்களும் அமைந் துள்ளன. வீரமுனை தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். சம்மாந்துறைப் பிர தேசம் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கை யின் தென் கடற்கரையோரங்களிலிருந்து போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட முசுலிம்கள் இடம்பெயர்ந்து குடியேறி வாழும் பிரதேச மாகும். இவ்விரண்டு பிரதேசங்களையும் இணைத்து சம்மாந்துறை நகரசபை அமைந் துள்ளது.

1954ஆம் ஆண்டு தனிநபர்களுக்கிடையே நடைபெற்ற தகராற்றினால் சம்மாந்துறை முசுலிம்கள் ஒரு சிலரால் வீரமுனைப் பிர தேசம் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீரமுனை மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் கணபதிபுரம், வீரச்சோலை போன்ற புதிய கிராமங்களை உருவாக் கினார்கள். 1990 யூன் மாதம் மூன்றாம் வாரத் தில் இராணுவத்தினரால் வீரமுனைப் பிர தேசம் சுற்றி வளைக்கப்பட்டது. சுற்றி வளைத்த இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை அருகிலுள்ள

[illegible] எரிக்கப்பட்டனர். மிகுதிப் பேர் விடுதலை செய் யப்பட்டார்கள்.

1990.06.29ஆம் திகதி மீண்டும் மக்கள் தங்கியிருந்த கோயிலுக்கு வந்த இராணுவத் தினர் அங்கிருந்தவர்களில் பலரைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்து சென்றார்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. வீரமுனைப் பிள்ளையார் கோயிலில் தஞ்சமடைந்தவர்களில் பெரும் பாலானவர்கள் இராணுவ அச்சுறுத்தலி லிருந்து தப்புவதற்காக இடம் பெயர்ந்து காரை தீவு மகாவித்தியாலயத்திற் தஞ்சமடைந் தார்கள். 1990.07.03 அன்று காரைதீவு மகாவிதத்தியாலயத்தை சுற்றி வளைதத் இராணுவதத்தினர் பாடசாலையிற் தங்கி யிருந்தவர்களில்தினொரு இளைஞர்களைக் கைதுசெய்து இராணுவ முகாமிற்கு அழைத் துச் சென்றார்கள். இவர்களிலும் எவருமே திரும்பி வரவில்லை.

1990.07.05 மீண்டும் பாடசாலைக்கு வந்த அதிரடிப்படையினர் அங்கிருந்த இளைஞர்கள் பதின்மூன்று பேரைக்கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். காரை தீவு மகா வித்தியாலயத்தில் அதிரடிப்படை

[illegible]

1990.07.26 இல் மீண்டும் வீரமுனை அகதி முகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் முப்பத்திரண்டு இளைஞர்களைக் கைது செய் தார்கள். இவர்களில் இருபத்துமூன்று பேர் பாட சாலை மாணவர்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. 1990.07.29இல் வீர முனைப் பிரதேசத்தில் தமது குடும்பத்தின ருடன் பயணம்செய்துகொண்டிருந்த எட்டுப் பாடசாலை ஆசிரியர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள் இவர்களில்எவரும் திரும்பிவரவில்லை.

1990.08.01 ஆம் திகதி வீரமுனையிலுள்ள சவளக்கடை வீதி வழியாக நாவிதன் வெளிக்குச் சென்ற பதினெட்டுபொதுமக்கள் இராணுவம், காவற்துறை மற்றும் ஊர்காவற் படையினராற் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் ஒரு குழந்தையும் நான்கு பெண் களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் துண்டுகளாக வெட்டப்பட்டு சவளக்கடை கோயிலுக்குள் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

1990.08.12 ஆம் திகதி வீரமுனை அகதி முகாமிற்குக் கூரிய ஆயுதங்கள் துப்பாக் கிகளுடன் வந்த முசுலிம் குழுமுகாமிலிருந்

[illegible] களிலுமாக இருநூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் அல்லது காணாமற் போனார்கள். இரண்டாயிரம் வீடுகள் வரை இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி கணபதிப்பிள்ளை - -
02 இளையதம்பி செல்லம்மா - -
03 இளையதம்பி சின்னப்பிள்ளை - -
04 இராசையா பரமேஸ்வரி - -
05 இராசையா சுபாசினி மாணவி 16
06 இராமநாதன் வாணிதாசன் - -
07 இராமக்குட்டி பொன்னம்மா - 65
08 இராசலிங்கம் அழகையா - -
09 இருளாண்டி அமிர்தலிங்கம் - மாணவன் - 20
10 யு.நடராஜா - 5
11 நாகலிங்கம் தியாகராசா - மேசன் - 31
12 நாகலிங்கம் தவராசா - -
13 நாகலிங்கம் மாரிமுத்து - -
14 நமசிவாயம் தேவராசா - -
15 நடராஜா உதயகுமார் - 7
16 நடராசா இளங்கோ - -
17 நடராசா கிருபைராசா - தொழிலாளி - 39




வீரமுனைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லுமாறு பணித்தனர். ஆலயத்திற்குச் செல்லாது வீடுகளிலிருந்தவர்களை இரா ணுவத்தினர் சுட்டுப் பின்னர் வீட்டுடன் சேர்த்து எரித்தார்கள் வீதிகளில் நடமாடிய பலரும் இராணுவதத்தினராற் சுடப்பட்டார்கள் 1990. 06.20 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு கனரக வாகனங்களில் வீரமுனைப் பிள்ளை யார் கோயிலுக்கு வந்து இறங்கிய இராணுவத் தினர் வீரமுனைப் பிரதேசத்தில் பல பிர தேசத்திலுமிருந்து தஞ்சமடைந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைச் சுற்றி வளைத்து பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கோயிலின் பின் வீதியில் ஒன்று சேருமாறு பணித்தார்கள். இவர்களில் அறுபத்தொன்பது இளைஞர்களை உறவினர்களின் முன்னிலையிற் கைது செய்து அழைத்துச்சென்றனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சம்மாந்துறையிலுள்ள மாஜன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையான சித்திரவதைக்கு உள் ளாக்கப்பட்டார்கள். இவர்களில் ஐம்பது பேர் யினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சித்திரவதைகளின் பின்னர் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களைத் தேடிச்சென்ற உறவினர்களும் இராணுவத்தினரின் தாக் குதல்களுக்கு உள்ளானார்கள். இதனைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் வீரமுனைக்கு அருகிலுள்ள அகதிமுகாமிற்குத் திரும் பினார்கள். 1990.07.10 அன்றும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத் தினர் பதினைந்து இளைஞர்களைக் கைது செய்து, இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று கடுமையான சித்திரவதைகளின் பின்னர் அவர்களையும் உயிருடன் எரித் தார்கள்.

1990.07.16 அன்று வீரமுனை அகதி முகாமி லிருந்து தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற பெண்களில் எட்டு இளம்பெண்கள் மல்வத் தையிலிருந்த இராணுவ சோதனைநிலையத் தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தவர்களை வெட்டியும் சுட்டும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந் தார்கள். பலர் காயமடைந்தார்கள். உயிரிழந் தவர்களில் கோயில் அறங்காவலர் தம்பிமுத்து சின்னத்துரை, இரண்டு குழந்தைகள், மூன்று பெண்கள் உள்ளடங்குவார்கள்.

1990.08.12 இல் முசுலிம்களின் தாக்குதலில் காயப்பட்டவர்கள் முதலில் சம்மாந்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டார்கள். அங்கு அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. பின்னர் அம்பாறை வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டார்கள். வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏழு பேரில் மூன்று பேர் இராணுவத்தினராற் கடத்திச் செல்லப்பட்டார்கள். மிகுதி நான்கு பேர் வீர முனைக்குத் தப்பி வந்தார்கள். வீரமுனையில் அறுநூறு வீடுகளும் வீரமுனைக்கு அருகி லுள்ள கிராமங்களான மல்வத்தை, மல்லிகைத்தீவு, நியூரவுண், கணபதிபுரம், வலாத்பிட்டி, சம்மாந்துறை ஆகிய கிராமங் களில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்திரண்டு வீடுகளும் எரிக்கப்பட்டன.

18 நல்லதம்பி தவராசா - -
19 நல்லதம்பி கோபால் - -
20 நல்லதம்பி வடிவேல் - -
21 நல்லதம்பி விக்னேஸ்வரன் - -
22 க.கறுவல்தம்பி - -
23 க.மாரிமுத்து - -
24 க.அழகையா - -
25 கனகரெட்ணம் யோகராசா - -
26 கனகசபாபதி இளங்கோ - -
27 கந்தையா நவரட்ணம் - -
28 கந்தையா கணேசமூர்த்தி - -
29 கந்தையா கணபதிப்பிள்ளை. - -
30 கந்தையா திசநாயக்க - -
31 கந்தையா தருமலிங்கம் - -
32 கந்தக்குட்டி பாக்கியராசா. - -
33 கந்தக்குட்டி தருமலிங்கம் - -
34 கந்தசாமி விஜயகுமார் - -
35 கந்தவனம் கந்தசாமி - -
36 கந்தவனம் குமார் - -
37 கந்தவனம் ஆறுமுகம் - -
38 கந்தவனம் சோமசுந்தரம் - -
39 காத்தமுத்து நாகேந்திரன் - -
40 காத்தமுத்து சண்முகநாதன் கமம் 40

# வீரமுனை படுகொலைகள் 20 யூன் 1990



41 காளிக்குட்டி உலகநாதன் - -
42 கதிர்காமத்தம்பி கருணாகரன் - -
43 கதிரேசப்பிள்ளை சந்திரசேகர் - -
44 கதிராமத்தம்பி இராசையா - -
45 கதிரவேலு இராசலிங்கம் - கமம் -
46 கதிரவேல் இராஜேந்திரன் - -
47 கதிரவேல் ராதிகாகிருஸ்னன் - -
48 குமாரன் சின்னத்தம்பி - -
49 குலேந்திரன் அஜந்தன் - 3
50 கிருஸ்ணபிள்ளை கனகசூரியம் - -
51 கிருஸ்ணபிள்ளை மோகனராஜ் -
52 கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம் - -
53 கிருஸ்ணபிள்ளை சிதம்பரமூர்த்தி - தொழிலாளி - 21
54 கிருஸ்ணபிள்ளை விஜயகுமாரி - -
55 கிருபானந்தம் அமிர்தலிங்கம் - -
56 கறுப்பையா சிவசாமி - கமம் - 40
57 கறுவல்தம்பி திருச்செல்வம் - -
58 கணபதி குகநாதன் - -
59 கணபதி சந்திரன் - -
60 கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி - -
61 கணபதிப்பிள்ளை புஸ்பலதா - -
62 கணபதிப்பிள்ளை பரசுராமன் - -
63 கணபதிப்பிள்ளை தவராசா - -
64 கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை - -
65 கணபதிப்பிள்ளை சிவபாலன் - தொழிலாளி -
66 கணபதிப்பிள்ளை சிவலிங்கம் - சாரதி - 49
67 கணபதிப்பிள்ளை சண்முகநாதன் - தொழிலாளி - 35
68 கணபதிப்பிள்ளை சண்முகம் - -
69 குணரெட்ணம் சிவகௌரி - -
70 பாவில் சண்முகம் - -
71 பாலன் மகேந்திரன் - -
72 பாலன் கேதரன் - -
73 பாலசுந்தரம் - -
74 பாண்டியன் முனியாண்டி - -
75 பத்மநாதன் விநாயமூர்த்தி - -
76 பழனித்தம்பி மாணிக்கம் - 46
77 பீ.ஜி.பியாந்தன் - -
78 பீ.நந்தசிறி - -
79 பி.மாரியான் - -
80 பீ.சுசிபன் - -
81 ரீ.மாதவன் - -
82 ஐயாத்துரை மகேஸ்வரன் - -
83 ஐயாத்துரை கோவிந்தன் - -
84 கைலாயபிள்ளை தேவராசா - மாணவி - 8
85 வை.இராசதுரை - -
86 வை.பிரான்சிஸ் - -
87 வைரமுத்து கற்பகம் - -
88 வைரமுத்து கோபாலபிள்ளை - -
89 வைரமுத்து தெய்வானை - -
90 வைரமுத்து சிவம் - -
91 தர்மலிங்கம் பொன்னத்துரை - -
92 தம்பிப்பிள்ளை இராசலிங்கம். - -
93 தம்பிப்பிள்ளை கந்தையா - -
94 தம்பிமுத்து கந்தையா - கமம் - 77
95 தம்பிமுத்து தயாபரன் - -
96 தம்பிமுத்து சின்னத்துரை - அறங்காவலர் - 52
97 தம்பிமுத்து சிந்தாத்துரை - விவசாயம் - 70
98 திருநாவுக்கரசு கணேசமூர்த்தி - -
99 திருநாவுக்கரசு கருணாநிதி - விவசாயம் - 18
100 திருநாவுக்கரசு புஸ்பராசா - -
101 தங்கநேசம் வேலுப்பிள்ளை - -
102 தங்கராசா உதயசூரியன் - -
103 தங்கராசா மனோகரன் - 18
104 தங்கராசா ராகினி - -
105 மார்க்கண்டு தங்கவேல் - -
106 மார்க்கண்டு யோகராசா - -
107 மார்க்கண்டு சிவானந்தன் - 29
108 மாசிலாமணி தருமலிங்கம் - -
109 மாசிலாமணி செல்வரட்ணம் - -
110 மாசிலாமணி விநாயகமூர்த்தி - விவசாயம் - 26
111 மாணிக்கம் பாலு - -
112 மாணிக்கம் முருகேசப்பிள்ளை - கமம் - 21
113 மாணிக்கம் ஜெகநாதன் - -
114 முத்துலிங்கம் பாலபாஸ்கரன் - -
115 முத்துலிங்கம் பரமேஸ்வரி - ஆசிரியர் - 32
116 முத்துலிங்கம் செல்லையா - -
117 முருகுப்பிள்ளை தங்கரெத்தினம் - -
118 முருகுப்பிள்ளை தங்கராசா - -
119 முருகுப்பிள்ளை ஞானம்மா - -
120 மருதுரிஸ் செல்வராசா - -
121 முருகேசு உதயகுமார் - -
122 முருகேசு பாஸ்கரன் - -
123 முருகேசப்பிள்ளை பத்மநாதன் - -
124 மணியம் சோமசுந்தரம் - -
125 ஆ.யோகநாதன் - -
126 ஆர்.மயில்வாகனம் - 50
127 அம்பாரக்குட்டி தியாகராஜா - -
128 அழகையா இராமச்சந்திரன் - -
129 அழகையா சாமித்தம்பி - -
130 அழகையா சிவா - -
131 அழகையா வீரசேனன் - -
132 அழகையா ரகுநாதன் - -
133 அரசரெத்தினம் கதிரமலை - -
134 அரசரெட்ணம் மகேந்திரன் - -
135 அரசரட்ணம் வள்ளியம்மை - 58
136 அருளப்பா இந்துருஜன் - -
137 அருணாசலம் இராசரெட்ணம் - -
138 அருணாசலம் சின்னப்பிள்ளை - 55
139 ஆறுமுகம் கந்தசாமி - -
140 ஆறுமுகம் கலா - -
141 ஆறுமுகம் தெய்வேந்திரம் - தச்சுத்தொழில் - 34
142 யோகராசா கிருபானந்தி - -
143 கே.அழகையா - -
144 கே.சிவலிங்கம் - 48
145 கே.ரவிச்சந்திரன் - -
146 பொன்னம்பலம் இராஜேந்திரன் - -
147 பொன்னம்பலம் இராசமணி - -
148 பொன்னுச்சாமி கந்தசாமி - தொழிலாளி - 24
149 பொன்னுச்சாமி கணேசமூர்த்தி - ஆசிரியர் - 26
150 பொன்னையா உதயகுமார் - -
151 பொன்னையா மகேஸ்வரன் - -
152 பொன்னையா வள்ளியம்மை - 67
153 தேவநாயகம் மகேந்திரன் - -
154 சொலமன் சகாயநாதன் - -
155 செல்லையா கிருஸ்ணபிள்ளை - -
156 செல்லையா அசோகன் மின்சாரசபை - ஊழியர் - 24
157 செல்லையா சோமசுந்தரம் - -
158 செல்லையா வடிவேல் - -
159 செல்வன் சிவநாதன் - -
160 செல்லன் அருளம்மா - -
161 செல்லத்துரை தர்மலிங்கம் - -
162 செல்லத்தம்பி கருணாநிதி - கடதாசிஆலை ஊழியர் - 24
163 வெள்ளையன் மாணவன் 7
164 வேல்முருகு முத்து - -
165 வேலுப்பிள்ளை நாகேந்திரன் - -
166 வேலுப்பிள்ளை காசியானந்தன் - -
167 வேலுப்பிள்ளை கதிரமலை - -
168 வேலுப்பிள்ளை திருச்செல்வம் - தொழிலாளி - 22
169 வேலுப்பிள்ளை யோகராசா - -
170 வேலுப்பிள்ளை தெய்வநாயகம் - -
171 வேலுப்பிள்ளை சந்திரகுமார் - -
172 வேலுப்பிள்ளை சுதாகரன் - -
173 ரெட்ணம் செல்வராசா - கமம் - 20
174 சு.மனோகரன் - -
175 சந்திரன் அருளப்பன் - -
176 சுப்பிரமணியம் நடேஸ்வரன் - -
177 சாமித்தம்பி கணபதிப்பிள்ளை - -
178 சாமித்தம்பி குணசீலன் - -
179 சாமித்தம்பி தங்கவேல் - மாணவன் - 17
180 சாமித்தம்பி சுப்பிரமணியம் - -
181 சதாசிவம் புவனேந்திரன் - -
182 சதாசிவம் தேவராசா - விவசாயம் - 18
183 சின்னத்துரை காளிக்குட்டி - -
184 சின்னத்தம்பி குகதாஸ் - -
185 சின்னத்தம்பி திலகேஸ்வரி - -
186 சின்னத்தம்பி அண்ணாதாசன் - -
187 சின்னத்தம்பி வன்னியசிங்கம் - -
188 சின்னதம்பி ரவிச்சந்திரன் - சாரதி - 22
189 சின்னையா முத்தையா - -
190 சீனி இந்திரன் - -
191 சீனி தவசீலன் - -
192 சீனி ஜெயசீலன் - -
193 சீனித்தம்பி மாரிமுத்து - -
194 சீனித்தம்பி வேல்முருகு - -
195 சித்தாத்துரை காளிக்குட்டி - கமம் - 47
196 சித்தாத்துரை செல்வராசா - -
197 சித்தாத்துரை சம்பந்தன் - விவசாயம் - 24
198 சித்தாத்துரை தவராசா - -
199 சித்தாத்துரை தேவராசா - -
200 சித்தாத்துரை வேவி - -
201 சித்தாத்துரை சம்மந்தன் - விவசாயம் 24
202 சித்திரவேல் பத்மநாதன் - -
203 சிவனடியார் ரவிச்சந்திரன் - -
204 சிவானந்தன் இந்திரன் - -
205 சிவானந்தன் பாலச்சந்திரன் - -
206 சிவானந்தன் ரவிச்சந்திரன் - -
207 சிவஞானம் கணேசன் - -
208 சிவசம்பு தேவராசா - -
209 சங்கரப்பிள்ளை அற்புதராசா - -
210 சங்கரப்பிள்ளை வில்வராசா - விவசாயம் - 20
211 சலமன் மோகனராஜன் சகாயநாதன் - வியாபாரம் - 22
212 சண்முகம் இளஞ்சேகர் - மாணவர் -
213 விநாயகமூர்த்தி பாலு - -
214 வீரக்குட்டி கிட்ணன் - -
215 வீரபாண்டியன் ஜமுனா - -
216 வள்ளியம்மை - -
217 ராமன் - -
218 ரவி தில்லையம்மா - -
219 ஏ.ஈ.தேவதாசன் - -
220 ஏ.கனகரெத்தினம் - -
221 ஏ.பரமநாதன் - -
222 ஏ.முருகேசபிள்ளை - -
223 ஏ.சுபாசினி - மாணவி 1- 7
224 ஏ.சின்னப்பிள்ளை - 50
225 ஏ.சித்திரவேல் - -
226 ஏ.சிவநேசன் - -
227 ஏ.ஏ.சண்முகவேல் - -
228 எஸ்.மாணிக்கம் - 35
229 என்.இராசன் - -
230 என்.சந்திரகுமார் - -
231 ஏகாம்பரம் தருமலிங்கம் - -
232 எம்.முத்துக்குமார் - -
233 எம்.அருள்மணி - -

வீரமுனையில் வேறு தினங்களில் உயிரிழந்த சிலரது விபரங்கள் (பெயர் தொழில் வயது)

01 15.03.1985 சதாசிவம் சண்முகராஜா - கமம் - 23
02 25.10.1985 சின்னத்தம்பி நவரட்ணராசா - விவசாயம் - 19
03 08.09.1988 காளிக்குட்டி நவரெட்ணம் - தொழிலாளி - 23
04 13.01.1989 சேதுமதி குணரட்ணம் - கமம் - 33
05 11.06.1990 கணபதிப்பிள்ளை கந்தசாமி - தொழிலாளி - 27
06 15.06.1990 பாலசந்திரபோஸ் சுபாஸ்சந்திரபோஸ் - தொழிலாளி -16
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் - கமம் - 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் - தச்சுத்தொழில் - 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் - மாணவன் - 18
11. சவரிமுத்து ரஞ்சன் - கமம் - 22
12. சற்குணநாதன் ரஞ்சிதகுமார் - வியாபாரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பேசாலைத் தேவாலயப் படுகொலை – 17 யூன் 2006






2006 ஜீன் 17ஆம் நாள் அதிகாலை மன்னார் பேசாலைக்கடற்பரப்பில் சிறீலங்காக் கடற் படையினருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியை அடுத்து பேசாலையிலுள்ள தமிழ்க் குடி மக்களை பழிவாங்கத் தொடங்கினார்கள். தமிழர்கள் வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ் சம் புகுந்தார்கள். கடற்சண்டையில் தோற் கடிக்கப்பட்ட கடற்படையினர் பேசாலைப் பகு தியைச் சுற்றிவளைத்து கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டார்கள். அவ்வாறாக சுட்டுக்கொண்டு வந்த இரா ணுவத்தினர் தேவாலயத்தினுள்ளே திரண்டு நின்ற மக்கள் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் ஒரு பெண் கொல்லப்பட்டார். கடலில் நிகழ்ந்த மோதலைப் பார்ப்பதற்காக கடற்கரைக்குச் சென்ற மீனவர் கள் மீதும் கடற்படையினர் கண்மூடித்தன மான தாக்குதலை மேற்கொண்டனர். 05 மீனவர்கள் அவர்களது படகுகளுக்கு உள் ளேயே இறந்து கிடக்க காணப்பட்டனர். கரை யிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் சிறீலங்காக் கடற்படையினரால் தீ மூட்டப் பட்டுள்ளன. 40படகுகளும் 25வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. 10மில்லியன் பெறு மதியான மீன்பிடி வலைகளும் எரிக்கப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. மணவள் கிளாரம்மா லீலா, 75
2. ஜேசுதாசன் ஜூட் நிக்சன், 23
3. சிறிலப்பர் புனித ஜூட், 22
4. துரைராஜா விஜயகுமார், 39
5. கோடலிங்கம் லிங்கநாதன், 20
6. அப்துல் ரஹீம் லத்தீப், 28













# புதுக்குடியிருப்பு படுகொலை – 15 யூன் 2008





முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஒரு பெரிய நகரமாகும். 2008 யூன் 15ம் திகதியனறு சிறீலங்கா விமானப்படையின் இப்பகுதி மீது பரவலாக குண்டுள் வீசினர். நாலு பொதுமக்கள் கொல்லப் பட்டனர். மேலும் 10 பொதுமக்கள் காயப்பட்டனர். பாடசாலை, வைத்தியசாலை, கோவில், சந்தை, கடைகள் யாவும் சேதமடைந்தன. புதுக்குடியிப்பு வைத் தியசாலை, புதுக்குடியிருப்பு மகாவித் தியாலயம், கல்வித் திணைக்கள அலுவலகம், சிறீ கந்தசாமி முருகன் கோவில் ஆகியன சேதமடைந்தன. ஏழு வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன. மேலும் 25 வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஐயாத்துரை சுந்தரலிங்கம், 47
02. சுப்பிரமணியம் சுகந்தன், 19
03. தேவராசா பானுசன், 19
04. வ. நாகதம்பிராசா, 20

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)














ஐயாத்துரை சுந்தரலிங்கம், 47


வ. நாகதம்பிராசா, 20



# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

**RASAN** Cell: 647.532.4162
Off: 647.821.0356

rassan311@gmail.com www:jathurenovation.com



## Preparation of Income Taxes T1 and T2 with E/File

**Location:**
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6

Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

The ESTATE BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4

Tel:416 400 5993

info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com






# ஈமச் சின்ன வடிவங்கள்

✍ இலங்கையில் பெருங்கற்கால மக்கள் உருவாக்கிய ஈமச் சின்னங்கள் அவர்கள் வாழ்ந்த இடத்தின் பௌநீக வளங் களுக்கு ஏற்ப அவற்றின் வடியங்களும், தன்னமகளும் வேறு பட்டனவாக காணப்படுகின்றன.

அவை இறந்தவர்களது உடல்கள் உயர்வான முறையில் அடக் கம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டன என்பதை அவற்றின் வடிவமைப்புக்களும் அவற்றில் இடப்பட்ட நிவேதனப் பொருட்களும் உறுதி செய்கின்றன. இலங்கையில் உயர்வான தொழில் துட்பத்தைப் பயன்படுத்தி கற்களை அறுத் தும். இயற்கையான பாறைகளைச் செதுக்கியும் ஈமச்சின் னங்கள் அமைக்கப்பட்ட பிராந்தியங்களில் வடக்கு மற்றும் வடகிழக்கு இலங்கைக்கு தனிச்சிறப்புண்டு. இங்கு மிகப்பெரிய கற்கள் கொண்டு ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்பட்டாலும் அவற்றை அமைப்பதில் சில வேறுபாடு காணப்படுவதாய் தொல்லியலாளர் அவற்றின் வடி வங்களுக்கு வேறுபட்ட பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர் நான்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி அறைபோன்ற வடிவில் அமைக்கப்பட்டு நான்கு கற்களும் நிலத்திற்கு கீழே அமைய அதன் மேற்பாகம் கற்களால் மூடிய நிலையே கல்லறை (Cistburial) எனப்படும். இத்த நான்கு கற்களும் நிலத்திற்கு கீழே அமைய அதன் அரைப்பங்கு நிலத்திற்கு மேலே மூடிய நிலை யிலுள்ள ஈமச்சின்னம் கற்பதுக்கை என அழைக்கப் படுகிறது. (DolmentCist), இந்த நான்கு ஈற்களும் நிலத்திற்கு மேலே அமைந்து அது மேசை வடிவிலாக இருக்கும் போது அது கற்திட்டை, (Dolment) எனப் பெயர் பெறுகிறது. இன்னும் சில கல்லறைகள் மூன்று அல்லது நான்கு பகுதிகளாக அமைக்கப் பட்டு அவற்றில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஈமச்சின்னம் தொடர் கல்லறை என அழைக்கப்படுகிறது. (Transcpted Cistburial). சில ஈமச்சின்னங்களில் அல்லறையில் அல்லது தாழியில் இறந்தவரது உடலை இட்டு அதைச் சுற்றி சுற்களால் மூடிய வடிவம் பரல் உரு புதுக்கை என அழைக்கப்படுகிறது (Stonecrcleburial). இப்பெயர்கள் இலங்கை தென்னிந்திய பெருங்கற்கால சமச்சின்னங்கள் பற்றிய ஆய்வுகள் ஆரம்பிக்கப் பட்ட காலங்களில் தொல்லியலாளரால் பயன்படுத்தப்பட்டு வந் தாலும் சமீப காலங்களில் இவ்வடிவங்கள் எல்லாம் பொதுவாக கல்லறை மற்றும் கற்பதுக்கை என்ற பெயர்களுக்குள் உள் ளடக்கப்படுவதைக் காணலாம்.






**கல்லறை (CistBurial)**

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களுள் கல்லறை மிக முக்கியமானதாகும். இவ் விமச்சின்னங்கள் ஆந்திராவில் உள்ள சித்தூர். தமிழகத்தில் புதுக்கோட்டை மற்றும் தமிழகத்தின் கிழக்கு கரையோரப் பிரதேசத்தில் காணப்படும் கல்லறைகளை ஒத்திருப்பதால் அங்கிருத்தே வடகிழக்கு இலங்கைக்கு இவ்வமச்சின்ன மரபு பரவியதாகக் கூறப்படுகிறது (Seneviratne 1984:283). இவ்வகை மச் சின்னங்கள் இலங்கையில் யான்ஓயா கழிமுகப் பிர தேசமும், தம்மன்ன கொடள்ள, குருஹல்மின்ன, வடிகவன, கொக்கட்ட நிபுல்வ, ராபாவு, மாமடுவ, மச்சசும், இப்பன்கட்டுவ, பின்வேல போன்ற இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது. (மேற்படி 1984:246.260). இப்பண்பாடு நிலவிய காலகட்டத் தில் தமிழ் இனக்குழுவினர் வாழ்ந்ததை திருகோணமலை மாவட்டத்தில் சேருவில் என்ற இடத்தில் காணப்படும் பிராமிக் கல்வெட்டும் சான்று பகர்கிறது. (இந்திரபாலா 2006 192). வடகிழக்கு இலங்கையில் நிலவிய எல்லறை ஈமச்சிள்ள மரபே இங்குள்ள நதிகள்

**கற்பதுக்கை (Dolment)**

இலங்கையில் பின்பற்றப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகளுள் கற்பதுக்கையும் ஒன்றாகும். தோற்ற அமைப்பில் இது கல்லறையை ஒத்திருந்தாலும், கல்லறையில் நான்கு சுற்பலகைகளும் மண்ணில் புதையுண்டிருக்கும் போது கற் பதுக்கையில் அக்கற்பலகைகளின் ஒருபகுதி நிலத்திற்கு கீழே அமைய ஏனைய பகுதிகள் நிலத்திற்கு மேலே இருக்குமாறு அமைக்கப்பட்டிருப்பது சிறிய வேறுபாடாக உள்ளது. தமிழகத் தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய இவ் வீமச்சின்ன மரபு சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து பின்பற்றப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப் படுகின்றன (ராஜன் 2004:28-30). அதிலும் சங்க இலக்கியத்தில் இவ்வீமச் சின்னம் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படு கின்றன. இதற்கு உதாரணமாக அகநானூற்றில் வரும் ”அம் பின் விசை இட வீழ்தோர் எண்ணு வரம்பு அறியா உ.வல் இடு பதுக்கை” (அகம் 109:7-8),”வில் இட வீழ்ந்தோ பதுக்கை” (அகம் 157:5), புறநானூற்றில் வரும் “அம்புவிட வீழ்தோ வய்யப் புதுக்கை” (புறம் 3:21), நற்றிணையில் “புதுக்கை நீழல் ஒதுக்கு இடம் பெறாஅ” முதலான செய்திகளைக் குறிப்பிடலாம். இலங்கையில் இவ்வகை ஈமச்சின்னங்கள் காணப்படும் இடங் களில் கிழக்கு இலங்கையில் கதிரவெளி. படிசும்பொல ஆகிய இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதையொத்த கற்பதுக் கைகள் பண்டைய சேரநாடான தற்போதய கேரள மாநிலத்தில் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்தே இம் மரபு இலங்கைக்கு பரவியதெனக் கூறப்படுகிறது (Sitrampalam 2001:78).

**கல்வட்டங்கள் (Stonecircle)**

பெருங்கற்சுரவ சமச்சின்னங்களின் இன்னொரு வடிவம் கல் வட்டங்களாகும். தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பெரி தும் பின்பற்றப்பட்ட ஈமச் சின்னங்களில் இதுவும் ஒன்றாகும். நிலத்தின் தன்மைக்கு ஏற்ப ஆழமாக குழியமைத்து அதற்குள் இறந்தவரது உடயின் பாகங்களையும், நிவேதனப் பொருட் களையும் தாழியில் அல்லது கல்லறையில் இட்டு அதைச் சுற்றி வட்டமான கற்களை குவியலாக முடுவதன் மூலம் இவ்வகை ஈமச்சின்னம் உருவாக்கப்படுகிறது. சில இடங்களில் வட்டமான கற்களுடன் சதுரம் அல்லது முக்கோண வடிவிலான கற்களைக் கொண்டும் ஈமச்சிள்ளங்கள் அமைக்கப்பட்டதுண்டு தமிழகத் தில் இவ்ளீமச்சின்னத்தில் இறந்தவர் நிளைவாக தடுகற்கள் நாட்டப்பட்டும் கானபப்படுகிறது. சங்ய இலக்கியத்தில் இவ்லிமச் சின்னங்கள் பரல் உயர் பதுக்கை எனப் பய இடங்களில் கூறப் பட்டுள்ளதால்

**பரல் உயர் பதுக்கை – செட்டிக்குளம்**

தமிழில் கல்வட்டங்கள் என்பதற்குப் பதிலாக பரல் உயர் பதுக் கை என்றே இன்று அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம் (ராஜன் 2004: 27-30), அகநானூற்றில் “பரல் உயர் பதுக்கை” என வரும் குறிப்பு (அகம் 91:10) புறநானூற்றில் “பரலுடை மருங் கின் பதுக்கை சேர்த்தி, மரல் வகுந்து தொடுத்து செய்பூங்கண் ணியொடு, அணி மயிற் பிலி சுட்டி, பெயர் பொறிந்து இளி நட் டனரே கல்லும் ஈன்றொடு கறவை தந்து பகைவர் ஓட்டிய நெடுந்தை” எனக் கூறப்பட்டுள்ளது (புறம் 264:8-13), இதற்கு பரல் உயர் புதுக்கையுடன் நடுகல்லும் நாட்டப்பட்டிருந்ததே காரணமாகும்.



பரல் உயர் பதுக்கை – செட்டிக்குளம்

ஈழத்தில் இவ்வகை ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு இடமாக வடஇலங்கையில் உள்ள மாமடு என்ற இடம் குறிப்பிடப்படுகிறது. இந்நிலையில் இவ்வகை ஈமச் சின்ன மொன்று இக்கட்டுரை ஆசிரியரால் அண்மையில் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குள பிரதோசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொங்குராயன்மலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. இவ்லமச் சின்னம் முழுமையாக அகழ்வாய்வுக்கு உட் படுத்தப்படுமானால் இப்பிரதேசத்தின் பூர்வீசு வரலாறு புது வெளிச்சம் பெறும். ஆயினும் யானைகளின் அதிக நடமாட்டம் இவ்விடத்தில் நீண்டநேரம் தங்கியிருந்து அகழ்வாய்வு செய்யத் தடையாக உள்ளது. எழுது ஆய்வின் போது இதன் சுற்றாடலில் 10 -ற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும் புராதன குடியிருப் புக்களுக்குரிய சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. 2ஆம் கி.பி.4ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத் தைச் சேர்ந்தவையாக உள்ளன. இவ்வாதாரங்கள் முன்பொரு காலத்தில் இப்பிரதேசத்தில் செறிவான குடியிருப்புக்கள் இருந் ததை உறுதிசெய்கின்றன.

**குடைக்கல் ஈமச்சின்னம் (Umbrellastone Burial)**

பெரிய கல்லின் வெளிப்பாகத்தை குடைபோன்ற வடியில் செதுக்கி அதன் கட்பாகத்தில் ஆழமான குழியை ஏற்படுத்தி அதற்குள் இறந்தவரது எலும்புகளுடன் திவேதனப் பொருட் களையும் இட்டு அடக்கம் செய்யப்படும் முறை குடைக்கல் ஈமச்சின்னம் என அழைக்கப்படும். தமிழகத்தில் சேர நாட்டில் (இன்றைய சோளம்) இது அதிக அளவில் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஈதத்தில் இவ்வலையான ஈமச்



சாட்டி அகழ்வாய்வு - 2004-2005

சின்ன மரபு பின்பற்றப்பட்டிருந்ததற்கு இதுவரை உறுதியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் 2005ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வேலணைக் கிராமத்தில் சாட்டி என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவ்வகை ஈமச்சிள்ள மரபு இருந்திருக்கலாம் என்பதற்கு ஆதாரம் கிடைத்துள்ளது. இங்கு பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சுறுநியான ஆதாரங்கள், தொல்லியல் மேலாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (சிற்றம்பலம், சுயபரியவால 1985). அப்பின்னணியில் வைத்து நோக்கும் போது இங்கு கண்டுபிடிக்கப்பட்ட குடைக்கல் ஈமச்சின்னத்தைப் பெருங்கற்காலத்தைச் சேர்ந்ததாகக் கருத இடமுண்டு, வைரமான கற்கள் எதுவும் காணப்படாத இப்பிராந்தியத்தில் இவ்மைச் சின்னம் மட்டும் வைரமான ஈல்லில் அமைக்கப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. ஏறத்தாழ இரண்டடி உயரமுடைய வைரமான இக்கல் குடை போன்ற வடிவில் அதன் மேற்பாகம் செதுக்கப் பட்டு, அதன் உட்பகுதி ஒன்றரை அடி ஆழத்தில் வட்டமாகத் குடையப்பட்டு அதற்குள் மனித மிருக எலும்புகள் வைக்கப்பட்டு மண்ணில் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனுள் இருந்த எலும்புகளை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பலகலைக் கழக மருத்துவ பீடத்தினர் அவற்றுள் சிறிய எலும்புகள் வயது குறைந்த மனிதனுக்கு உரியதெனவும், மிகப் பெரிய எலும்புகள் குதிரைக்கு உரியதெனவும் அடையாளப்படுத்தி உள்ளனர். இவ்விமச்சின்னம் காணப்பட்ட குழிக்குள் கனிவிரும்புகளுடன் (Iron Slacks), பல வகைப்பட்ட மட்பாண்ட ஓடுகளும் கிடைந்திருப்பதால் சேர நாட்டை ஒத்த குடைக்க சமச்சிள்ள மரபு சாட்டியிலும் பின்பற்றப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

**தாழியடக்கம் (Urn Burial)**

தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பலவகை ஈமச்சின்னங்கள் பயன்பாட்டில் இருந்த போதும், சங்க இலக்கியத்தில் அதிகம் பேசப்படும் ஈமச் சின்னங்களில் ஒன்று தாழியடக்கமாகும். இது பெருங்கற்காலப் பண்பாட்டின் இறுதியில் இருந்த நிலையைப் பிரதிபலிப்பதாக தொல்லியலாளர் கருதுகின்றனர். இம்மரபு சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதற்கு பழந்தமிழ் இலக்கியத்தில் வரும் இரு பாடல்களை உதாரணங்களாகக் காட்டலாம்

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி

மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியடு,

அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து

இனிநட்டனரே! கல்லும், கன்றொடு

கறவை தந்து பகைவர் ஓட்டிய

நெடுந்தகை கழிந்தமை அறியாது

இன்றும் வருங்கொல், பாணரது கடும்பே?

(உறையூர் இளம்பொன் வாணிகனார் 264)

“கடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர். தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்” (மணிமேகலை 6.11.11.66-67),

இதில் ஈடுபவர்களையும் (Cremation), இறந்தவர்களை ஓரிடத்தில் வைப்பதையும் (Post-excarnation), குழியில் இடுவதையும் (Piburil), நிலத்திற்கடியில் கல்லறை அமைத்து வைப்பதையும் (Rockchunbeurcitburial), காழிகளில் இட்டு அதன் மேல் மூடி கொண்டு மூடுவதையும் (Umburialencappedwithilid) தெளிவாகக் குறிப்பிடுகிறது. பெருங்கற்காலத் தாழியடக்க முறையில் தாழிகள் பெரும்பாலும் கரும் சிவப்பு பானையோடுகளால் வளையப்பட்ட மூடிகள் கொண்டு மூடப்பட்டிருந்ததை அகழ்வாய்வுகளில் கிடைந்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இதனை நற்றிணையில் வரும் “மா இருந் தாழி கவிப்ப, நா இன்று கழிக ஏந் கொள்ளாக்- சுற்றே” என்ற வரிகள் உறுதி செய்வதாக உள்ளன (நற்றிணை 271:11- 12). சங்க காய மன்னர்கள் தாழியிலும் அடக்கம் செய்யப்பட்டனர் என்பதை பதிற்றுப்பத்துப் பாடலும் (44.11, 11.22-23), புறநானூற்றில் வரும் பாடல்களும் (புறம்: 228.1, 10-15) உறுதி செய்கின்றன. சாதாரண பெண்களும் தாழியில் அடக்கம் செய்யப்பட்டனர் என்பதற்கு தும்பிசேர் கீரனார் தமது “கலம் செய்கோவே கலம் செய்கோவே”எனத் தொடங்கும் சிறப்புமிகு புறப்பாடலில் குறிப்பிடுகிறார்( புறம் 256.1-7). இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பன்பாட்டுக்குரிய தாழியடக்க முறை சங்க காலத்திலும் நீளக் கிடத்தி அடக்கம் செய்யும் ஈமச்சின்னம் (Extended Burial).

இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்டிருந்த இலகுவான ஈமச்சின்ன முறைகளில் ஒன்று நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் முறையாகும். இது இறந்தவாது உடலை நிலத்தில் நீள்சதுரமாக வெட்டப்பட்ட குழிக்குள் வைத்து அவ்வுடலைச் சுற்றி பலவகை மட்பாண்டங்களில் படையற் பொருட்களை இட்டுப் பின்னர் அவ்வுடலை மண்ணால் மூடிவிடும் முறையைக் குறிக்கிறது. தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் மதுரை, இம்முறை பின்பற்றப்பட்டிருத்ததற்குப் பரவலான சான்றுகள் கிடைத்துள்ளன. இதற்கு மணற்பாங்கா இவ்விடங்களில் ஈமச் சின்ளங்களை அமைப்பதற்குரிய கற்கள் காணப்படாமையே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. இலங்கையின் இவ்வகையான சமச்சின்னங்கள் மணற்பாங்கான வடக்கு, வடமேற்கு இலங்கையில் உள்ள ஆனைக்கோட்டை, காரைநகர், மாநோட்டம் ஆகிய இடங்களில் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பெருங்கற்கால மனிதன் - ஆனைக்கோட்டை Mala Begley:1981-53-95,

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

கமபரியலால் 1987). அவற்றுள் ஆனைக்கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட சமச்சின்னங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்விடம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாத்துறை கடற்பகுதிக்கு

அண்மையில் அமைந்துள்ளது. இத்தொல்லியல் மையத்தைக் கண்டுபிடித்த கலாநிதி இரகுபதி இங்கு இரண்டு சதுரமைல் பரப்பில் ஆறு தொல்லியல் மையங்களும். இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களும் இருக்கலாம் எனக் கூறுகிறார். 1980 இல்பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்துமேற்கொண்ட அகழ்வாய்வில் இரு இடங்களில் நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட இரு சமச்சின்னங்கள் (Extendedburials) கண்டுபிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் என்ற வகையில் இவற்றிற்குத் தனி முக்கியத்துவம் உண்டு. இவ்விரு சமச்சின்னங்களும் பத்தடி இடைவெளியில் தான்படிஉயரம் கொண்ட மண்மேட்டின் மூன்றாவது மண்படையில் கண்டு பிடிக்கப்பட்டன. அவ்னீமச் சின்னங்களில்கிழக்கு மேற்குத் திசையை நோக்கிய வண்ணம் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஏறத்தாழ 5 அடி நீளமுடைய இரு மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் முதலாவது ஈமச்சின்னம் (Extendedburial) சற்றுக் காலத்தால் முற்பட்டதாகக் கணிக்கப் பட்டுள்ளது. அதில் இரு கைகளும் ஈட்டப்பட்ட மனித எலும்பைச் சுற்றி பலவகைப்பட்ட மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. அம்மட்பாண்டங்களில் கறுப்புச் - சிவப்பு. தனிக்கறுப்பு, சிவப்பு நிற கிண்ணங்கள், வட்டில்கள், பாளைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில


சாட்டி அகழ்வாய்வு - 2004-2005


குடைக்கல் – சாட்டி

மட்பாண்டங்களில் சுறா, மீன் மிருக எலும்புகள், நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் யைக்கப்பட்டிருந்தன. சில மட்பாண்டங்களில் குறியீடுகள் காணப்பட்டன. அத்துடன் தலைமாட்டில் வைக்கப்பட்ட ஈறுப்புச்-சிவப்பு நிற வட்டிலில் சுறா எலும்பு மாலையுடன் குறியீடும், பிராமி எழுத்துப் பொறித்த கொண்ட முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாவது சமச்சின்னம் சற்றுக் காலத்தால் பிற்பட்டதென் பதை அவ்வீமச்சின்னத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரோம மட்பாண்டங்கள் (RoulettedWare), இலக்குமி நாணயம் என்பன உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் ஈமச் சின்னத்தின் அமைப்பும். அதனுடன் காணப்பட்ட மட்பாண்டங்களும், படையற் பொருட்களும் முதலாவது ஈமச்சின்னத்தை பெருமளவுக்கு ஒத்தளவாகக் காணப்பட்டன. இவ்வீமச் சின்னங்களின் காலத்தை உறுதிப்படுத்தக்கூடிய விஞ்ஞானபூர்வமான காலக் கணிப்பு முறை பயன்படுத்தப்படாவிட்டாலும் இங்கு கிடைத்த காலத்தை வரையறை செய்யக் கூடிய மட்பாண்டக்குறியீடுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள். முத்திரை மோதிரம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ்னீமா சின்னங்களின் காலத்தை 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறலாம்.


பெருங்கற்கால மனிதன் - ஆனைக்கோட்டை

**குழியடக்கம் (Pic Burial)**

இது பெருங்கற்கால மக்களால் பின்பற்றப்பட்ட இன்னொரு வகை ஈமச்சின்ன வடிவமாகும். இது நிலத்தில் செயற்கையான குழியொன்றை அமைத்து அதற்குள் இறந்த மனிதனின் உடலை முழுமையாகவோ அல்லது உடலின் முக்கிய பாகங்களையோ குழிக்குள். அல்லது குழிக்குள் வைக்கப்பட்ட மட்பாண்டத்திற்குள்ட்டு அதன் அருகே மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்கனள் வைத்து பின்னர் குழியின் வாய் பகுதியை கற்பலகைகள் கொண்டு மூடிவிடுவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. தீபகற்ப இந்தியாவில் இவ்வகையான குழியடக்கங்கள் தக்கணம் மற்றும் தென்வித்தியா அதிலும் சிறப்பாகத் தென்தமிழகத்தில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சில இடங்களில் கற்பதுக்கை மச்சின்னத்துடன் இணைந்த நிலையில் காணப்பட்டன. ஆனால் ஈழத்தில் பொம்பரிப்பு, மகேளிற்ற ஆகிய இடங்களில் தனித்தும், பிள்வேவ கல்அதற ஆகிய இடங்களில் கல்லறையுடன் இணைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது (Beghy 1970:69).

அண்மையில் சாட்டி என்ற இடத்தில் இக்கட்டுரை ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் குழியடக்க முறையைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்விடம் யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்தின் நடற்கரைப்பகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் சாட்டியும் ஒன்றாகும். 2005-ஆம் ஆண்டு இவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருந்ததற்கானசான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 10 மண்மேடுகள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கிருந்த சமச்சின்னங்கள் 1 முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச் சின்னத்தை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவற்றின் அத்திவாரங்கள் சில ஈமச்சின்னக் குழிகளில் கற்களைக் கொண்டு நட்சத்திர வடிவிலும், எனையவை ஈடுமண், மரம், சுல் என்பவற்றைப் பயன்படுத்தி வட்டவடிவிலும் அமைக்கப்பட்டிருந்ததை அடையாளம் காணமுடிந்தது. இவ்ஸீமாசின்னங்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு விதிமுறைப்படி அமைக்கப்பட்டவையாகும். அதில் பெருங்கற்கால சின்னங்களுடன் காணப்பட்ட மனித எலும்புகளை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எவரமான நற்பலகைகள் பிற இடத்திலிருந்து கொண்டு வந்து பயன்படுத்தப் பட்டுள்ளமை ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதன் முக்கியத்துவத்தை புலப்படுத்துவதாக உள்ளது.

இப்பலகைகள் பெரும்பாலும் குழிக்குள் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்கே பயன்படுத்தப்பட்டன. சில குழிகளில் மட்பாண்டங்களில் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்காகவும் இவை பயன் படுத்தப்பட்டன. இவ்வீமச் சின்னங்களில் மனித எலும்புகளுடன் சில வகை மிருகங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகளும் இடப்பட்டிருந்தன. மேலும் மனித எலும்பைச் சுற்றி பல அளவிலும், பல வடிவங்களிலும் வைக்கப்பட்டிருந்த மட்பாண்டங்களில் இரும்புக் கருவிகளுடன் பெருமளவிலான களிவிரும்புகள் (Ironslack) ,கல்மணிகள், கைவளையல்கள், தானியவகை, சங்கு, சிற்பி, வேட்டைக் கருவிகள், கூராகத் தீட்டப்பட்ட பெருமளவு மான்கொம்புகள், மருத்துவ உபகரணங்கள் (அம்மி. சாணைக்கற்கள்), சங்கு, சிற்பி, நாளாந்தம் பயன்படுத்திய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. ஈமச்சின்னங்களின் சுற்றாடலில் மேலாய்வில் கிடைத்த மெருகூட்டப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Early Black and Red Ware) இவற்றின் காலத்தை கந்தரோடை, அநுராதபுரத்துடன் தொடர்பு படுத்துகின்றன. ஆனால் இவ்வகையான மட்பாண்டங்கள் எவையும் இப்பலகைகள் பெரும்பாலும் குழிக்குள் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்கே பயன்படுத்தப்பட்டன. சில குழிகளில் மட்பாண்டங்களில் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்காகவும் இவை பயன்படுத்தப்பட்டன. இவ்வீமச் சின்னங்களில் மனித எலும்புகளுடன் சில வகை மிருகங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகளும் இடப்பட்டிருந்தன. மேலும் மனித எலும்பைச் சுற்றி பல அளவிலும், பல வடிவங்களிலும் வைக்கப்பட்டிருந்த மட்பாண்டங்களில் இரும்புக் கருவிகளுடன் பெருமளவிலான களிவிரும்புகள் (Ironslack), கல்மணிகள், கைவளையல்கள், தானியவகை, சங்கு, சிற்பி, வேட்டைக் கருவிகள், கூராகத் தீட்டப்பட்ட பெருமளவு மான் கொம்புகள், மருத்துவ உபகரணங்கள் (அம்மி. சாணைக் கற்கள்), சங்கு, சிற்பி, நாளாந்தம் பயன்படுத்திய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. ஈமச் சின்னங்களின் சுற்றாடலில் மேலாய்வில் கிடைத்த மெருகூட்டப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Early Black and Red Ware) இவற்றின் காலத்தை கந்தரோடை, அநுராதபுரத்


ஈமத்தாளி – பொம்பரிப்பு

துடன் தொடர்புபடுத்துகின்றன. ஆனால் இவ்வகையான மட்பாண்டங்கள் எவையும் அகழ்வு செய்யப்பட்ட ஈமச்சின்னங்களில் இருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கிடைத்த ஒரு சில கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்களும் மெருகூட்டப்படாத (Unpolished Black and Red Ware) சற்றுப் பிற்பட்ட கால மட்பாண்டங்களாக உள்ளன. இருப்பினும் அகழ்வாய்வுகளின் போது பெருங்கற்கால ஈமச்சின்னங்களுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை நாணயம், மட்பாண்டக் குறியீடுகள். ஓரிரு பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்பாண்ட ஓடுகள் என்பன இவ்வீமச்சின்னங்களுக்குரிய பெருங்கற்கால மக்கள் சாட்டியில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்த்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பேராசிரியர்ப.புஸ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நன்றி:பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம்.

# மாவீரன் பல்லவராய மன்னன்

யூன் 05, 2023

**ஈழத்தின் மாமன்னன் "பல்லவராயன்" சிலை திறப்பு விழா – பல்லவராயன்கட்டுபகுதியில் இன்று நடைபெற்றிருந்தது.**

**பூநகரி பிரதேசசபை செயலாளர் இரத்தினம் தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமனற உறுப்பினர் சி. சிறீதரன் சிலையினை திறந்துவைத் திருந்தார்.**



## யாரிந்த பல்லவராஜன்?

"கி.பி.10ம் நூற்றாண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பில் சுயாட்சியுடைய நகரங்களையும், இராணுவக் கட்டமைப்புகளையும் வைத்து ஆட்சிசெய்த சிற்றரசர்களுள், பல்லவராயன் வீரத்தின் அடையாளமாக நிற்கிறான்."

இலங்கை வரலாற்றில் கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மை பண்பாடு வரலாறு இற்றைக்கு 1,25,000 ஆண்டு பழமையானது குறிப்பாக 1970 ஆம் ஆண்டு இலங்கை தொல்லியல் திணைகளத்தின் கலாநிதி சீரான் தெரனியாகல இரணைமடு குளப்பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வில் கிடைத்த கல்லாயுதம், தொல்பொருட்கள் இன்றைக்கு 1,25,000 ஆண்டு பழமையான குறிப்பிடுகின்றார்.

கி.மு.37,000 ஆண்டளவில் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த நுண்கற்கால மக்கள் வன்னிப் பிராந்தியத்தில் இரணைமடு, மாங்குளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களிலும் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் 70 இடங்களில் குடியேறி வாழ்ந்துள்ளனர் எனபதை அறிய முடிகின்றது.

இப்பண்பாட்டு வழிவந்த மக்கள் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்து முதலில் வட இலங்கையில் குடியேறி வாழ்ந்து பின் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு புலம்பெயர்ந்தனர் என கூறப்படுகின்றது.

கிளிநொச்சி பூநகரியின் மண்டக்கல்லாறு மற்றும் மண்ணியாற்றுப் பகுதியில் 1982, 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளிலும் பார்க்க இரணைமடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த கற்கருவிகள் தொழில்நுட்பம், கலைநயத்துடன் கூடியனவாக காணப்படுகின்றது என பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

2000 ஆண்டு பழமையான பெருங்கட்கால குடியிருப்புகள் பூநகரியின் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழவூர் பல்லவராயன்கட்டு, குஞ்சுப்பரந்தன், மாந்தை போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது இங்கு பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள், ஈமச்சின்னங்கள் ஈமத்தாளிகள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், இந்திய உரோம நாணயங்கள், கல்மணிகள் என்பன நிலையான குடியிருப்புடன் பூநகரி சிறந்த நகர நிர்மானத்துடனும் நிலையான பொருளாதாரக் கட்டமைப்புடன் கி.மு.3ம் நூற்றாண்டில் பூநகரி பிராந்தியம் சிறந்த நகர நாகரிக கட்டமைப்புடன் திகழ்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பூநகரி கிராஞ்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிகால மக்கள் பயன்படுத்திய சுடப்பட்ட களிமண்ணை கொண்டு கட்டிய கிணறுகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியதென பூநகரி அகழ்வாய்வில் மூலம் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்

2004 ஆம் ஆண்டு பேராசிரியர் புஸ்பரட்ணம் கல்முனை தொட்டு மாதோட்டத்தின் தெற்கே வீரபாண்டியன் முனை வரையுள்ள பூநகரி பிராந்தியத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வில் பூநகரி 2000 ஆண்டு பழமையான பெருங்கற்கால மக்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா பல்லவராயன்கட்டு, ஈழவூர், குதிரை கட்டினதீவு போன்ற இடங்களில் பரவி வாழ்ந்தவைக்கான சூடுமன் உருவங்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், சுடுமண் பாவைகள், அகல்விளக்கு எழுத்து பொறித்த மட்பாண்டம், நாணயம், கல்மணிகள், மீன்பிடி உபகரணங்கள், கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பாக பூநகரி மண்ணித்தலையில் கிடைத்த மண்பாண்ட சாசனத்தில் "ஈலா" எழுத்தை குறித்த மட்பாண்ட பகுதி கண்டுபிடிக்கப்பட்டது இது 2200 ஆண்டு பழமையானதாகும் இதில் இரண்டு எழுத்துக்களை உடைய முதலாவது சாசனம் உடைந்த நிலையில் "ஈ" என்ற ஒலிப்பெறுமானம் கொண்ட எழுத்தும், இரண்டாவது மட்பாண்டத்தில் "ல" என்ற பெறுமானம் கொண்ட எழுத்தும் காணப்படுவதாகவும், இவ்விரு எழுத்துக்களுக்கும் இடையிலான இடைவெளியை நோக்கும்போது இடையில் வேறு எழுத்துக்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே பொருந்தக்கூடிய இரண்டு மட்பாண்டங்களையும் சேர்த்து வாசிக்கும் போது முதல் மண்பாண்டத்திலுள்ள எழுத்தில் "ஈ" என்ற ஒலியும், இரண்டாவது மட்பாண்டத்திலுள்ள எழுத்தில் "ல" என்ற ஒலியையும் சேர்த்து "ஈல" அல்லது "ஈலெ" என்றும் வாசிக்கமுடியும் என்கிறார் பேராசிரியர் புஸ்பரட்ணம்.

மேலும் அங்கு கிடைத்த மற்றுமொரு சாசனத்தில் மூன்று எழுத்துக்கள் காணப்படுகின்றன எனவும் இதன் முதலெழுத்திற்கு "ஈ" என்ற ஒலிப்பெறுமானமும், இரண்டாவது எழுத்திற்கு "ழ" என்ற ஒலிப்பெறுமானமும் கொடுத்து "ஈழ" என வாசிக்க முடியும் எனவும் அவ்விரு எழுத்துக்களைத் தொடர்ந்து மூன்றாவது எழுத்து சிறு கோட்டினை மட்டும் கொண்டிருப்பதால் இவ்விரு எழுத்துக்களையும் நோக்கும் போது இது இலங்கையின் புனைபெயரான ஈழத்தையே குறிக்கின்றது என்றும் பேரா.பரமு புஸ்பரட்ணம் தனது பூநகரி தொல்பொருளாய்வு நூலில் கூறியுள்ளார். மேலும் இங்கு காணப்பட்ட எழுத்துக்களை "வேளான்" "ஈழ" என புகழ்பெற்ற மறைந்த கல்வெட்டியலாளர் ஐராவதம் மகாதேவன் வாசித்ததாகவும், இதன் காலம் கி.மு 2 என அவர் கணித்திருந்ததாகவும், தமிழ் எழுத்தின் தோற்றம் பேரா. புஸ்பரட்ணம் எழுதியுள்ளார். இதுவே ஈழ என்ற பெயரிலமைந்த கி.மு.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் தொல்பொருட்சான்றாகும்.

ஈழம் என்பது வட இலங்கை குறிக்கப் பொதுவாக பயன்படுத்தப்பட்ட பெயராகும் பட்டிணப்பாலையில் வரும் "ஈழத்து உணவும் காலகத்து ஆக்கமும்" என்னும் வரிகளில் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டவை பற்றி குறிப்பிடப்படுகின்றது.

"தெங்கும் பனையும் ஈழவர் ஏறாப்பெறாதாராவும்" என்று சில நிலமானியம் தொடர்பான கல்வெட்டு குறிப்புகளில் வருகின்றன தற்போது வடஈழத்தில் பூநகரில் உள்ள கிராஞ்சி என்ற கிராமம் பொன்னாவெளி முன்னைய காலத்தில் "ஈழவூர்" அழைக்கப்பட்டதை இங்குள்ள ஓலைச்சுவடிகளில் இருந்து அறியப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் "ஈழம்" என்ற பெயர் பற்றிய ஆய்ந்தறிந்த அறிஞர்கள் ஈழம் என்பது ஒரு தமிழ் சொல் எனவும் அச்சொல் பனைவளத்தோடு தொடர்புடையதாகவும் தோன்றிய பெயர் எனவும் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகின்றார் ஈழம் என்ற பெயர் பனைவளம் நிறைந்த வடஈழத்தை அல்லது வட ஈழத்தின் ஒரு பகுதியை குறிக்கும் ஒரு பெயராக இருந்திருக்கலாம் காலப்போக்கில் முழு நாட்டையும் குறிக்கும் பெயராக மாறி இருக்கலாம் என கருத வாய்ப்பு உண்டு என அறிஞர்கள் கருதுகின்றனர்

பூநகரியின் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட நாகபடுவான் கிராமத்தில் கடற்கரை அடுத்துள்ள காட்டுப் பகுதியில் கானாமோட்டை குளக்கட்டுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது சைவசமய அடையாளங்கள் ஏராளமாக கண்டுபிடிக்கப்பட்டது அகழ்வாய்



வில் தாழியின் உடைந்த பாகங்கள், பல வடிவங்களில், பல அளவுகளில் அமைந்த மட்பாண்டங்கள், இரும்பு உருவாக்கப்பட்டதன் எச்சங்கள் அதிக அளவிலான சுடுமண் சிலைகள், சிற்பங்கள், என்பன கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் பூநகரி கரியாலை நாகபடுவான் அகழ்வாய்வின் போது ஏராளமான சைவ சமய அடையாளங்கள் கடவுள் உரு வங்கள், சுடுமன் உருவங்கள், ஆண், பெண் தெய்வ சிலைகள், இலிங்க வடிவங்கள், நந்தியின் பாகங்கள், ஆமை, யானை, கருடன் முதலான சிற்பங்கள் நாக உருவங்கள், தனி சிற்பங்கள், மணப்பானைகள், சட்டிகள், தெய்வச் சிலைகள் பீடங்களுடன் இணைந்த வகையில், சில தட்டையான சட்டியின் விளிம்பில் ஐந்து நாகத்தின் தலைகள் 5 நாகத்தையும் இணைந்த நிலையில் அவற் றின் வால் பகுதி சட்டியின் மையத்தில் சுருண்ட நிலையில் காணப்பட்டது இவை அனைத்தும் அண்மைக்காலத்தில் நாகபடுவான் அகழ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப் பட்டவையாகும் இவை நாகவழிபாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டுவதுடன் 2200 ஆண்டுகளுக்கு முன் பிருந்து பெருங்கற்கால வழிவந்த மக்கள் நாகவழிபாட்டை மேற்கொண்டனர் என்பது இலங்கையில் பூர்வீக குடி களான நாகர்கள் நாகபடுவான் மட்டுமல்லாது வடபகுதி தொட்டு தென்னிலங்கை வரை ஏராளமாக பரவி வாழ்ந் துள்ளனர் என்பதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதி செய்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாம்பு புற்றை நாக வழிபாட்டிற்குரிய ஆலயமாக வழிபடும் மரபு பண்டுதொட்டு இருந்து வருகிறது வன்னிப்பெரும் நிலப்பரப்பில் ஊற்றுப் புலம், இரணைமடு தென்மராச்சியில் எருவன், வலிகாமத் தில் மானிப்பாய், நாவாலி போன்ற இடங்கள் இன்றும் பாம்பு புற்றுக்கு படையல் செய்யும் மரபு காணப்படுகின்றது சில இடங்களில் கற்களால் அமைக்கப்பட்ட ஆலயத்தின் கருவறையில் பாம்பு புற்றைப் பிரதான தெய்வமாக வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது. இக்குலமரவே கரியாலை நாகபடுவானிலும் நிகழ்ந்துள்ளது என்பதை யும் இலங்கையின் ஆரம்ப கால மக்கள் நாகவழிபாட்டு வழிவந்த மக்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

## பூநகரியும் அதன் வரலாற்று தொன்மையும்

இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு தலை நகரங்களையும், அரசவம்சங்களையும் மையமாக வைத்து ஆராயப்பட்டுள்ளது. அதனால் அரச தலை நகரங்கள் காலத்திற்குக் காலம் இடம்மாறும் பொழுது அத்தலைநகரங்கள் அமைந்த பிராந்தியங்களின் வரலாறு அக்காலகட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் பிற்காலத்தில் அரசதலைநகர்கள் தோன்றிய பிராந்தியங்களுக்கெல்லாம் தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததெனக் கூறமுடியாது.

இதேவேளை ஆதிகால வரலாற்றில் தலைநகரங்களாக இருந்த பிராந்தியங்களுக்கு அதே வரலாற்றுப் பெருமை பிற்காலத்தில் இருந்ததெனவும் எடுத்துக்கொள்ள முடி யாது. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசொன்று யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளது. அக்காலத்தில் நல் லூருக்கு மிக அருகில் அமைந்த பூநகரிப் பிராந்தியத்தின் பெரும் பகுதி யாழ்ப்பாண மன்னர்களின் நேரடி ஆதிக்கத் திற்கும், சில பகுதிகள் யாழ்ப்பாண மன்னர்களுக்குத் திறை செலுத்தும் வன்னிச் சிற்றரசர்களின் ஆதிக்கத் தினுள்ளும் இருந்ததாகத் தெரிகின்றது. யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்களில் இப்பூநகரியும், பூநகரிப் பிராந்தியத்தினுள் இருந்த பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி ஆகிய இடங்களும் யாழ்ப்பாண அரசிற்கு வெளியேயுள்ள நாடுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.

15ஆம் நூற்றாண்டில் எழுந்த கோகில சந்தேசய என்ற சிங்களக் குயில் விடு தூதுப் பிரபந்தத்தில் 1450 இல் கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுத்த செம்பகப்பெருமாளின் (சப்புமால் குமாரய) படைகள் வந்த பாதை வழியாகக் குயில் பறந்து சென்று யாழ்ப்பாணத்தை அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு பறந்து வந்த பாதைகளில் பூநகரியிலுள்ள கல்முனையும் அதையடுத் துள்ள யாழ்ப்பாணமும் கூறப்பட்டுள்ளன.

மேலும் அக்காலத்தில் யாழ்ப்பாண அரசைப் பாதுகாத்துக் கொண்டிருந்த உப்புலவன் (விஷ்ணு) ஆலயத்தை இக் குயில் தரிசித்துச் சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது. இவ் வாலயம் பூநகரியின் தென்னெல்லையில் உள்ள வெள் ளாங்குளத்தில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இவ் வாறு தமிழ் சிங்கள இலக்கியங்களில் யாழ்ப்பாண அர சோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ள பூநகரிப் பிராந்தியத் துக்குத் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியம் இருந்த தென்பதை அண்மைக்காலமாக அங்கு கிடைத்துவரும் தொல்பொருட் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## சோழரரட்சியில் பூநகரி

வடஇலங்கையில் சோழராட்சி தொடர்பான சான்றுகள் மாதோட்டத்திற் கிடைத்ததைப் போல் ஏனைய இடங்களிற் கிடைத்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணக்கோட்டை, ஊர்காவற்றைக்கோட்டை, நாரந்தனை ஆகிய இடங் களில் ஓரிரு சோழச் சாசனங்களும், விக்கிரகமும், நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவைகளை அடிப்படையாக வைத்து அவ்விடங்களில் ஏற்பட்ட சோழர் கால ஆட்சியின் முக்கியத்துவத்தைப் பூரணமாக அறிய முடியவில்லை. ஆனால் அண்மையில் பூநகரிப் பிராந் தியத்தில் சோழராட்சி தொடர்பாகக் கிடைத்த பல சான் றுகள் சோழத் தொடர்பால் சோழர் ஆட்சியால் பூநகரிப் பிராந்தியத்தில் ஏற்பட்ட வர்த்தகம், அரசியல், குடியேற்றம், பண்பாடு ஆகிய துறைகளின் முக்கியத்துவத்தை அறிய உதவுகின்றன.

கி.பி.10ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங்கை-தென்னிந்தியத் தொடர்பிற்கு மாதோட்டம் முக்கிய துறை முகமாகப் பயன்படுத்தப்பட்டதை இரு நாட்டு இலக்கியங் களும் எடுத்தியம்புகின்றன. ஆனாற் பத்தாம் நூற்றாண் டில் சோழர் அநுராதபுரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதன் முக்கியத்துவம் படிப்படியாக வீழ்ச் சியடைந்ததை இவ்விலக்கியங்கள் மட்டுமன்றித் தொல் பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.

சோழர் ஆட்சிக்காலத்தில் இருந்து மாதோட்டத்தோடு ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகமாகப் பயன்படுத்தப் பெற்றது. பத்தாம் நூற்றாண்டில் வட இலங்கை மீது (நாகதீபம்) படையெடுத்த தென்னிந்திய மன்னன் (இரண் டாம் பராந்தக சோழன்) தனது படைகளை ஊர்காவற் றுறையூடாகக் கொண்டுவந்தான் எனக் கூறப்படுகின்றது.

11ஆம் நூற்றாண்டிற் பொலநறுவையில் ஆட்சிசெய்த முதலாம் விஜயபாகு (கி.பி. 1070-1110) இத் துறைமுகத் தினூடாகத் தென்னிந்தியாவுடனும், தென்கிழக்காசிய நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டான் எனக் கருதப் படுகின்றது 12ஆம் நூற்றாண்டிற் பொலநறுவையில் ஆட்சிபுரிந்த முதலாம் பராக்கிரம பாகு (கி.பி. 1153-1186) பர்மாவுடன் மேற் கொண்ட யானை வர்த்தகம் இத்துறை முகத்தினூடாக நடந்ததை நயினாதீவிற் கண்டுபிடிக்கப் பட்ட தமிழ்ச் சாசனம் உறுதிப்படுத்துகிறது. இதே காலப் பகுதிக்குரிய தென்னிந்திய திருவாலங்காட்டுக்குச் சாசனம் ஒன்று (கி.பி. 1163-1173) சோழர் வடமேற்கிலங்கையில் வெற்றிகொண்ட இடங்களாக ஊர்காவற்றுறையுடன் மட்டி வாழ், புலச்சேரி, மாதோட்டம் முதலிய இடங்களையும் கூறுகின்றது இச்சான்றுகள் அனைத்து ம் மாதோட்டத் தின் பின்னர் இலங்கை - தென்னிந்தியத் தொடர்பில் ஊர்காவற்றுறை பெற்ற முக்கியத்துவத்திற்கு ஆதாரமாக அமைகின்றன. ஆயினும் ஊர்காவற்றுறையுடன் கிழக்கே நேரெதிரேயுள்ள பூநகரியில் உள்ள சில இடங் களும் (மட்டிவாழ், புலச்சேரி) சோழ சாசனத்திற் கூறப் படுவதால் சோழராட்சியில் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம், அரசியல், பண்பாடு முதலான தொடர்புகள் பெருமளவுக்கு ஊர்காவற்றுறை, பூநகரி ஊடாக நடந்தன வெனக் கருதஇடமுண்டு.

பூநகரிக்கும் தமிழ்நாட்டிற்குமிடையே பாரம் பரியமாக இருந்து வந்த அரசியல், வர்த்தக உறவுகள் காரணமாக, தமிழ்நாட்டிற் காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாடு இலங்கையின் ஏனைய பாகங்களைப் பாதித்தது போல் இப்பிராந்தியத்தையும் பாதித்தது. இச்செல்வாக்கு வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் (கி.மு. 3ஆம் நூற் றாண்டு) இருந்து பெருமளவுக்கு இடையீடின்றித் தொடர்ந்து இப்பிராந்தியத்தில் ஏற்பட்ட தென்பதைச் சமீப காலத்தில் இங்கு கிடைத்த பல தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இது இப்பிராந்தியத்திற்குரிய தனிச் சிறப்பெனக் கூறலாம். இந்நிலையில் தமிழ்நாட்டில் 10 ஆம் நூற்றாண்டிலிருந்து எழுச்சி பெற்ற சோழவம்ச மானது முன்னைய தமிழ்நாட்டு அரசவம்சங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டின் இயற்கையெல்லையைத் தாண்டிக் கடல் சார்ந்த பேரரசை அமைத்துக் கொண்ட



போது, சோழர்காலப் பண்பாடு முற்பட்ட காலங்களை விடக் கூடுதலாக இப்பிராந்தியத்தினுட் செல்வாக்குச் செலுத்தியிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

சோழர்காலத்தின் பரந்த பேரரசுக் கோட்பாடும். கடல் கடந்த வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட பெருமளவு செல்வமும் நாட்டு ஆலயங்களை மையமாக தமிழ் வைத்து இந்துப்பண்பாடு வளரக்காரணமாகின. இது தமிழ் நாட்டைமட்டும்மன்றி, சோழரது வர்த்தக அரசியல் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளையும் பாதித்தது. இலங்கையில் 77 ஆண்டுகால ஆட்சியில்தான் இதுவரை அரசமதமாக இருந்த பௌத்தம் வீழ்ச்சியடைய, இந்துமதம் அரச ஆதரவுடன் வளர்ச்சியடைந்தது. இதனால் இலங்கையின் முக்கிய நகர, வர்த்தக மையங்களில் இந்து மதம் சார்ந்த கட்டிட, சிற்ப ஓவியக் கலைகள் திராவிடக் கலை மரபை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்தன. இச்கலை மரபு இந்துக்கலைகளில் மட்டுமன்றி காலப்போக்கில் பௌத்தக் கலைகளிலும் செல்வாக்குச் செலுத்திற்று.

1070 இல் இலங்கையின் ஆட்சியதிகாரத்தை இழந்த போதிலும் சோழர் அரசியலிலும், பண்பாட்டிலும் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கு, தொடர்ந்தும் நிலவியது. சோழரின் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் விஜயபாகு, பராக்கிரமபாகு, கஜபாகு போன்ற மன்னர்கள் தமது ஆட்சியைப் பாதுகாக்கத் தமிழர்கள் பலரை அமைச்சர்களாக, அதிகாரிகளாக, படைத் தளபதிகளாக வைத்திருந்தனர். இதனால் இம் மன்னர்கள் இந்து மதத்திற்கு ஆதரவாகவும் ஆட்சி செய்ய நேரிட்டது. இந்த ஆதரவைத் திருகோணமலையில் இருந்த சோழர் கால ஆலயங்கள் சிலவும் பெற்றதாகத் தெரிகிறது. ஆயினும் காலப்போக்கில் ஏற்பட்ட ஆட்சி மாறுதல்களும், அன்னியரின் கலையழிவுக் கொள்கையும் சோழர் கால ஆலயங்கள் உட்பட பழமையான பல ஆலயங்கள் அழிந்துபோகக் காரணமாகின. இது பூநகரிக்கும் பொருந்துமென்பதை மண்ணித்தலை பல்லவராயன் கட்டு, ஈழுஊர் ஆகிய இடங்களில் உள்ள கட்டிட சிற்ப அழிபாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

## தமிழிலக்கியங்களும் பூநகரியும்

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக எழுந்த தமிழிலக்கியங்களில் ஒன்றான யாழ்ப்பாண வைபவமாலை கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் (கி.பி.745) விஜயனின் உறவினனான உக்கிரசிங்கன் சோழ இளவரசியான மாருதப்புர வல்லியைத் திருமணம் செய்து சிறிதுகாலம் கதிரமலையிலிருந்து ஆட்சி செய்ததன் பின்னர் தலை நகரைச் செங்கடநகரிக்கு மாற்றியதாகக் கூறுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இக்கதையில் வரும் சம்பவங்கள் மகாவம்சத்தில் வரும் விஜயன் குவேனி கதையின் மறு வடிவம் எனக்கூறி இதில் எதுவித வரலாற்று உண்மையும் இல்லையெனக் கூறுகின்றனர். இக்கதையில் சில பழைய வரலாற்றுக் கதைகளும் இணைந்து உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

18ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண வைபவமாலை எழுந்தபோது சோழப் பேரரசின் ஆட்சி இலங்கையிலோ அல்லது தமிழ்நாட்டிலோ இருக்கவில்லை அதேவேளை, 600 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த அப்பேரரசின் சாதனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு இக் காலத்தில் (18ம் நூற்றாண்டு) வரலாற்று ஆய்வுகள் வளர்ந்திருக்கவுமில்லை. அப்படி இருந்தும் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரசின் தோற்றத்தைச் சோழ வம்சத்தோடு தொடர்புபடுத்தி யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றதென்றால் தமிழரது வரலாற்றில் சோழரைப் பற்றிய வரலாற்று நினைவுகள் (Historical Memory) ஆழமாகப் பதிந்திருந்ததே காரணம் எனலாம். ஆயினும் இச்சோழ வம்சத்தின்தொடர்போடு கதிரமலையிலிருந்த (கந்தரோடை) ஆட்சி மையம் வேறோர் இடத்திற்கு மாறியதை ஏகோ பித்த நிலையில் தமிழ் இலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கத் தவறவில்லை. அந்த இடமாற்றம் பூநகரியில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இக்கருத்தை ஏற்ற பேராசிரியர் சிற்றம்பலம் இதற்கு யாழ்ப்பாண வைபவமாலையிலும் வையாபாடலிலும் வரும் குறிப்பை எடுத்துக் காட்டுகிறார்

யாழ்ப்பாண வைபவமாலைபில் கதிரமலையிலிருந்து ஆட்சி செய்த உக்கிரசிங்கராசன் சிறிது காலத்தின் பின்னர் தலைநகரைச் செங்கட நகரிக்கு மாற்றி அங்கிருந்து ஆட்சி செய்தான் எனக்கூறுகிறது.இத் தலைநகர் மாற்றம் வன்னிப் பிராந்தியத்திற்கு இடம்பெயர்ந்த்தை வையாபாடலில் வரும் குறிப்பு உறுதிப் படுத்துகின்றது. அக்கூற்று பின் வருமாறு:

பொன்னகர் நிகருங் கதிரையம் பதியிற் போயரன் மகவினை வணங்கிப் பின்னருக் கிரம சிங்கசேனன்றன் பெண்ணென விருந்தன தைற்பின்

மன்னவ னடங்காப் பற்றினி லேகி மாநகர் வாவெட்டி மலையிற் றன்னிக ரற்ற மண்டப மியற்றித் தன்னரசியற்றின னிருந்தான்.

இதில் வாவெட்டி பற்றிவரும் செய்தி

பிற்கால வரலாற்றுச் சம்பவமாக இருப்பினும் அதில் பழைய வரலாற்றுக் கதைகளும் இணைந்துள்ளன எனக் கூறலாம். இவ்விரு இலக்கியங்களை அடிப்படையாக வைத்துக் கதிரமலையின் பின்னர் தலைநகர் வன்னிக்கு மாறியதென எடுத்துக்கொள்ளலாம். அந்த மாற்றம் பூநகரியில் இருந்த இராசதானியைக் குறித்ததென எடுத்துக் கொள்ளலாம். பூநகரியிலுள்ள கட்டிடங்களைக் கதிரமலையின் பின்னர் ஏற்பட்ட புதிய இராசதானியாகக் கொண்டால் அதற்கொரு பெயர் இருந்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. அது எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதென்பதே அடுத்து எழும் கேள்வியாகும்.

## சிங்கையும் பூநகரியும்

ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களது ஆட்சிக்கு உட்பட்ட யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பத் தலைநகர் சிங்கை, சிங்கைநகர், சிங்க நாடு எனச் செகராசசேகரம் போன்ற நூல்களும் யாபாபட்டுன (யாழ்ப்பாணம்) எனச் சிங்கள இலக்கியங்களும், நல்லூர் எனக்கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, தஷ்ண கைலாயமாலை போன்ற நூல்களும் கூறுகின்றன. இதில் சிங்கை ஆரம்பத் தலைநகராக இருந்ததை, காலத்தால் முந்திய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. எனினும் தற்போது நல்லூரைத் தவிர ஒரு இராசதானிக்குரியதெனக் கருதக்கூடிய கட்டிட அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் வேறு எந்த இடத்திலும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்த போது நல்லூர் நகரத்தையே கண்டனர் என அறிகின்றோம். இது சம்பந்தமாக, போர்த்துக்கேய மதகுருவான கேய்றோஸ் பாதிரியார் கூறியது கவனிக்கத்தக்கது:

நல்லூரைவிட வேறு நகரம் ஒருபோதும் அவர்களுக்கு இருக்கவில்லை. இது போத்துக் கேயருடைய பட்டினமும், அங்காடியும் அமைந்துள்ள இடத்திலிருந்து அரை லீக் (ஏறக்குறைய 11/2 மைல்) தூரத்தில் இருக்கிறது.)

அவர் குறிப்பிடுகின்ற பட்டினமும், அங்காடியும் தான் பிற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண நகரமாக மாறியது இதனால் யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரையும், யாப்பாபட்டுணத் தையும் இருவேறு இடங்களில் இருந்த தலைநகராகக் கொள்ளாது யாழ்ப்பாணத்தை நல்லூர் நகரின் ஒரு பாகமாகக் கொள்வது பொருத்தமாகும். நகர் எது? அப்படியாயின் ஆரம்பகாலச் சிங்கை 1450 இல் செண்பகப் பெருமாள் நல்லூரைத் தலைநகராகக் கொள்ளும் வரை சிங்கையே ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களின் தலைநகர் எனவும், அது வல்லிபுரத்தில் இருந்ததெனவும் இராசநாயகம் கூறுகிறார். இவர் கருத்தை ஏற்ற ஞானப்பிரகாசர் அதற்குச் சார்பாக அப்பிராந்தியத்திற் கிடைத்த தொல்லியற் சின்னங்களை எடுத்துக் காட்டினார். ஆனால் இவற்றை அப்பிராந்தியத்தில் ஆதிக் குடியிருப்புக்கள் இருந்ததற்கான சான்றுகளாகக் கொள்ளலாமே தவிர ஓர் இராசதானிக்குரிய ஆதாரங்களாகக் கொள்ளமுடியாது. இவ்வாறான தொல்லியற் சின்னங்கள் வல்லிபுரத்தில் மட்டுமன்றி, கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி, பூநகரி போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன.

இந்திரபாலா, பத்மநாதன் போன்ற அறிஞர்கள் யாழ்ப்பாணத்தைப்போல் சிங்கையையும் நல்லூருக்குள் அடங்கியிருந்த தலைநகராகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாகச் சில சான்றுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. 1435 இற் பொறிக்கப்பட்ட விஜயநகர மன்னர்களது திருமாணிக் குழிக் கல்வெட்டில் யாழ்ப்பாணாயன் பட்டினமும், 1449 க்கும் 1454 க்கும் இடைப்பட்ட அரசகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் சிங்கையும் குறிப்பிடப்பட்டுள்ள

## பூநகரி பல்லவராயன்கட்டும் பல்லவராய மன்னனும்

பூநகரி தியாக்குளத்தின் தென்னெல்லையிற் பல்லவராயன் என்ற கிராமமும், இதற்குத் தெற்கே மண்ணியாற்றின் பிரதான ஆறு பல்லவராயன் ஆறு எனவும், இதன் அயற்கிராமம் பல்லவராயன் கட்டு எனவும் அழைக்கப் படுகின்றன. சோழராட்சியிற் பல்லவராயன் என்ற பெயரில் அமைச்சர்கள், அரச அதிகாரிகள், படைத்தளபதிகள் எனப் பலர் இருந்துள்ளனர். இவர்களுக்குச் சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட கிராமங்கள், ஊர்கள், நிலங்கள் இவர்களின் பெயர்களாலேயே பெரும்பாலும் குறிக்கப் பட்டன.

இன்று தமிழ்நாட்டிலுள்ள பல்லவராயன் பேட்டை, பல்லவராயன்சாலை, பல்லவராயளந்தம், பல்லவராய நெந்தில், பல்லவராயர் போன்ற இடப்பெயர்கள் பல சோழர் காலத்துடன் தொடர்புடையன இப்பெயர் கொண்ட சோழ அதி

காரிகள், படைத்தளபதிகள் இலங்கையில் இருந்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்களுண்டு.

இரண்டாம் இராசாதிராசசோழன் ஆட்சியில் வடமேற் இலங்கையிலுள்ள மாதோட்டம், மட்டிவாழ் (பூநகரி மட்டு வில்நாடு), புலச்சேரி (பூநகரி புலையர் குடா) ஆகிய இடங் களை வெற்றிகொண்ட சோழப்படைத்தளபதி பெயர் பல்லவராயன் எனப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது. பொலநறுவை இரண்டாம் சிவதேவாலயத்திற் கிடைத்த கல்வெட்டு ஒன்று சோழர்கால நிர்வாகத்தில் உயர்பதவி வகித்த அதிகாரியாகப் பல்லவராயன் என் பவன் குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வொற்றுமைகளை நோக்கும்போது பூநகரியில் உள்ள பல்லவராயன், பல்லவ ராயன்கட்டு என்ற இடப்பெயர்கள் சோழ அதிகாரிகள், படைவீரர்கள் பெயரால் ஏற்பட்டன எனக்கருத இடமுண்டு. இவ்விரு இடங்களும் சோழர் வெற்றிகொண்ட மட்டிவாழ் (மட்டுவில்நாடு), புலச்சேரி (புலையர் குடா) ஆகிய இரு இடங்களுக்குக் கிழக்கெல்லையில் அமைந்திருப்பது குறிப் பிடத்தக்கது.

பூநகரி மண்ணின் வரலாற்றுக் காலத்தில் பல்லவராயன் என்ற அரசன் இருந்துள்ளான் அவர்பெயரில் ஊரும், பல்லவராயன்கட்டு நீர்ப்பாசனத்திற்காக குளமும் உண்டு.

ஆதிகாலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வருவதற்கான பல தடயங்கள் காணப்படுகின்றன.உதாரணமாக பல்லவ ராயன்கட்டு விஷ்ணு சிலை பல வருடங்களுக்கு முன்னர் பல்லவராயன் கட்டுப் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதி யொன்றில் பயிர்ச்செய்கைக்காக நிலம் திருத்தப்பட்ட போது மண்ணிற் புதையுண்டிருந்த கருங்கற் சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அங்குள்ள ஆலயம் ஒன்றில் வைத்துவழிபட்ட இச்சிலை பின்னர் சம்புவெளி யில் இதற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் வைக்கப்பட்டு, தற்பொழுது சம்புவெளி ஐயனார் என்ற பெயரில் வழிபடப்பட்டு வருகிறது. இங்கு வாழும் மக்க ளிடையே ஐயனார் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருப்ப தாலும், இச்சிலையின் சில உறுப்புகள் தெளிவற்றிருப்பதி னாலும் இதை ஐயனார் சிற்பமாகவே இங்குள்ள மக்கள் கருதுகின்றனர். ஆனால் இது ஒரு விஷ்ணு சிலை என்பதை இச்சிலையின் இடது சுரத்தில் சங்கும், வலது கரத்தில் சக்கரமும் இருப்பதைக் கொண்டு இலகுவாக அடையாளம் காண முடிகிறது. 3 3/4 அடி உயரமும் 1 அடி அகலமும் (தோள்மூட்டுப் பகுதி) கொண்ட இச் சிற்பம் ஒரு வகை வெண்மையான கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக (இரு பரிமாண நிலை) செதுக்கப்பட்டுள்ளது தாமரைப் பீடத்தில் நிற்கும் நிலையில் அமைந்த இச்சிலையின் சில பாகங்கள் சிதைவடைந்து காணப்பட்டாலும் முக்கியமான அம்சங்களைத் தெளிவாக காணமுடிகிறது. தலையின் பின்னால் அமைந்த ஒளிவட்டமும், தலையின் உயரமான திருமுடியும், காதில் உள்ள மகர குண்டலமும், ஸ்ரீ வற்சாவாலும் சிறப்பான அம்சங்களாக குறிப்பிடத்தக்கன. பொதுவாக விஷ்ணு சிற்பத்தில் காணப்படும் நான்கு சுரங் களுக்குப் பதிலாக இதில் இரண்டு கரங்கள் காணப் படுவதைக் கொண்டு இச்சிற்பம் மிகப் பழமையானதென் பதை நிச்சயப்படுத்த முடிகின்றது. இரண்டு சுரங்களுடன் கூடிய சிற்பங்களை ஆக்கும் மரபு பல்லவ, சோழக்கலை மரபிற் பின்பற்றப்பட்ட ஒரு அம்சமாகும். இதற்கு, கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள விஷ்ணு சிற்பம் சிறந்த ஒரு உதாரணமாகும். இச் சிற்பத்திற்கும் பல்லவராயன் கட்டுப் பகுதியில் கிடைத்த சிற்பத்திற்கும் இடையே அமைப்பு, கலைமரபு, தொழில் நுட்பம் என்பனவற்றில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இச்சிற்பத்திற் காணப்படும் ஒளி வட்டம், நீண்ட முகபாவம், தடித்த உதடுகள், கமலகுண்டலம், மெலிந்த உடல் அமைப்பு, முழங்கால்வரை நீண்ட வட்டமான ஆடையமைப்பு என் பன சோழக்கலையிற் காணப்படும் சிறப்பம்சங்களாகும். இப் பல்லவராயன் கட்டுப் பிரதேசத்தைச் சோழருடன் தொடர்புபடுத்த வேறு சில ஆதாரங்களும் இருப்பதினால் இச் சிலை காணப்பட்ட இடத்தில், சோழர் கால ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு இத னால் இக்கட்டிட அழிபாடுகள் எக்கால கட்டத்திற்குரிய தெனத் திட்டவட்டமாக தற்போது கூறமுடியாதிருக்கிறது. ஆனால் இதன் சுற்றாடலில் உள்ள இடப்பெயர்களை நோக்கும் போது இக்கட்டிட அழிபாடுகளைப் பாண்டியர். சோழர் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் இட முண்டு. இக்கட்டிட அழிபாட்டிற்கு மேற்கே இரண்டாம் இராசாதிராச சோழனின் படைத்தளபதியான பல்லவ ராயன் வெற்றி கொண்ட புலைச்சேரியும் (புலையர் குடா). கிழக்கே இத்தளபதி பெயரை நினைவுபடுத்தும் பல்லவ ராயன் கட்டும். தெற்கே பாண்டியர் தொடர்பைக் காட்டும் வீர பாண்டியன் முனை என்ற பெயரிலுள்ள கிராமமும் அமைந்துள்ளன. இக்கட்டிட அழிபாட்டிற்கு முன்னால் வெள்ளைப் பள்ளம் என்ற இடம் உள்ளது. தற்போது அங்கிருக்கும் ஆலயம் ஈழவூர் வெளி வெள்ளைப்பள் ளத்து பிள்ளையார் என அழைக்கப்படுகிறது. சோழரின் தலைநகராக இருந்த தஞ்சாவூரின் முக்கிய இடங்களில் வெள்ளைப்பள்ளம் என்ற இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. வொற்றுமைகளை நோக்கும் போது இங்குள்ள இவ் ஆலய அழிபாட்டை சோழர்காலத்துடன் தொடபுர்படுத் தலாம் போல் தெரிகிறது. எவ்வாறாயினும் இப்பகுதியில் முழுமையான ஆய்வு மேற் கொள்ளப்படுமாயின் ஈழ ஊர் தொடர்பாக பல வரலாற்று உண்மைகள் வெளிவர இட முண்டு என்பதில் சந்தேகமில்லை. பாலியாற்றுடன் இணைந்த பல்லவராயன்கட்டு ஆற்றை அடுத்துள்ள நாக படுவானிற் சோழர்காலச் சாசனத்துடன் கூடிய நாகபட் டினக் கலை மரபுக்குரிய விக்கிரமும். இதற்கு வடக்காகப் பல்லவராயன் கட்டிற் சோழர்கால விஷ்ணு சிலையும் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் கோயிற் காட்டிற் சோழர் கால ஆலயமொன்று இருந்திருக்கலாம் என்ற எண் ணத்தை மேலும் வலுவடையச் செய்கின்றன.

பல்லவராயனன் - வஞ்சிநகர் வேளாளனும், கல்விமானு மாகிய பல்லவனையும், அவனுறவினராகிய இரு பிரபுக் களையும் செந்நெல் விளையும் கழனிகள் விளங்கும் வெளிநாடென்னும் பல்லவராயன்கட்டு முதலிய இடங் களுக்கு அதிபதியாக்கினான். சிங்கையாரியன் இந்தியாவி லிருந்து வந்த பிரபுக்களை அவரவர் அடிமை குடிமைக ளுடன், மேற்கூறியவிடங்களில் குடியிருத்திய பின் நான்கு திசைகளுக்கும் நான்கு சேனைகளைக் காவலாக நிறுத்தி மேற்றிசைச் சேனைக்கு வல்லியமாதாக்கனென்னும் பராக்கிரமவீரனையும், கீழ்த்திசைச் சேனைக்குச் சண்பகமா தாக்கனென்னும் வீரசூரனையும், வடதிசைச் சேனைக்கு உத்தண்டகெம்பீர வீரனாகிய இமையாண னென்னும் மாதாக்கனையும், தென்திசைச் சேனைக்கு வெற்றிமாதாக்கன் என்னும் விசயபராக்கிரமனையும் சேனாபதிகளாக்கி வீரசிகாமணியாகிய வீரசிங்கயனைச் சர்வசேனைக்கும் நாயகமாக்கியின்னும் வேண்டுமிடங் கடோறும் கசரததுரக பதாதிகளை நிறுத்திப் புறமதிலுங் கட்டுவித்துச் சுபமுகூர்த்தத்தில் மகுடாபிஷேகம் பெற்று புவனேகவாகு என்னும் மந்திரியுடன் நகர்வலம் வந்து நவரத்தினங்க ளழுத்திச் செய்யப்பட்ட சிங்காசனமேறி அரசியல்தொடங்கிச் செங்கோன்முறை குன்றாது நல்லரசு புரிந்து வந்தான் எனும் குறிப்பு யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் காணப்படுகின்றது

தமிழ் மாமன்னன் மாவீரன் பல்லவராயன். ஈழத்தில் தமிழர்களின் ஆட்சி உரித்தையும், தொன்மையையும் எடுத்தியம்பும் வரலாற்றுச் சான்றுகள் ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்புக்களாலும் கட்டமைக் கப்படுகின்றன. அதனடிப்படையில் வன்னிப்பேரரசின் வழிவந்த குறுநில மன்னர்களுள் ஒருவனாக, பதினெண் தொழில்சார் குடிமக்கள் சகிதம் வன்னியின் பூநகரியை ஆண்ட பல்லவராய மன்னன் சிறப்புப்பெறுகிறான்.

அவனது ஆட்சி எல்லையாக வடக்கே மண்டைக்கல் லாறும், தெற்கே முழங்காவிலும், கிழக்கே வன்னேரியும், மேற்கே பொன்னாவெளியும் வரையறுக்கப்படுகின்றன. பல்லவராயனது ஆட்சிக்காலத்தில் வடபகுதியான அரச புரம் என்னும் நிலப்பரப்பை அல்லிராணி என்னும் அரசி யும், மாந்தையெனும் நிலப்பரப்பை கரிகாலன் என்னும் சிற்றரசனும் ஆட்சி புரிந்ததாக அறியமுடிகிறது.

உழவுத்தொழிலை முதன்மைப்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டிருந்த பல்லவராய மன்னனின் ஆட்சி, அத்தொழில் சார்ந்த பிற பதினெட்டு தொழில்களையும் முதன்மைப்படுத்திய மிகச்செழிப்புற்ற ஆட்சியாக அமைந் திருந்தது. அதற்கு ஆதாரமாக பூநகரி, பல்லவராயன்கட்டு மற்றும் அதன் சுற்றயல் பகுதிகளில் அத்தொழில்களின் பெயரில் இன்றளவும் காணப்படும் கொல்லங்குளம், பத்தன்குளம், நாகபடுவான் குளம்,

கரியாலைக்குளம், பண்டிவெட்டிக்குளம், வில்வெட்டிக் குளம், தேவன்குளம், வன்னேரிக்குளம், மண்ணியா குளம், அம்பலப்பெருமாள்குளம், பூதவுடையார் புளியங் குளம், கரம்பைக்கட்டுக்குளம், வண்ணாம் பிட்டிக்குளம், நாச்சியார்குளம், பன்னாமோட்டைக்குளம், சின்னவன் முறிப்புக்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதுதவிர, வலைப்பாட்டுப் பகுதியிலுள்ள வீரபாண்டியன் முனை, அவ்விடத்தே வழக்கிலுள்ள “ஈழ ஊர்” எனும் தொன்மைப் பெயர், வடபூநகரியின் நாகதேவன் துறை, கௌதாரிமுனை, மண்ணித்தலை சிவன் கோயில் உள் ளிட்ட தொன்ம அடையாளங்களுக்கும் பல்லவராய மன்ன னுடைய ஆட்சிக்கும் இடைத்தொடர்புகள் இருப்பதையும் காணமுடியும்.

ஒரு குறுகிய நிலப்பரப்பில் பல குளங்களை அமைத்து அவற்றுக்கு ஏற்ப பணிகளையும் விஸ்தரித்து பொருளா தார வளர்ச்சிக்கும் மக்களின் தொழிற் பாதுகாப்புக்குமான ஒரு அடித்தளத்தை அந்தக்காலத்துக்கு ஏற்றாப்போல் கட்டமைத்து ஆட்சி நடைபெற்ற ஊராக பல்லவராயன் கட்டும் அதன் ஆட்சியாளனான பல்லவராய மன்னனும் வன்னியர் ஆட்சி வரலாற்றில் முதன்மை இடம் பெற் றுள்ளனர்.

ஆன்மீகச் சிறப்புப்பெற்றதும் சிற்ப மற்றும் கட்டடக்கலை யில் சிறப்புப்பெற்று இருந்ததுமான பல்லவராயன்கட்டு காட்டுப்பிள்ளையார் ஆலயம், வன்னேரிக்குளம் ஐயனார் ஆலயம் என்பவை பல்லவராய மன்னனால் ஆதரிக்கப் பட்ட ஆலயங்கள் என சுட்டிச்சொல்லப்படுகின்றன.




பல்லவராய மன்னனின் கோட்டையின் சிதைவுகள் சுண்ணாவில், பல்லவராயன்கட்டு மற்றும் முழங்காவில் பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வடிப்படையிலான பல்லவராய மன்னனது ஆட்சிச் சிறப்பினை, எண்பதுகளின் பிற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை பேராசிரியர் திரு.பரமு புஸ்பரட்ணம் அவர்களால் பொன்னாவெளி புளியந் துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவும் கிடைக்கப்பெற்ற எச்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன. அதுபோலவே, நாகபடுவான், குஞ்சுப்பரந்தன், அக் கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மீட் கப்பட்ட நாணயங்கள் உள்ளிட்ட எச்சங்களும் இதனையே எண்பிக்கின்றன.

ஆக, ஈழத்தில் தமிழர்களின் பாரம்பரியத்தையும் ஆட்சி யுரித்தையும், தொன்மத்தையும் பறைசாற்றும் வகையி லமைந்த பல்லவராய மன்னனின் வரலாற்றை அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தும் முயற்சியாகவே, பல்லவ ராயன்கட்டுச் சந்தியில், பல்லவராய மன்னனின் சிலை நிறுவப்பட்டு 2023.06.05 ஆம் திகதி திறந்துவைக்கப் பட்டுள்ளது.

தொகுப்பாக்கம்

கந்தசாமி கிரிகரன்
ஈழத்து வரலாறும் தொல்லியலும்.

உசாத்துணை நூல்கள்

1.பேராசிரியர் புஸ்பரட்ணம்.ப,1993 “பூநகரி தொல்பொரு ளாய்வு” யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, பக்59 - 156

2.வேலுப்பிள்ளை.க, 2004 “யாழ்ப்பாண வைபவ கௌ முதி” Asian Educational Services, பக் 15-16

3.புஸ்பரட்ணம்.ப, 2017 “இலங்கை தமிழர் ஒரு சுருக்க வரலாறு”, தமிழ்கல்விச்சேவை சுவிட்சர்லாந்து, பக் 4-5, 104-107

4.கிருஷ்ணராஜா.செ,2012, “இலங்கை பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள்”, AB Creator & Publishers, பக்170-171

5.சுந்தரலிங்கம்.க,2014, “வன்னி வரலாறும் பண்பாடும்” குமரன் பப்ளிரஸ், பக்1-39,59-73,

6.கலாநிதி பத்மநாதன்.சி,2003, “இலங்கையில் வன்னியர்” குமரன் புத்தக இல்லம், பக் 29-66

7.கலாநிதி பத்மநாதன்.சி,1970, “வன்னியர்”சைவப் பிரகாச அச்சியந்திரசாலை, பக்65-103

8.கேதீஸ்வரன்.நா,2014, “கிளிநொச்சி மாவட்ட தொன் மையின் மூலங்கள்” மாவட்ட செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் கிளிநொச்சி, பக்95-127

நன்றி: கந்தசாமி கிரிகரன்

## CORPORATION AND PERSONAL TAX & MORTGAGE

நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

சகல விதமான நிதி கணக்கியல் வருமானவரி சம்பந்தமான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள அழையுங்கள்

- ★ Accounting
- ★ Financial & Tax Services
- ★ Personal & Corporation Taxes
- ★ Bookkeeping
- ★ Payroll
- ★ New Business Registration
- ★ Incorporation Open & Business Start Up

மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து தரப்படும்

1st and 2nd Mortgage
Private Mortgage
Refinancing



**Thilak Nallathamby**

Email: nthilak@ymail.com

**647 896 7252**

## அகரம் Akaram

### வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
### Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல் (Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
**437.345.4203**



## DEBT SOLUTIONS GTA INC.

### CREDIT CARD & DEBT SOLUTIONS

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில் (PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும் முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து விடுதலை பெறலாம்.

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG, Life Insurance, Stocks, Bonds & Shares)



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**

DSC DEBT SOLUTION CANADA

Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8

2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8

www.debtsolutioncanada.ca

# எங்கள் கடல் செங்நீராகியது...!

**உண்மைக் கதை**

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரின வாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக் குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந் தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப் பட்டுள்ளன.

சிங்கள வெறிப்படை ,

"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப் பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணி வுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்... இருந்து.



**பஞ்சாட்சரத்துக்கு அம்மன்கோயிவில் குருக்கள் வேலை. பிள்ளைகள் யாரையாவது படை ஆட்கள் பித்துக்கொண்டு போனால் தாய்மார்கள் அழுது அடித்துக்கொண்டு கோயிலுக்கு ஓடுவார்கள். எத்தனை பூக்களை அம்மனுக்குப் போட்டிருக்கிறான் ! எல்லோரையும் காப்பாற்ற அம்மனுக்கு அர்ச்சனை செய்த பஞ்சாட்சரத்துக்கே இன்று கதை முடிந்து விட்டது.**

## எங்கள் கடல் செங்நீராகியது...!

மருமகன் பஞ்சாட்சரத்தின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து வெறியர்கள் சுடுவதைப் பார்த்த புவனேசுவரி, கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

"அவன் அம்மன் கோயில் குருக்கள் பாருங்கோ... அவனைச் சுடாதேயுங்கோ" என்று கெஞ்சியும் பலனில்லாமல் போயிற்று. கணவனை இழந்தவளாய், "அம்மா!" என்று கதறிக்கொண்டே தன் தோளில் சாய்ந்த மகள் ஜெயந்தியைக் கையால் பற்றிப் பிடித்தபடி, வானம் இடியக் கத்தினாள் அவள்.

மாரிகாலக் கொடுங்காற்றில் கடலின் அலைகள் வெறிபிடித்துக் கூத்தாடின. அமைதியான கீரிமலைக் கடற்கரையில், 06.11. 1987 காலை 08 மணிக்கெல்லாம் அந்த வெறிக்கும்பலின் மனித வேட்டை தொடங்கிற்று.

ஜெயந்தியின் தங்கச்சி வசந்தி நடுங்கி ஒடுங்கிப் போனாள். சில்லென்ற குளிர்காற்றில்கூட உடல் வியர்த்துக் கொட்டியது. அவர்களை வளைத்து ஐம்பது இந்தியப்படை முரடர்கள்.

தாயையும் – அந்த இரண்டு பெண்பிள்ளைகளையும், வீட்டுக் குச் செல்லுமாறு ஒரு வெறியன் கொச்சை ஆங்கிலத்தில் கத் தினான்.



அவர்கள் வீடு நோக்கி நடந்தார்கள்.
கூடவே அந்த முரட்டுக் கும்பலும்...

கீரிமலைக் கேணியைத் தெரியாதவர்கள் இல்லை. கேணி யாலேயே கீரிமலைக்குப் புகழ். யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதி களில் இருந்தும் இந்தக் கேணியில் நீராட மக்கள் வருகிறார்கள்.

ஆங்காங்கே நெடிய பனைமரங்கள். ஒரு பக்கம் நீலம் காட்டும் கடல். கீரிமலை அழகான ஊர்.

புவனேசுவரியின் வீடு கடலின் ஓரத்தில் ... கீரிமலையில்தான். செல்வாக்கான குடும்பம். புவனேசுவரி படித்தவள். விதவை. நாற்பத்தெட்டு வயது ஆகிறது. இரண்டு பெண்பிள்ளைகள் – மூத்தவள் ஜெயந்திக்கு 22 வயது. வசந்தி இரண்டு வயது இளையவள். ஒரு மகன் இருக்கிறான் – உடல் ஊனம்... மூளை வளர்ச்சி இல்லை. எதையாவது புலம்பிக்கொண்டிருப்பாள். ஜெயந்திக்கு அண்மையில்தான் திருமணமாகி... அதற்குள்...

பஞ்சாட்சரத்துக்கு அம்மன்கோயிலில் குருக்கள் வேலை. பிள் ளைகள் யாரையாவது படை ஆட்கள் பித்துக்கொண்டு போனால் தாய்மார்கள் அழுது அடித்துக்கொண்டு கோயிலுக்கு ஓடு வார்கள். எத்தனை பூக்களை அம்மனுக்குப் போட்டிருக் கிறான்...! எல்லோரையும் காப்பாற்ற அம்மனுக்கு அர்ச்சனை செய்த பஞ்சாட்சரத்துக்கே இன்று கதை முடிந்துவிட்டது.

ஜெயந்தி அழுதுகொண்டே படைக்கும்பலுக்கு நடுவில் நடந் தாள். புவனேசுவரிக்குத் தலையே வெடித்துவிடும் போல் இருந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நினைவு. 1958 ஆம் ஆண்டு, சிங்கள இனவெறியர்கள் தமிழ்க் குழந்தைகளைக் கொதிக்கும் "தார்ப் பீப்பர்"க்களில் போட்டுக் கொன்றதும், வீடு வீடாகத் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தும் கொடிய சேதிகளாகிக் கொண்டிருந்த போது புவனேசுவரிக்குப் பதினெட்டு வயதுதான்.

வரலாற்றில் தமிழீழத்தின் தன்மான உணர்வைத் தூண்டி விட்ட முதல் நிகழ்வுள் அவை.

கொடுமைக்கு வேர் முளைக்கத் தொடங்கிய காலம்.

நன்றாக நினைவிருக்கிறது.

சிறீலங்காவின் தலைநகரான கொழும்புக்குத் தெற்கே பாணந்துறை என்ற சிங்கள ஊரில், ஒரு பழைய சைவக்கோயிலின் குருக்களைச் சிங்கள வெறியர்கள் மூலஸ்தானத்தில் வைத்தே எண்ணெய் ஊற்றி, உயிரோடு எரித்துச் சாம்பலாக்கினார்கள்.

“கடவுளே இல்லையா?” என்று அப்போது புவனேசுவரி வீட்டில் எல்லோருமே பேசிக்கொண்டது இன்றும் அவள் நினைவில் அழியவில்லை.

தீ வைத்தவர்கள் – பௌத்த சிங்கள வெறியர்கள்.

ஆனால் –

முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு இன்று… இந்து சமயத்தின் பாதுகாவலர்கள் அல்லவா அம்மன் கோயில் குருக்களைப் பிணமாக்கிப் போட்டிருக்கிறார்கள்.

புவனேசுவரியின் நெஞ்சில் மருமகன் பஞ்சாட்சரத்தின் நினைவு அலையாப் புரண்டது…

இந்தியாவுக்குப் போகவேண்டும் என்று அவனுக்குச் சரியான ஆசை. வேதங்களையும், உபநிடதங்களையும் ஆக்கிய மகான்கள் – நாயன்மார்கள் – ஆழ்வார்கள், ஆதிசங்கரர் பகவான் இராமகிருஷ்ணர் – விவேகானந்தர் – ரமண மகரிஷி ஆகியோரை எல்லாம் ஈன்ற இந்து மத்தின் அந்தப் புனித மண்ணை மிதித்துவிடவேண்டும் என்று, ஆவலாக இருந்தான்…

ஆனால் –

அந்த “இந்து மகா பூமி”யே இன்று அவனைக் கொன்றுவிட்டது!

பாணந்துறைக் கோயில் குருக்களை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கொன்ற சிங்கள பௌத்த வெறியர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்ற வந்தவர்களாம் – பஞ்சாட்சரக் குருக்களைக் கொன்ற பாரதத்தின் இந்துமதப் புண்ணியவான்கள்…!

புவனேசுவரி பற்களைக் கடித்துக்கொண்டாள்.

புவனேசுவரியின் கூந்தலைப் பிடித்து இழுத்து, வீட்டினுள்ளே முரட்டுத்தனமாகத் தள்ளினான் ஓர் இரக்கமற்ற தடியன்.

இரண்டு பெண்களும் நடுங்கிக்கொண்டே பின்னால் போனார்கள்.

வாசலில் மன வளர்ச்சியற்ற அந்த ஊனப்பிள்ளை கைகளைத் தட்டித் தன்பாட்டில் சிரிந்துக்கொண்டிருந்தான். அந்த அப்பாவியை ஒரு “விலங்கு” இரும்புச் சப்பாத்தால் உதைத்துக் கீழே தள்ளிற்று.

“நகைகளை எங்கே வைத்திருக்கிறாய் – எடு!”

அரைகுறை ஆங்கிலத்தில் புவனேசுவரியை நோக்கி ஓர் அதட்டல். நல்ல ஆங்கிலத்திலேயே அவள் பதில் சொன்னாள்.

“நாங்கள் பெரிய பணக்காரர்களல்ல, எங்களிடம் அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை.

அவர்கள் “ஓ!” என்று சிரித்தார்கள்.

வீடு அமளிதுமளி ஆயிற்று. அலுமாரி – பெட்டி – மூட்டை முடிச்சுகளெல்லாம் உடைந்து, கிழிந்து சிதறின.

புனித இந்தியப்படையின் பைகளில் பாதி நிரம் பிற்று…

ஊரில் எப்போதுமே புவனேசுவரிக்கு மரியாதை உண்டு, செல்வாக்கு உண்டு. கணவன் உயிரோடு இருந்தபோது – ஜெயந்தியும் வசந்தியும் சின்னஞ் சிறிசுகளாக இருந்த காலத்தில் – சேர்த்து வைத்ததில் ஏதோ கொஞ்சம் வசதியும் உண்டு.

கணவன் இறந்த பின்பு காலத்தை எப்படியோ ஓட்டிவிட்டாள். புவனேசுவரியின் வீடு ஓரளவு மகிழ்ச்சியாகவே இருந்தது.

சிங்கள வெறியர்கள் காலத்தில் பலாலி முகாமிலிருந்து வீசப்படும் “ஷெல்” குண்டுகளின் இடி ஓசை அடிக்கடி கேட்கும்.

ஆனால் –

சிங்களப் படை நகருக்குள் நுழைய விடுதலைப் புலிகள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை யாழ்ப்பாண மக்கள் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்ததால், யாரும், அந்த ஓசையைப் பொருட்படுத்துவதில்லை.

பக்கத்து வீட்டுத் தம்பித்துரை சேதி சேதியாகக் கொண்டு வருவார். நல்ல மனிதர். எல்லோரும் அவரை வளைத்து உட்கார்ந்துகொள்வார்கள். வீடு நிறைந்தாற் போல் இருக்கும்.

தம்பித்துரை – தம்பித்துரையின் மனைவி சிறீதேவி – பெண்பிள்ளைகள் சிவாஜினி, சுபாஜினி, இரண்டு பெடியன்கள் தவ





நேசன், கோணேஸ், அவர்களுடைய கைக்குழந்தை எல்லோரையுமே புவனேசுவரி வீட்டில் பார்க்கலாம்.

இரண்டு குடும்பங்களும் ஒரேவீடு மாதிரித்தான்.

ஜெயந்தி அக்காவோடும், வசந்தி அக்காவோடும் தம்பித்துரையின் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்.

புவனேசுவரியும், சிறீதேவியும் முன்கூடத்தில் பேசிக்கொண்டிருப்பார்கள். தம்பித்துரையின் கைக்குழந்தை ஊனப் பிள்ளைக்குப் பக்கத்தில் போய் விளையாடும். கோணேசும், தவநேசனும் வசந்தி அக்காவோடு கீரிமலைக் கடற்கரையைச் சுற்றி வருவார்கள்…

பஞ்சாட்சரம் அம்மன் கோயில் – பூசை முடிந்து வீட்டுக்கு வந்தால், ஜெயந்திக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து விடுவான். கீரையை அரிந்துகொண்டே அவனோடு ஜெயந்தி இனிக்க இனிக்கப் பேசுவது, புவனேசுவரியின் மனதை – நிறைக்கும்.

“நீ கீரையை வெட்டுறதைப் பார்த்தாலே சாப்பிட்ட மாதிரி இருக்குது ஜெயந்தி” என்பான் பஞ்சாட்சரம்.

“சுலோகம் போடுற வேலையை அம்மனோட வச்சுக் கொள்ளுங்கோ…” என்று கூறிக் கிளுக்கென்று சிரிப்பாள் ஜெயந்தி.

மகிழ்ச்சியான காலங்கள்.

இந்தியப்படை நுழைகின்ற வரை…

06.11.1988 காலையில் தான், புவனேசுவரியின் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு அவர்கள் உள்ளே பாய்ந்தார்கள்.

புவனேசுவரியையும் – இரண்டு பெண்களையும் – பஞ்சாட்சரத்தையும் அந்தக் கும்பல் கடற்கரைக்கு இழுத்துக்கொண்டு போயிற்று.

கடற்கரையில் –

பஞ்சாட்சரத்தின் உயிரை வாங்கிவிட்டு, புவனேசுவரியின் வீட்டைக் கொள்ளையிடத் திரும்பவும் அவளையும் பிள்ளைகளையும் துப்பாக்கி முனையில் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

இப்போது –

சுருட்டுவதையெல்லாம் சுருட்டி ஆயிற்று.

வெளியே தெருவில் “ஜீப்” வண்டியில் பறந்த வெள்ளைக் கொடியைக் கழற்றி – உள்ளே எதையோ மூடிமறைத்து முடிச்சுப் போட்டான் ஒருவன்.

ஒரு விதவையின் வீட்டை மொட்டை அடித்து முடித்த திருப்தி.

“இனி, கடற்கரைக்குப் போகலாம்…” என்று மீண்டும் கொச்சை ஆங்கிலத்தில் கத்திக்கொண்டே புவனேசுவரியின் தோளில் ஓங்கித் துப்பாக்கியால் அடித்தான் ஒரு முரட்டு ஆசாமி.

நடுங்கிக்கொண்டே கடற்கரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள்…

கடற்கரை நெருங்க நெருங்க – பஞ்சாட்சரம் சுருண்டு கிடப்பது தூரத்தில் தெரியத் தெரிய – ஜெயந்தி தாயின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு தேம்பினாள். சற்றுத் தள்ளி வேறு யாரோ விழுந்து கிடப்பது போலத் தோன்றியது. கூடிய எண்ணிக்கையில் இந்தியப் படைக்கும்பல் கடற்கரையில் குவிந்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பக்கத்தில் வந்து பார்த்தபோதுதான் தெரிந்தது… அது … அது தம்பித்துரையின் பிணம்…

சிறீதேவி கைக்குழந்தையோடு வெறி பிடித்தவளாய்க் கதறிக்கொண்டிருந்தாள். சிவாஜினியும், சுபாஜினியும் “அப்பா, அப்பா!” என்று புழுவாய்த் துடிக்கிறார்கள். கோணேசும், தவனேசனும் தம்பித்துரையின் கையைப் பிடித்து இழுப்பதும்… அழுவதுமாய்…

ஓ! எத்தனை கொடிய உலகம்! ஹட்லர் இன்னும் உயிரோடு தான் இருக்கிறானா! நீதி எங்கே? வெறித்தனத்துக்கு எல்லையே இல்லையா?

தன் கண்களுக்கு முன்னாலேயே ஜெயந்தியையும், வசந்தியையும் முரட்டுத்தனமாகச் சேலை களைந்து வெறியர்கள் நிர்வாணமாக்கிய போதும் – தாயாக அல்ல ஒரு குழந்தையாக முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குலுங்கி அழுதாள் புவனேசுவரி.

ஒரு முரடனின் இரும்புக் கைகள் ஜெயந்தியை ஆவேசமாகப் பற்றி இழுத்து எறிந்தன்.

“போடி, உன் புருஷனைப் போய்த் தழுவு.”

அதற்குள்…

ஜெயந்தியின் இரண்டு தொடைகளுக்கும் நடுவில் துப்பாக்கியை வைத்து இன்னொரு பாவி, தமிழனின் மானத்தையே சுடுவது போல…

பிணமாய்ச் சுருண்ட ஜெயந்தியின் மேல், “அக்கா” என்று கதறிக்கொண்டே ஓடிப்போய் விழுந்தாள் வசந்தி.

அவளுக்கும் அதே இடத்தில் துப்பாக்கி குண்டுகள்…

வசந்தியின் இரத்தம் சீறிப்பாய்ந்து புவனேசுவரியின் நெஞ்சில் அடித்தது. சின்னக் குழந்தையாக இருந்தபோது எந்த முலைகளால் அந்தப் பிள்ளைக்குப் பாலூட்டி இரத்தம் பாய்ச்சினாளோ – அதே இரத்தம் – இப்போது இவள் முலையை இடித்து, “ஏனம்மா என்னைத் தமிழச்சியாக வளர்த்தாய்?” என்று நியாயம் கேட்கிறது.

புவனேசுவரி மயங்கி விழுந்தாள்.

கீரிமலைக் கடல் ஆவேசமாக இரைந்து கத்தியது. கரையின் நீள அலைகள் பிணங்கள் நனைத்து மீள்கின்றன… தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள்…

கண்களை மெதுவாகத் திறந்தபோது, அந்த மனித விலங்குகள் சிறீதேவியைச் சுட்டுப் பிணமாக வீழ்த்துவதையும் – அவள் கையிலிருந்து விழுந்த பிஞ்சுக் குழந்தை அலைக்கு நடுவில் “அம்மா…” என்று கத்துவதையும் – புவனேசுவரி கண்டாள்.

அடுத்த நொடியில் –

ஜெயந்தியும், வசந்தியும் கொல்லப்பட்டதுபோலவே தம்பித்துரையின் இரு பெண்பிள்ளைகளும் அதேவிதமாக நிர்வாணமாக்கப்பட்டு – அதேவிதமாக… எத்தனை கொடிய நிகழ்வுகள்..!

இரண்டு துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டன… புவனேசுவரி நிலத்தில் கிடந்தபடியே ஓரக் கண்களால் பார்த்தாள்… ஒன்று கோணேஸ் – அடுத்தது தவநேசன்.

புவனேசுவரி சத்தவள் போலவே படுத்துக் கிடந்தாள். தன்னை இந்தியப்படைக் கும்பல் மறந்துவிட்டது என்பதை அவளால் உணரமுடிந்தது. மணலில் ஏறும் கடல் அலையின் அசைவிக்கு ஏற்பத் தலையை ஆட்டியபடி அன்னையும் ஒரு சடலம் போலவே ஆக்கிக்கொண்டாள் அவள்.

காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அலைகளின் வெறித்தனமான இரைச்சாலும் – இடையிடையே அந்தப் பிஞ்சுக் குழந்தையின் ஓலமும் கேட்டது. கொஞ்ச நேரத்தின் பின்பு…

மீண்டும் ஒரு துப்பாக்கி வேட்டோசை, குழந்தையின் அழுகை நின்றது. அதேவேளை அந்தப் பெரிய மனிதர்களின் சிரிப்பொலி… “ஜீப்” வண்டிகள், “ட்றக்குகள்” முதலியவற்றின் கொடிய இரைச்சல்… அவர்கள் கடற்கரையை விட்டுச் செல்கிறார்கள்.

புவனேசுவரி இரவுவரை அப்படியே கிடந்தாள்…

அவளைத்தாண்டி – அந்தப் பிணங்களை நோக்கி – நண்டுகள் ஊர்கின்றன…

தமிழீழம் – சித்திரை 1989

உலக வணிகம் ULAGA VANIKAM

2024



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# ஒரு பொது நினைவுச்சின்னத்தை ஏன் உருவாக்க முடியாது?

03.06.2023


சுதந்திரப் பூங்கா–Freedom Park– தென்னாபிரிக்கா

போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது. அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காதுதோல்வியையும் பிரதிபலிக்காது. குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலைமாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதி வாதங்களின்போது ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலைமாற்றம் ஏற்படவில்லை என்பதே அது. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவுதான். ஆயுத மோதல்களுக்கு காரணம் இன ஒடுக்குமுறைதான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும்பொழுதே இலங்கைத் தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்கு பிந்திய, அல்லது பிணக்குக்கு பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை

உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகிவிட்டது. அதனால்தான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது இனக் ஒடுக்குமுறையின் ஒரு பகுதிதான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது, தமிழ்மக்களின் தேசியா இருப்பை அழிப்பதுதான் இன ஒடுக்குமுறையின் பிரதான இலக்கு.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவதுபோல 2009க்கு பின்னரான காலகட்டத்தை பிணக்கிற்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்க முடியாது. அதுபோலவே அரசுசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பதுபோல போருக்கு பின்னரான காலகட்டம் என்றும் அழைக்க முடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப்போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல்களின்போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலையங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத் தீவின் மொத்தப் படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில்தான் உண்டு. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை தயார் படுத்தி வருகின்றதா?

அதுதான் பிரச்சினையே.அரசாங்கம் தமிழ்மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால்தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு காலகட்டம் என்றுதான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.

அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர் நீத்த எல்லாருக்குமாக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலைமாற்றம் ஏற்படும் பொழுதுதான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டுவரப்படுவதுதான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான்.

எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலை பல்மதச் சூழலை பல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை எல்லாருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள். படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்கு பின்னரான ஒரு பொது நினைவுச் சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும் இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாகியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னங்களாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம். ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழுந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கிவிடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக்கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும்பொழுது அங்கெ இனப்படுகொலை என்ற சுட்டிப்பான அம்சம் போர் என்ற பொதுவான அம்சத்தில் பின்தள்ளப்பட்டுவிடும். இது தமிழ் மக்களைப் பொறுத்வரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால்தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால்தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் போராட வந்து அதில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ்மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளை கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் இப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளை கண்டுபிடிக்கும் அளவுக்கு தமிழ்த்தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேற்றான் செழிப்படைய வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச் சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச் சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேடியாக நினைவுச் சின்னத்தை அமைப்பதா என்பதுதான்.

அவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இதுபோன்ற பொது நினைவு சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந்நினைவு சின்னம் அரூபமானது. அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது. ஒரு இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல. அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச் சினத்தை சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.

அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் “சுதந்திரப் பூங்காவில்” அவ்வாறான ஒரு சின்னம் உண்டு. அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தந்த பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப்பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவு வளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது. அதைவிட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது பண்புருமாற்றத்துக்கு –Transformation– தலைமை தாங்கியது. நிலைமாறு கால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக் குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா ?

நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலைமாற்றம் அல்லது பண்புருமாற்றம் ஏற்படவில்லை. அது, மூன்று இனங்களுக்கிடையில் மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத்தீவும் தயாராக இல்லை, தமிழரசியலும் தயாராக இல்லை.

நன்றி: நிலாந்தன்

# கரும்புலிகள் நாள்

## யூலை 05



**தேசத்தின் விடியலுக்காய் உயிர்க்கொடை தந்தவரே**
**ஒளி வீசும் உம் பாதங்கள் என்றென்றும் உயிர் தரும்**

**Oh you who sacrificed you precious lives**
**For our country's dawn of freedom**

சாவுக்கு தேதி குறிக்கும் சரித்திரங்கள்
கந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனங்கள்
வீதியுலாவுக்காக வெளியில் வராத விக்கிரகங்கள்
உயிர்மூச்சை ஊதிவிடும் உயிராயுதங்கள்